
# சுதந்தரமா!

## கி. வா. ஜகந்நாதன்



அமுத நிலையம் லிமிடெட்

# சுதந்தரமா!

(கட்டுரைகள்)

கி. வா. ஜகந்நாதன்

அமுத நிலையம் லிமிடெட்
தேனாம்பேட்டை :: சென்னை - 18

முதற் பதிப்பு, அக்டோபர், 1953
அமுதம்—73
உரிமை பதிவு

விலை. ரூ. 1 - 2

நாஷனல் ஆர்ட் பிரஸ்
தேனாம்பேட்டை, சென்னை - 18

# முகவுரை

இந்தப் புத்தகத்தில் உள்ள கட்டுரைகள் யாவும் பொழுது போக்குக் கட்டுரைகள். பல பல சமயங்களில் எழுதப் பெற்றவை. ஹாஸ்யச் சுவை இருக்க வேண்டும் என்று திட்டமிட்டவை அல்ல. ஆனாலும் அதன் மணம் இருக்கத் தான் இருக்கும். நம்முடைய வாழ்வில் நம்மை நாமே பார்த்து நகைக்கும் பல சந்தர்ப்பங்கள் அமைகின்றன. தினந்தோறும் பிச்சை வாங்கி உயிர் வாழ்கிறவனும் பிறருடைய அறியாமையைக் கண்டோ, தன்னுடைய அறியாமையை உணர்ந்தோ சிரிக்கிறான். நோயில் விழுந்தவன்கூட மெல்லச் சிரிக்கும் பேச்சோ செயலோ நிகழ்கின்றன. சில நிகழ்ச்சிகள் நடைபெறும் போதே நமக்கு நகைப்பு உண்டாகிறது. வேறு நிகழ்ச்சிகள் நடந்து பல காலமான பிறகு இப்போது நினைத்துப் பார்க்கும்போது சிரிப்பு உண்டாகிறது. இடி இடியென்று சிரித்து வயிற்று வலியை உண்டாக்கும் பேச்சையும் நிகழ்ச்சியையுமே 'ஹாஸ்ய'மாக நாம் நினைக்கிறோம். ஆனால் மனத்துக்குள்ளே சிரிக்கும்படி அமைவதுதான் உயர்ந்த ஹாஸ்யம் என்று சொல்வார்கள். உலக நிகழ்ச்சிகளை எண்ண எண்ண மனத்துக்குள்ளே சிரித்துக்கொண்டே இருக்கலாம். துன்பம் வந்தால் கூடத் தனியே நின்று அதைப் பார்த்து, அதற்குரிய மூல காரணங்களை எண்ணி உள்ளுக்குள்ளே நகைக்க வகையுண்டு. அதனால்தான் திருவள்ளுவர்,

"இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில்"

என்று சொல்லியிருப்பார் என்று தோற்றுகிறது.

இந்தக் கட்டுரைகளில் "நான்" அதிகமாக வருகிறதை ரஸிகர்கள் அகங்காரத்தின் மலர்ச்சி என்று நினைக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன். சொந்த அநுபவத்திலிருந்து எழுகிற உணர்ச்சிக்கு வீறு அதிகம். என் வாழ்க்கையில் நான் அறிந்தவற்றைச் சொல்வதற்கு யாருடைய இசைவையும் கேட்க வேண்டாம். அது நடந்ததா, இல்லையா என்று சரி பார்க்க வேண்டிய அவசியமும் இல்லை. இதிலுள்ள கட்டுரைகளில் வரும் அநுபவங்களிற் பல, அன்பர்களுடைய வாழ்க்கையிலும் ஏற்பட்டிருக்கலாம்.

குடும்ப வாழ்க்கையினிடையே நிகழும் சம்பவங்கள் பல. அவற்றை நினைத்தாலே போதும், மனிதன் மென்மையான நகைச்சுவையை அநுபவிக்கலாம். காலஞ் சென்ற எஸ். வி. வி. அவர்களுடைய கட்டுரைகளைப் படித்தவர்களுக்கு இந்த உண்மை நன்கு புலப்படும்.

"இவற்றில் அப்படிப் பிரமாதமாக ஹாஸ்யம் ஒன்றும் பொங்கித் ததும்பவில்லையே?" என்று கேட்கும் நண்பர்களுக்கு, "ஹாஸ்யச் சுவையை நினைத்து இவற்றை எழுதவில்லை" என்று மறுபடியும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சில கட்டுரைகளில் இலக்கியத் தொடர்புள்ள செய்திகள் வரும். சட்டியில் உள்ள சரக்கு எப்படியும் அகப்பையில் வராமலா போகும்? இலக்கியத்தில் உலாவுவதையே இன்பமாகக் கருதுகிறவன் நான். எங்கே போனாலும் எதைச் சொன்னாலும் எதை எழுதினாலும் ஏதாவது ஒரு புலவருடைய கவி முன்னே வந்து நிற்கிறது. நான் என்ன செய்வேன்!

"நான்" இந்த முகவுரையிலும் வந்து விட்டது. உண்மையில் நூலைவிட முகவுரைதானே "நான்" வரவேண்டிய இடம்? கடவுளைப் பற்றி எழுதினாலும் காய்கறியைப் பற்றி எழுதினா

லும், "நான் இதை எழுதுவதற்கு......" என்று தனியே தன்னைப்பற்றிச் சொல்வதற்காகவே முகவுரை இருக்கிறது. 'நான்' என்ற உணர்வையே இழந்தவர்கள் புத்தகம் எழுதினால் பிறரைக் கொண்டு முகவுரை எழுதச் சொல்லலாம். அதில் "நான்" இராது. "இவர்" இருக்கும். ஆனால் அவர்கள் எதற்காகப் புத்தகம் எழுதப் போகிறார்கள்?

'கர்ணன் கலைஞன் ஆனது' என்பது நான் எழுதிய கதை ஒன்று எவ்வாறு கருவுற்று உருப் பெற்று விளைந்தது என்பதைச் சொல்லும் கதை. அது கலைமகளில் வெளியானது. 'சுதந்தரமா', 'அடையாளம்' என்ற இரண்டும் 'தியாகி'யில் வெளியானவை. 'வைகறைத் துயிலெழு', 'நான் விரும்பும் நோய்', 'படாத காலிலும் படும்' என்பவை சுதேசமித்திரன் வாரப் பதிப்பிலும், 'உணவுக்கலை' என்பது நாடோடியிலும், 'பேனாப் பைத்தியம்' ஆனந்தவிகடன் தீபாவளி மலரிலும், 'புலவர் போற்றிய பொடி' தந்தியிலும், 'ரஸிகர்கள்' ரஸிகனிலும் வந்தவை. மற்றக் கட்டுரைகள் புதியன.

மனிதன் எப்போதுமே ஒரு வேலையையே செய்துகொண்டிருந்தால் அவனுக்கும், மற்றவர்களுக்கும் சலிப்புத் தட்டிவிடும். நடுவிலே சிறிது மாற்றமும் வேண்டும். அதனால்தான் இப்படியும் சில துறைகளில் எழுதத் தொடங்கினேன். என் எழுத்துக்கு உரம் தரும் தமிழர்களின் அன்புக்கு வணக்கம்.

மயிலாப்பூர்,
2—10—53

கி. வா. ஜகந்நாதன்

# உள்ளே


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சுதந்தரமா ! | 1 |
| 2. | வைகறைத் துயில் எழு | 7 |
| 3. | உணவுக் கலை | 14 |
| 4. | பேனாப் பைத்தியம் | 22 |
| 5. | நான் விரும்பும் நோய் | 28 |
| 6. | தன் கையே | 32 |
| 7. | புலவர் போற்றிய பொடி | 38 |
| 8. | அடையாளம் | 43 |
| 9. | படாத காலிலும் படும் | 47 |
| 10. | கர்ணன் கலைஞன் ஆனது | 52 |
| 11. | விளம்பர ஆசை | 64 |
| 12. | ரஸிகர்கள் | 70 |
| 13. | குழந்தை வளர்ப்பு | 76 |
| 14. | அவைத்தலைவர் | 80 |
| 15. | வீட்டுக் கணக்கு | 85 |
| 16. | எங்கள் ரேடியோ | 97 |

## சுதந்தரமா !

தம்பி, ஏன் அப்படிப் பார்க்கிறாய்? இந்த ஈரத்தில் அலைந்தால் உன் உடம்புக்கு ஆகாதென்றுதான் சொல்கிறேன். வழியில் போகிறவர்கள் மேலே அழுக்குத் தண்ணீர் தெளிக்கும். அவர்களுடைய ஆடையில் தெறித்தால் அது வீணாகிவிடும்.

உனக்கு விளையாட வேறு இடம் இல்லையா? மழை பெய்து ரோட்டுக்குப் பக்கத்தில் தேங்கியிருக்கும் தண்ணீர் தானா அகப்பட்டது? எத்தனையோ பிள்ளைகள் பொழுதை நல்ல படியாகப் போக்குகிறார்களே! நீ இந்தமாதிரி பொழுதை வீணடிப்பதோடு உனக்கும் மற்றவர்களுக்கும் தொல்லையை உண்டாக்கிக் கொள்கிறாயே!

தேங்கியிருக்கும் ஜலத்தில் உனக்கு இத்தனை ஆசை எதற்கு? அந்த ஆசை வேறு வகையான பிராணிகளுக்கு உரியதல்லவா? உன் தாய் தகப்பனார் உன்னை மனிதக் குழந்தையாக வளர்க்கிறார்களே ஒழிய, வராகக் குட்டியாகக் கொஞ்சங்கூட எண்ணியிருக்க மாட்டார்களே. கங்கை, யமுனை, காவேரி என்று புண்ணிய தீர்த்தங்களுக்குப் போய் நீராடிவிட்டு வருவதைப் பெரிய புண்ணிய காரியமாக எண்ணும் இந்தத் தேசத்தில் நீ பிறந்திருக்கிறாய். இந்தத் தேக்கத் தண்ணீரில் வந்து அலைகிறாயே! இந்தத் தீர்த்தந்தானா உனக்கு அகப்பட்டது? உனக்குப் புத்தியில்லையென்று சிலர் நினைக்கலாம். உன்னை இப்படி வளர்த்தவர்களுக்குத்தான் புத்தி எங்கே போயிற்றென்று சிலர் கேட்பார்களே!

கொசு மொய்க்கும் இந்தப் பள்ளத்தில் உனக்கு எப்படியப்பா இத்தனை மோகம் வந்தது? போன ஜன்மத்தில் ஏற்பட்ட பழக்கங்களிற் சில இந்த ஜன்மத்தில் வந்தடையும் என்று சொல்கிறார்களே; அப்படி உனக்குப் போன ஜன்மத்தில் கொசுக்களோடு உறவு இருக்குமோ?

நல்ல ரோடு இருக்க அதிலேயாவது ஓடிப் பழகினால் உன் காலுக்குப் பலம். அதை விட்டு விட்டு, நேர் பாதையை வேண்டுமென்றே விட்டு விட்டு இந்தப் பள்ளத்தில் உள்ள தண்ணீரைக் கலக்கிக் 'குட்டை குழப்பு' கிறாயே! நேர்பாதையில் நடக்காவிட்டாலும் போகிறது; குட்டை குழப்பாமல் இருந்தால் போதும், தம்பி. அரசியலிலும் மற்றச் சமுதாய விஷயங்களிலும் நெடுங்காலமாகத் தேங்கிக் கிடக்கும் தண்ணீரைக் குழப்புகிற மனிதரைப்போல இருக்கிறாயே! ஓகோ, எனக்குப் புரிகிறது உன் யோசனை. விளையும் பயிர் முளையிலே என்பதை நிரூபிக்கிறாயோ? பிற்காலத்தில் உன் வாழ்க்கையில் குட்டை குழப்பி வெற்றி யடையும் மார்க்கத்துக்கு இந்தத் திறந்த வெளிப் பள்ளிக்கூடத்தில் பயிற்சி பெறுகிறாயோ! சபாஷ்! நல்ல காரியம் செய்தாய்!

அப்படித் தான் பழக வேண்டும். தெளிவான நீரைக் கலக்க வேண்டும். ஒருவரும் ஏவாமலே, விரும்பாமலே, சர்வ சுதந்தரமாகத் துணிந்து புகுந்து கொள்ள வேண்டும். நீ குழப்புகிற குழப்பத்தில் வழியில் போகிறவர்களும் பயன்பெற வேண்டும். உன் விளையாட்டின் விளைவாகச் சேற்று நீரை ஆடையில் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஒரு காரியம் செய்; உன் வேலைக்கு மிகவும் பொருத்தமான விஷயம். கொஞ்சம் கற்களைக் கொண்டுவந்து போட்டுக் கொள். யாராவது வந்தால் உன்னை மிரட்டாமல் இருக்க வேண்டுமல்லவா? அந்தக் கல்லைக் கொண்டு அற்புத சாமர்த்தியத்தைக் காட்டலாம். இந்தக் கொசுக்

கூட்டத்தை ஒழிக்கும் தர்மகைங்கரியத்தை ஏற்றுக்கொள். கல்லை ஒவ்வொன்ருக எறிந்து ஒவ்வொரு கொசுவாகச் சம்ஹாரம் செய்துவிடு.

அப்படிக் கல்லை எறியும்போது போகிறவர் மேலே படுமென்று சொல்லுகிருய்? இப்போது அழுக்குத் தண்ணீர் படுகிறது; அப்போது கல் படுகிறது. ஆனல் ஒரு பெரிய வித்தியாசம் இருக்கிறது, பார். இப்போது உன் கால், துணி எல்லாம் அழுக்காகின்றன. அப்போது நீ பேசாமல் பள்ளத்தின் ஓரத்தில் உட்கார்ந்துகொண்டு உன் கொசு வேட்டையை ஆரம்பிக்கலாம்.

உன் இஷ்டம் போல், ஒன்று இரண்டு என்று எண்ணிக் கொண்டே கல்லைக் கொசுவின்மேல் வீசலாம். கொசுவினல் எத்தனை உபத்திரவம் என்பதை நீ படித்திருப்பாயே. படிக்காவிட்டாலும் நான் சொல்கிறேன் கேள். கொசுவினல் மலேரியா ஜுரம் பரவுகிறது; கை கால் தடித்துப் போகின்றன; உடம்பு வீங்குகிறது; சாப்பாடு அசுத்தமாகிறது; தூக்கம் கெட்டுப் போகிறது. ஆகையால் எந்த ஊழியன் கொசுவைத் தொலைக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிருனே அவன் என்ன என்ன அற்புதங்களைச் செய்யும் சித்தன் ஆகி விடுகிருன் தெரியுமா? கொசுவையா அவன் அழிக்கிருன்? மலேரியா ஜுரத்தை அழிக்கிருன். உடம்பு வீங்குவதைப் போக்குகிருன். கை கால் தடிப்பதிலிருந்து மனித சமுதாயத்தைக் காப்பாற்றுகிருன். சாப்பாட்டில் கொசு பறந்து அசுத்தமாக்காமல் காப்பாற்றிச் சமுதாயத்தின் உணவுப் பாதுகாப்புக்கு உதவுகிருன். சுகமாக யாவரும் தூங்குவதற்கு வழி தேடுகிருன். இத்தனை காரியங்களையும் செய்வதைக் காட்டிலும் ஆக்க வேலை, நிர்மாணத்திட்டம், வேறு எங்கே இருக்கப் போகிறது? மகாத்மா காந்தி அடிகள் பாடுபட்டு வாங்கித் தந்தார் சுதந்தரத்தை. அந்தச் சுதந்தர வாழ்வில் அந்தப் பெருமான்

சொல்லித்தந்த, தாமே செய்து காட்டிய, நிர்மாணத் திட்டத்தை நாம் மேற் கொள்ள வேண்டாமா ?

நீ இப்போது சுதந்தரத்தை மாத்திரம் பயன்படுத்திக் கொள்கிறாய். உன் மனத்துக்கு உகந்தபடி விளையாடுகிறாய். நாலுபேர் நடக்கும் பாதையில் சுதந்தரமாகப் பெய்த மழைத் தண்ணீர் சுதந்தரமான பள்ளத்தில் சுதந்தரமாகத் தேங்கி நிற்கிறது. அதில் இறங்கி விளையாடும் சுதந்தரத்தை நீ உபயோகப்படுத்திக்கொள்வதை இப்போதுதான் உணர்கிறேன். என்ன இருந்தாலும் நான் அடிமை வாழ்விலே பலகாலம் வாழ்ந்தவன், பார். அந்த வாசனை விடுமா? இன்னும் அந்தப் பழம் பசலிக் கதையையேதான் பேசிக்கொண்டிருப்பேன். சுதந்தரம் வருவதற்குப் பாடுபட்டவர்கள், அதை நாம் அநுபவிக்கத் தானே ஆத்ம சமர்ப்பணம் செய்தார்கள் ? அநுபவிக்கக் கூசுகிறவர்கள் இனிமேல் சுதந்தர இந்தியாவில் வாழத் தகுதி இல்லாதவர்கள் !

உன்னுடைய சுதந்தர உணர்ச்சியைப் பாராட்டுகிறேன். அதோடுகூட நிர்மாண வேலையையும் செய் என்று தான் சொல்கிறேன். கொசுவைச் சங்காரம் செய்யும் வேலையிலே கொஞ்சம் சிரத்தைகொள். கல்லை ஒவ்வொன்றாக வீசு. பாதையில் போகிறவர்கள் ஏதாவது சொல்வார்கள். நான் சொல்லவில்லையா ? அவர்கள் பேச்சைக் காதில் வாங்கிக்கொள்ளாதே. அவர்களெல்லாம் பழைய, மட்கிப்போய் வறண்டுபோன குருட்டு நம்பிக்கைகளின் கூட்டத்திலே நெளிந்துவந்த கர்நாடக மண்ணாங்கட்டிகள். அவர் பேச்சைச் சட்டை செய்தால் சுதந்தரம் வீணாகிவிடும். நீ சுதந்தரமாக உன் கையையும் கண்ணையும் உபயோகப் படுத்துவதைத் தடுப்பவர் யார்? தடுப்பது நியாயமா? அது சுதந்தரத்தை அடக்குவது ஆகாதா ?. இந்த அடக்குமுறை தர்பார் 1947-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் 14-ஆம்

தேதியோடு கவிழ்ந்துவிட்டது. இனிமேல் அப்படியெல்லாம் பூச்சாண்டி காட்டமுடியாது.

ஆம்; உன் இஷ்டம்போல் ஜமாய்! கொசுவைக் கண்ணுலே காண்பதற்கு உனக்குச் சுதந்தரம் இல்லையா? அதைத் தொலைக்க வேண்டுமென்று சங்கற்பம் செய்து கொள்ளச் சுதந்தரம் இல்லையா? அந்தச் சங்கற்பத்தைச் செய்கையில் காட்ட உனக்குச் சுதந்தரம் இல்லையா? மற்றவர்கள் உனக்கு உதவி செய்யாமல் இருக்கிறுர்கள்; நீ அவர்கள் போக்கைத் தடுத்து எனக்கு உதவி செய்யத்தான் வேண்டுமென்று சண்டித்தனம் செய்கிருயா? அப்படி ஒன்றும் இல்லையே! அவர்கள் குசாலாகப் போகிற வழியே போகட்டுமென்று அவர்கள் நடக்கும் சுதந்தரத்தை அநுபவிக்கும்படி செய்கிருய். அவர்களுக்கும் சுதந்தரம் அளித்து நீயும் சுதந்தரத்தைப் பயன்படுத்திக் கொள்கிருய்.

அதோடு மற்றெரு விஷயமும் ஞாபகத்துக்கு வருகிறது. நீ கல் வீசப் பழகிக்கொள்வது தேசத்துக்கே ஒரு முக்கியமான பலம். சுதந்தர இந்தியாவில் சுதந்தரத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு மகத்தானது. அந்தப் பொறுப்பை நிர்வகிப்பது மிகவும் கடினமான காரியம். நம்முடைய விரோதிகள் எப்பொழுதடா அப்பா இதை லபக்கென்று வாயில் போட்டுக்கொள்ளலாமென்று காத்துக்கொண்டிருக்கிறுர்கள். அங்கங்கே விஷமத்தை மூட்டிக்கொண்டு வருகிறுர்கள். அவர்களுடைய தொல்லைகளிலிருந்து இந்தியா தேசம் பாதுகாப்பை அடையவேண்டும். காந்திமகான் கரடியாகக் கத்தினுலும் நாம் ராணுவச் செலவு பண்ணத்தான் வேண்டுமென்று தலைவர்கள் அப்பொழுதே சொன்னுர்கள். இப்போது இந்தியாவின் படைப்பலத்தை அதிகப்படுத்துவதிலே கண்ணுக இருக்கிறுர்கள். இளைஞர்கள் யாவரும் படைக்கலப் பயிற்சி பெறவேண்டுமென்று சொல்கிறுர்கள். அடிமை இந்தியாவில் பிள்ளைகள் எல்லாம்

நடைப்பிணமாக உருவாரமாக வாழ்ந்தார்கள் இனிமேல் அப்படி இருக்கக்கூடாது. சுதந்தர ஜீவன்பெற்ற இந்தியாவின் ஒவ்வொரு நாடியும் சுறுசுறுப்பாகத் துடிக்கவேண்டும். இளைஞர்கள் உள்ளம் துடிக்கவேண்டும். அவர்களுடைய கை, கால், உடம்பு, உள்ளம் எல்லாம் துறுதுறு வென்று துடிக்கவேண்டும். மண்ணுங்கட்டியாய், பிள்ளைப்பூச்சியாய், எருமைமாடாய் வாழ்ந்தது போதும். இளைஞர்களிடம் துடி துடிப்பு, சுறுசுறுப்பு, மிடுக்கு, வலிமை, வீரம், உறுதி, துணிவு, அஞ்சாமை எல்லாம் பெருகவேண்டும். அப்போது தான் அவர்கள் படைப் பயிற்சி பெறத் தகுதியடைவர்கள்.

உன் கை துறுதுறு வென்றிருப்பதற்கு அடையாளம் கல்லை வீசுவது. கொசுவின்மேல் கல்லை வீசத் தெரியாதவன் பகைவன்மேல் குண்டையா வீசப்போகிறான் ? கொசுவில் ஆரம்பிக்கும் பயிற்சி பகைவரை அழிக்கும் போர் வெற்றியில் வந்து முடியும். சுதந்தரவாழ்வை நிரந்தரமாக வைத்துக்கொள்ளும் சக்திபெறுவதில் வந்து முடியும். சுதந்தரம் வந்தது, போய்விட்டது என்று சொல்லி ஏமாந்து போகாத நிலையில் வந்து முடியும்.

ஆகவே சுதந்தரத்தை உபயோகப்படுத்திக்கொள். சுதந்தரமாக விளையாடு. கல்லை வீசிக் கொசுவைக் கொல். அதற்குக்கூட உனக்குச் சுதந்தரமில்லையா? இந்தச் சுதந்தரத்தை அடக்க யாராவது பைத்தியக்காரர்கள் குறுக்கிட்டால் இருக்கவே இருக்கிறது மற்றொரு சுதந்தரம்; கூக்குரலிடு; இன்னும் இரண்டு பேரைச் சேர்த்துக்கொண்டு கலாட்டா பண்ணு; வேலை நிறுத்தம் செய்துவிடு. எந்த வேலையை நிறுத்துவதென்று கேட்கிறாய்?—யோசித்துக் கொண்டு வந்து சொல்கிறேன், தம்பி !

# வைகறைத் துயில் எழு

"வைகறைத் துயில் எழு என்று ஔவைப் பாட்டி சொல்லியிருக்கிறாளே தெரியுமா? விடியற்காலையில் எழுந்திருந்தால் மூளை தெளிவாக இருக்கும். படிக்கிற பொருள்களெல்லாம் பசுமரத்தாணிபோல மனசில் பதியும். எழுத ஆரம்பித்தால் புங்கானு புங்கமாக விஷயங்கள் ஒன்றன் பின் ஒன்றாகக் கிளம்பும்" என்று என் நண்பர் அரைமணி நேரம் உபந்நியாசம் செய்தார்.

"விடியற்காலையில் ஒருவிதமான பித்தமயக்கம் உண்டாகும். அதைச் சட்டைசெய்யாமல் எழுந்திருந்து ஸ்நானமும் செய்துவிட்டால் அப்புறம் வானத்தை வில்லாக வளைக்கலாம்; மணலைக் கயிறாகத் திரிக்கலாம்" என்று அவர் விடியற்காலையில் எழுவதன் பெருமையை அளந்து கொண்டே வந்தார். ஒவ்வொரு நிமிஷமும் எனக்குப் பச்சாத்தாபம் உண்டாயிற்று. 'என்ன காரியம் செய்கிறோம். எவ்வளவு நாட்களை வீணாகத் தூங்கிக் கழித்துவிட்டோம்!' என்ற எண்ணம் தோன்றியது.

எப்போதும் உள்ள வேலைகளுக்கிடையே எதையாவது படித்து முடிக்கவேண்டுமென்றால் நேரம் அகப்படுவதில்லை. ஆறேழு பக்கம் எழுதலாமென்றால் நண்பர்கள் விடுகிறார்களா? நான் பிள்ளையார் சுழி போடுவது அவர்களுக்கு எப்படித்தான் தெரிகிறதோ? ஒரு பாரா எழுதியிருப்பேன்; ஒரு நண்பர் அவசர அவசரமாக வந்து சேருவார். 'அடுத்த வருஷத்தில் புளியமரங்கள் கிரமமாகக் காய்க்குமா?' என்ற சர்ச்சையில் இறங்கிவிடுவார். இல்லாவிட்டால்

'ஹிமாசலத்தின் ஜாதகத்தை சில இயல்பு நூல்வல்லார் கணித்திருக்கிறார்கள்' என்று தொடங்குவார். அவரோடு பேசாமல் மௌனமாக இருப்பதானால் மரியாதையாகாது. உற்சாகமாக நாமும் அவரைப்போலவே விஷயங்களை எடுத்து விடாவிட்டால், விஷயம் ஒன்றும் தெரியாத 'சோப்ளாங்கி' என்ற பட்டத்தை அவர் கட்டிவிடுவார். நமக்கு நேரே அந்தப் பட்டத்தை வழங்கினால் குற்ற மில்லையே. வேறு நண்பர் ஒருவரிடம், "இந்தப் பேர்வழிக்கு ஜியாலஜி என்று சொன்னாலே புரியவில்லை; ஹிமாசலம் ஒரு மலையென்பதுகூட நன்றாகத் தெரியுமோ இல்லையோ!" என்று நம்மைப்பற்றி விளம்பரப்படுத்தும் கைங்கரியத்தில் அல்லவா ஈடுபட்டுவிடுவார்?

ஆகவே, நம்முடைய மானத்தைக் காப்பாற்ற நாமும் ஏதோ தெரிந்தவனைப்போலப் பேசித் தொலைக்கவேண்டும். வந்தவர் ஒரு குறிப்பிட்ட பொருளைப்பற்றிப் பேசுவதோடு நிற்கிறாரா? அரசியல், ராய்ட்டர் தந்தியின் வியாக்கியானம், நாட்டியக் கலையின் சீர்கேடு, ஆட்டுப் புழுக்கையின் உயர்வு- இப்படியாகச் சர்வ விஷய சாகரமாக அவர் இருப்பார். தலை விதியே என்று பொழுது வீணாகப் போவதை நினைந்து மனசுக்குள் நொந்துகொண்டு, வெளியில் காட்டிக் கொள்ளாமல் இருக்க வேண்டும்.

கடைசியில் நண்பர் போய் விடுவார்; எழுதத் தொடங்கின கட்டுரை முதல் வாக்கியங் கூடப் பூர்த்தியாகாமல் நின்று விடும். குளித்து விட்டுச் சாப்பிட நாழிகையாகி விடும்.

இப்படியாக ஒவ்வொரு நாளும் தனிமையாக இருந்து எழுதச் சந்தர்ப்பம் கிடைக்காமல் இருந்த எனக்கு விடியற் காலையில் எழுந்திருக்க வேண்டும் என்ற உபதேசம் அமிர்த மாக இருந்தது. மலையைக்கூடப் புரட்டி விடலாமென்ற தைரியம் பிறந்தது. கடவுள் விடியற் காலம் என்ற ஓர்

அருமையான காலத்தை உண்டாக்கினரே, அந்தக் காலத்தில் மனிதன் தனிமையாகச் சிந்திக்கவும் படிக்கவும் எழுதவும் முடியும்படி அவனைச் சிருஷ்டித்திருக்கிறரே, மூளையென்ற ஒன்றை அவனுக்குக் கொடுத்து அந்த அருமையான விடியற்காலத்தில் அதில் குளிர்ச்சியையும் தெளிவையும் கூர்மையையும் புகுத்துகிறரே! ஆஹா! கருணாநிதி என்றால் அவருக்கே தகும்.—என் உள்ளம் நன்றியறிவிலும் பக்தியிலும் மூழ்கி மூழ்கி எழுந்தது.

சங்கற்பம் செய்துகொண்டேன்; அந்த வாரம் திங்கட்கிழமை முதல் விடியற்காலம் எழுந்துவிடுவதென்று உறுதியாகத் தீர்மானம் செய்து கொண்டேன். சனிக்கிழமை இரவு படுத்தால் ஞாயிற்றுக் கிழமை காலையில் எழுந்திருக்கிறோம். ஞாயிற்றுக் கிழமை ஓய்வு நாளாகையால் கடைசி கடைசியென்று ஆசை தீரக் காலையில் பத்துமணி வரையில் தூங்கி விட்டு, காலைத் தூக்கத்துக்கு அப்பொழுதே விடை கொடுத்துவிடலாம் என்பது என் எண்ணம். அதனால்தான் என்னுடைய விரதத்தைத் திங்கட்கிழமைக்குத் தள்ளி வைத்துக் கொண்டேன்.

"இந்தா, திங்கட்கிழமை நாலு மணிக்கே நான் எழுந்திருக்கப் போகிறேன். உடனே ஸ்நானம் செய்யப் போகிறேன். உன்னையும் எழுப்பி விடுகிறேன். சும்மா நம்முடைய ஆயுளைத் தூக்கத்தில் கழித்து விடலாமா?" என்று என் மனைவியிடம் பெருமிதத்தோடு சொன்னேன். அவள் அலட்சியமாகப் புன்னகை பூத்தாள். 'இவள் நம்மை மதிக்கவில்லை. நாம் விளையாட்டுக்காகச் சொல்கிறோம் என்று நினைக்கிறாள். இவள் நினைப்பைக் குலைக்க வேண்டும்' என்று கொஞ்சம் கோபத்தோடே சபதம் செய்து கொண்டேன்.

ஞாயிற்றுக்கிழமை இரவில் வழக்கத்துக்கு மாறாகச் சீக்கிரமே படுத்துக் கொண்டேன். சாதாரணமாக இரவில்

பதினொரு மணிவரையில் எதையாவது படிக்காமல் படுக்கப் போகும் வழக்கம் என்னிடம் இல்லை. அன்றைக்கு அந்த வழக்கத்தை நான் கைவிட்டேன். நான்தான் விடியற்காலை யில் எழுந்து உலகத்தையே ஜயிக்கப் போகிறேனே !

"என்ன, அதற்குள் தூக்கம் வந்து விட்டதா? ஒன்றும் படிக்கவில்லையா ?" என்றாள் என் மனைவி.

"உனக்கு என்ன கஷ்டமாக இருக்கிறது? இப்போது கண்விழித்தால் விடியற்காலம் தூங்கி விடுவேன். நாளையி லிருந்து பிராதக் கால ஸ்நானம் செய்ய நிச்சயித்து விட் டேன். நீ வேண்டுமானால் விடிய விடியப் படுத்துக் கொண்டிரு; எனக்குக் கவலை இல்லை" என்று சொல்லிப் போர்வையை இறுகப் போர்த்துக்கொண்டேன்.

என்ன அருமையான தூக்கம்! மற்ற நாட்களிலாவது ஏதாவது சொப்பனம் உண்டாகும். நான் படிக்கும் புத்தக ஞாபகமாகவே படுத்துக் கொள்வதனால் அந்தப் புத்தகத் தின் அநுபந்தமாகச் சில காட்சிகளைக் கனவிலே காண் பேன். அன்றைக்குத்தான் நான் ஒன்றையும் படிக்க வில்லையே! ஆனந்தமாகத் தூங்கினேன்.

நாலுமணிக்கு அலாரம் வைத்திருந்தேன். அந்தக்காலத் திலெல்லாம் யார் நம்முடைய பாட்டனாரையும் முப்பாட்ட னாரையும் எழுப்பினார்? அவர்கள் விடியற்காலையில் எழுந் திருந்து ஸ்நானம் செய்தது உண்மைதான். ஆனாலும் மணிக் கணக்குத் தவறாமல் அவர்கள் எழுந்திருந்தார்களா என்பது நிச்சயம் இல்லை. இதோ, என்னைப் பாருங்கள்: அலாரம் டைம்பீஸ் என்னைத் தட்டி எழுப்பப் போகிறது. மணிக் கணக்கு மாறாமல், நிமிஷங் கூடத் தவறாமல் நான் எழுந் திருக்கப் போகிறேன். ஆம்! நான்கு மணி என்றால் நான்கு மணிதான். நான்தான் சரியாக அலாரம் முள்ளை இந்தப் பக்கம் அந்தப் பக்கம் சிறிதும், நகராமல் கணக்காக

நாலுக்கே வைத்திருக்கிறேனே! அலாரச் சாவி கொடுக்க மறந்து விட்டேனென்று நினைக்கிறீர்களா? நிதானமாக இத்தனை சுற்று என்று கணக்குப்பண்ணிச் சாவி கொடுத்து விட்டேன். இனிமேல் நான் விடியற்காலம் எழுந்திருப்பதற்கு என்ன ஐயா தடை?

'அலாரம் டைம்பீஸ்' என்று என் கடிகாரத்தை வெறுமனே சொல்லி விடலாமா என்ன? கணீரென்று கேட்கும் அந்த அலாரத்தின் இன்னிசையே தனி மகிமை உடையது. தூக்க மயக்கத்தில் ஆழ்ந்து தாமத குணம் நிரம்பி அஞ்ஞானியாகக் கிடக்கும் எனக்கு, "இதோ நான்கு மணியாகிவிட்டது; தூங்காதே; எழுந்திரு, எழுந்திரு" என்று கணகண சப்தத்தால் உபதேசம் செய்வதற்கு ஏற்ற கடிகாரம் அது. அது எனக்குக் கிடைத்திருக்கிற போது என்னுடைய விரதம் வெற்றிபெறுமென்பதில் என்ன சந்தேகம்?

ஞாயிற்றுக் கிழமை எட்டு மணிக்கே படுத்துக்கொண்டேன். தூங்கிவிட்டேனென்று கூடச் சொன்னேன் அல்லவா? ஆம், சுகமான உறக்கம்.

இரவு நேரம் போய்க்கொண்டிருந்தது. என் மனைவி எப்போது படுத்துக்கொண்டாளோ எனக்குத் தெரியாது. மணி ஒன்றன்பின் ஒன்றாகக் கழிந்து கொண்டே வந்தது. நான் சுழுத்தி அவஸ்தையில் எல்லாம் மறந்து துயின்றேன்.

விடியற்காலம் நாலு மணியாகத்தான் இருக்க வேண்டும். கண கண கணவென்று மணியொலி கேட்டது; ஆனால் மிக மெலிவாகக் கேட்டது. இனிமையான தூக்கத்தினிடையே அந்த ஒலி கேட்டதும் கேளாததுமாக இருந்தது. அந்தத் தூக்க மயக்கத்தில், எழுந்திருக்கலாமா என்ற பிரச்னை என் உள்ளத்தில் எழுந்தது. 'எதற்காக

வீணாக உடம்பைக் கெடுத்துக் கொள்ளவேண்டும்? அயர்ந்து தூங்குவதை விட்டு எழுந்து என்ன சாதிக்கப் போகிறோம்? அப்படி எழுந்திருக்க வேண்டுமானால் இன்னும் ஒரு மணி கழித்துச் சரியாக அஞ்சு மணிக்கு எழுந்திருக்கலாம்' என்று ஓர் எண்ணம் தோன்றியது.

என்னுடைய விரதத்துக்குப் பங்கம் வருமே என்ற கருத்து எழுந்தாலும் அதற்குப் போதுமான பலம் இல்லை. "இந்த இருட்டில் எழுந்திருந்து ஸ்நானம் செய்தால், நாம் நம் தூக்கத்தைக் கெடுத்துக்கொள்வதோடு, அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கும் மற்றவர்களுக்கும் அநாவசிய மான தொந்தரவைக் கொடுக்க வேண்டியிருக்குமே' என்ற பரோபகார சிந்தனை அடுத்தபடி கிளம்பியது.

இப்படி ஒன்றுவிட்டு ஒன்று தோன்றிக்கொண் டிருக்கும்போது நித்திராதேவி மீட்டும் என்னை இறுகத் தழுவிக்கொண்டாள்; நான்கு மணி கடந்துவிட்டது. அலாரத்தை மறந்தேன். விரதத்தையும் மறந்தேன்.

ஐந்து மணி ஆயிற்று. வழக்கம்போல் எங்கள் வீட்டுத் தாத்தா எழுந்து, "நாராயண, நாராயண" என்ற நாம ஸ்மரணையாகிய அலாரத்தை எழுப்பினார். அது என் காதில் விழுந்தது. ஐந்து மணியாகிவிட்டதென்ற ஞாபகம் உள்ளத்துக்குள்ளே மெல்லத் தோன்றினாலும், தூக்கத்தின் மோகன சக்தி அதைத் தலையெடுக்க வொட்டாமல் அழுத் தியது. இருந்தாலும், "இந்தத் தாத்தா ஸ்நானம் செய்தா கட்டும்; நாம் எழுந்திருக்கலாம்" என்று ஒரு வகையாகச் சமாதானம் செய்துகொண்டேன். மறுபடியும் ஒரு பாட்டம் தூக்க சுகத்தை அநுபவித்தேன்.

யாரோ என்னை எழுப்பினார்கள். வேறு யார்? என் மனைவிதான். "மணி ஆறு ஆகிவிட்டது. இன்னும் எழுந்திருக்கவில்லையா? உங்கள் விரதம் என்ன ஆயிற்று?"

என்று கேட்டாள். அவள் இன்ன வார்த்தைகளைத்தான் சொன்னாள் என்று தெளிவாக எனக்குப் புலப்படவில்லை. வேறு பக்கம் திரும்பிப் படுத்துக்கொண்டேன். கால் தலையணையை இரண்டு முழங்காலுக்கும் இடையே வைத்துக் காலை முடக்கிக்கொண்டு போர்வையையும் இழுத்துப் போர்த்தேன். அவள் என் தூக்கத்தைக் கண்டு என்ன சொன்னாளோ, எப்படிப் பரிகாசம் செய்தாளோ, யார் கண்டார்கள்? அதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் தூங்கினேன்.

கண்ணை விழித்துப் பார்த்தேன்; சூரியன் வான வெளியில் தன் யாத்திரையைத் தொடங்கி விட்டான். கண்ணைக் கசக்கிக் கொண்டு எழுந்திருந்தேன்; மணி ஏழரை. நான் ஆறரை மணிக்கு எழுந்திருப்பவன்; அன்று என் சங்கற்ப விசேஷம், ஒரு மணி பின்னும் தாமதமாக எழுந்தேன் !

என் மனைவி வந்து நின்றாள். "பிராதஸ்நானமெல்லாம் ஆகிவிட்டதா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டாள்.

"என்ன இருந்தாலும் பெரியவர்கள் வாக்கு வேத வாக்குத்தான்; சத்தியமானது." என்றேன். அவள் ஒன்றும் விளங்காமல், "என்ன உளறுகிறீர்கள்? இன்னும் தூக்க மயக்கம் விடவில்லையோ?" என்றாள்.

"விடியற் காலத் தூக்கம் வெல்லம் போலே என்ற பழமொழியைச் சொன்னாரே, அந்த மகானுபாவர் வாயில் வெல்லத்தைத்தான் போடவேண்டும்" என்று சொல்லிக்கொண்டே படுக்கையிலிருந்து எழுந்தேன்.

அந்தப் பழமொழி என் மானத்தைக் காப்பாற்றியது. இல்லாவிட்டால்—?

# உணவுக் கலை

"சாப்பிடுவதற்காக ஜீவித்திருக்கிறாயா? ஜீவித்திருப்பதற்காகச் சாப்பிடுகிறாயா?" என்று கேட்டால், "ஜீவித்திருப்பதற்காகத்தான் சாப்பிடுகிறேன்" என்று பதில் சொல்லத் தயாராக இருக்கிறோம். சாப்பிடுவது என்ற காரியம் மிகவும் மட்டமான வேலையென்றும், அதை ஏதோ கடமைக்குச் செய்து வருகிறோமென்றும் சொல்லாமல் சொல்லி வருகிறோம். உண்மையில் நம்முடைய அந்தரங்கமான எண்ணம் அதுதானா? சாப்பிடுவதில் நமக்குச் சிறிதும் ஆவல் இல்லையா? வெறும் கடமையாக நினைத்துச் செய்வதாக இருந்தால் அதற்கு இந்த உலகமெல்லாம் ஒவ்வொருவனும் உழைத்துக்கொண்டிருப்பானேன்?

கடவுள் சாப்பிடுவதை வெறும் கடமையாக வைக்கவில்லை. மனிதன் சாப்பிடுவதையும் ஒரு கலையாகச் செய்ய வேண்டுமென்பதுதான் பகவானுடைய திருவுள்ளம். இல்லாவிட்டால் வயிற்றுக்குப் பக்கத்திலே ஒரு வாயை வைத்துத் தலையணையில் பஞ்சைத் திணிப்பதுபோல உணவைத் திணிக்க ஏற்பாடு செய்திருப்பாரே! வாயில் நாக்கு என்ற ரஸிகனை ஏற்படுத்தி வயிற்றுக்குப் போகும் அத்தனை பதார்த்தங்களையும் ருசி பார்த்து அனுப்பும்படியாக விதித்திருக்கிறாரே. இதிலிருந்தே சாப்பிடுவது கடமை அல்ல, சுவையுணர்ந்து ரஸிக்கும் கலையென்றுதானே தெரிந்துகொள்ள வேண்டும்? ரஸம், சுவை, விருந்து என்றெல்லாம் கவிக்கும், கலைக்கும் உபயோகப்படும் வார்த்தைகளைத் தந்தது இந்த உணவுக்கலையென்பதை நாம் மறக்கக் கூடாது.

நாக்கு என்ற ஒன்று இல்லாவிட்டால் மனிதன் சோற்றை அரைத்து உள்ளே செலுத்தும் யந்திரமாகி இருப்பான். நல்ல வேளை, கடவுள் காப்பாற்றினார். நாக்கு என்னும் கலைஞன் இந்தச் சாப்பாட்டுக் கலையின் தலைவன். அவன் செய்யும் விமரிசனம் அபாரம். உணவுக்குச் சுவை உண்டு என்பதை உணர்கிறவன் அந்தக் கலைஞன்.

ஆறு வகையான சுவைகள் என்று ஒருவாறு வரையறை ஏற்பட்டிருக்கிறது.

சங்கீதத்தைக் குறிப்பிடும்போது தமிழ்க் கவிஞர் ஏழிசை யென்று சொல்வார்கள். சர்வலோகத்திலுள்ள பண்டங்களும் விஞ்ஞான ரீதிப்படி 93 மூலப்பொருள்களில் அடங்குவது போலவும், ஞானசாஸ்திரங்களின்படி 96 தத்துவங்களில் அடங்குவது போலவும், சங்கீதத்தின் பரப்பு முழுவதும் மூலஸ்வரங்களாகிய ஏழில் அடங்கி விடுகின்றனவாம். ஆகையால் ஏழிசை என்று சொல்கிறார்கள்.

ஆனால் ஏழு ஸ்வரங்களில் எத்தனையோ பேதங்கள். மூன்று ஸ்தாயிகளுக்கு 21 ஸ்வரங்களாகின்றன. அந்த இருபத்தொன்றிலும் எத்தனையோ மயிரிழை நுணுக்கங்கள். முன்பு ஆதியாழ் என்று ஒரு வீணை தமிழ் நாட்டில் இருந்ததாம். அதற்கு ஆயிரம் நரம்புகள் உண்டாம். ஒவ்வொரு நரம்புக்கும் ஒவ்வோர் ஒலி. ஸ்வர பேதத்தை நுணுகி நுணுகி ஆராய்ந்துகொண்டு போனால் ஆயிரமென்ன? பதினாயிரம், லக்ஷம் என்று விரிந்துகொண்டு போகும்.

ஏழு ஸ்வரத்துக்கு எப்படி எல்லை இல்லையோ அப்படித்தான் ஆறு சுவைக்கும் எல்லை இல்லை. இனிப்பு ஒரு சுவைதான். ஆனால் எல்லா இனிப்பும் ஒன்றாகுமா? கரும்பின் இனிப்பும் தேனின் இனிப்பும் ஒன்றாகிவிடுமா?

கரும்பு கரும்புதான்; தேன் தேன்தான். மாம்பழத்தின் சுவையும் மணத்தக்காளிப்பழத்தின் சுவையும் இனம் பிரிக்கும்போது தித்திப்பு என்ற பிரிவில் வருகின்றவையே. ஆனால் இரண்டுக்கும் வித்தியாசம் இல்லையா?

பாகற்காயின் கசப்பும் எட்டிக்காயின் கசப்பும் ஒன்றென்று சொல்லலாமா? வாழைக்காயின் துவர்ப்பும் பலாக்காயின் துவர்ப்பும் ஒரே சுவையாக எண்ணலாமா?

தனித்தனிச் சுவை கிடக்கட்டும். இரண்டு மூன்று சுவைகள் சேர்ந்த பண்டங்கள் இயற்கையிலே எத்தனை இருக்கின்றன? மாம்பழத்தில் வெறும் இனிப்பு மாத்திரமா இருக்கிறது? புளிப்பும் சேர்ந்திருக்கிறது. இப்படி இயற்கையிலே உள்ள கலப்புப் போதாதென்று நாமும் பல சுவைகளையும் கூட்டி வெவ்வேறு பதார்த்தங்களைச் செய்து சாப்பிடுகிறோம். இயற்கையிலே கசப்பான பாகற் காய்க்கு வெல்லம் போட்டுக் கறி பண்ணிச் சாப்பிடுகிறோம். புளிப்பும் இனிப்பும் உள்ள மாம்பழத்துக்குக் காரமும் உப்பும் சேர்த்துப் பச்சடி பண்ணிச் சாப்பிடுகிறோம்.

மனிதன் ஒவ்வொரு நாளும் மூச்சு விடுகிறது, தண்ணீர் குடிப்பது என்ற இரண்டுபோக, அடுத்தபடி அவசியமாகச் செய்யும் காரியம் உண்ணுதல். மூச்சுக் காற்றுக்கும் தண்ணீருக்கும் அவன் செயற்கையிலே ஒன்றையும் சேர்ப்பதில்லை. உணவு விஷயத்தில் தான் பலபல வேலைப் பாடுகளைச் செய்கிறான். ஏன், தண்ணீரைக் கூட அவன் சும்மா விடுவதில்லை; ஏலம் போடுகிறான்; விளாமிச்ச வேர் போடுகிறான்; புழச் சத்தைச் சேர்க்கிறான்.

உணவைக் கலைப் பொருளாக்க அவன் எத்தனை பாடு படுகிறான் என்பதைக் கொஞ்சம் கவனிக்கலாம். உணவைச் சேகரிக்க அவன் படும் பாடு ஒரு பக்கம் இருக்கட்டும். உணவைச் சுவையுடையதாகப் பண்ண அவன் செய்யுங்

காரியங்களைப் பார்த்தாலே அவன் கலையுணர்ச்சி விளங்கும். உணவென்பது பசியைப் போக்கும் ஒரு பொருள். பசியைப் போக்கச் சத்தும் அளவும் வேண்டும். நன்ருக வளர்ந்த மனிதன் புஷ்டியான ஆகாரம் இத்தனை கவளம் சாப்பிடவேண்டும் என்ற திட்டம் இருக்கிறது. அதன்படி உணவு உண்பதாக இருந்தால் நாம் ஆஸ்பத்திரிகளிலே போஜனசாலையை ஏற்படுத்திக்கொள்ளலாம். பசி யென்கின்ற நோய்க்கு, உணவு ஒரு மருந்துதானே?

அளவும் சத்துமாகிய உணவின் இலக்கணத்துக்கு மேலே, நாம் பலபல இலக்கணங்களைக் கவனிக்கிருேம். முதலில் அது நாக்குக்கு இனியதாக இருக்கவேண்டும். சுவையுணர்ச்சியைத் திருப்திப் படுத்தவேண்டும். எந்த எந்தச் சுவை நமக்கு விருப்பம் இல்லையோ அந்தச் சுவைப் பொருளோடு வேறு இன்சுவைப் பொருளைச் சேர்த்து உண்ணுகிருேம். இந்தச் சுவையறியும்வேலை நாக்கு என்னும் அதிகாரியினுடையது. வயிற்றை மாத்திரம் பார்த்தால் உணவுக்கு அளவும் சத்தும் இருந்தால் போதும். நாக்கு என்னும் ரஸிகன் நடுவிலே இருப்பதனுல் உணவுக்குச் சுவை அவசியமாகி விட்டது. உணவு விஷயத்தில் சுவையே தலைமையானது. அளவும் சத்தும் இல்லாவிட்டாலும் சுவை இருந்தால் நாக்கு நீண்டு விடுகிறது. நாக்குக்கு அடிமையாகி வியாதியைச் சம்பாதித்துக் கொள்கிருேம். சுவையின் அதிகாரம் அவ்வளவு அதிகமாக இருக்கிறது.

உணவு என்ருல் சுவைப்பொருள் என்று அறுதியிட்டு விட்டார்கள். ஊசியினுல் உணவு ஏற்றுவதில்லையா? மூக்கின் வழியே உணவைத் திணிப்பதில்லையா? ஆனுலும் வாயின் வழியே, நாக்கின் மதிப்புப் பத்திரம் பெற்ற பிறகு அனுப்பப்படும் உணவையே உணவாகக் கருதுகிருேம்.

டாக்டர்கள் சொல்கிற அளவும், சத்தும், நாக்குப் பெருமான் அளந்து பார்க்கிற சுவையும் சேர்ந்தால்

உணவு ஆகிவிடும் என்று அதற்குள் நிச்சயம் செய்து விடாதீர்கள். கடவுள் நமக்கு ஐந்து இந்திரியங்களைக் கொடுத்திருக்கிறார். கண்டு கேட்டு உண்டு உற்று அறியும் ஐந்து பொறிகளும் இந்த உடம்போடு சம்பந்தமான அநுபவங்களை உணர்கின்றன. காற்று வீசினால் அதை உற்று உணர்கிறோம்; பாட்டுப் பாடினால் கேட்டு உணர்கிறோம்; தேனை உண்டும், அத்தரை மோந்தும், வானவில்லைப் பார்த்தும் உணர்கிறோம். நாக்கு இந்த ஐந்து இந்திரியங்களில் ஒன்று; சுவை உணரும் பொறி.

உணவு விஷயத்தில் ஐந்து இந்திரியங்களுக்கும் வேலை கொடுக்கிறோம். நாக்கு மாத்திரம் உணவுக்கு அவசியம் என்பது அவசரத்தில் தீர்மானிக்கும் விஷயம். உணவு நன்றாக இருக்கிறதென்பதை நாக்குக்கு அடுத்தபடி கண் தீர்மானிக்க வேண்டும். உண்மையில் கண் தீர்மானித்த பிறகு தான் நாக்குக்கு உணவு போகும்.

ஹோட்டலில் வரிசையாகத் தின்பண்டங்களை அடுக்கி வைத்திருக்கிறார்கள். அவற்றில் எத்தனை உருவம்! எத்தனை நிறம்! அடுக்கி இருக்கிற அழகுதான் என்ன! வைத்திருக்கிற அலமாரி, அதற்கு ஜோடனை, ஹோட்டலிலுள்ள படங்கள், பளபள வென்றிருக்கும் நாற்காலிகள் மேஜைகள் எல்லாம் சேர்ந்து கண்ணை இழுக்கின்றன. ஹோட்டல் வாசலிலேயே கண்ணுக்கு வேலை தொடங்கி விடுகிறது. வாசலிலுள்ள பலகை தோரணங்கள் வா வா என்று அழைக்கின்றன. உள்ளே புகுந்தாலோ அழகான சுவர்கள், நிலைக்கண்ணாடிகள், நாற்காலி மேஜைகள் இவை உட்காரச் சொல்கின்றன. தின்பண்டங்களின் பக்கம் கண்ணைத் திருப்பினால் கண்கள் அங்கே போய் ஒட்டிக் கொள்கின்றன. கண்ணை மீட்டுக் கொண்டு எதையாவது பொறுக்கி எடுக்கச் சிறிதுநேரம் ஆகிவிடுகிறது. நம்முடைய கண் முதலில் ஈடுபட்டால்தான் உண்ணவேண்டும் என்ற

ஆசை கிளம்பும். இந்தத் தந்திரத்தைத் தெரிந்து ஹோட்டல்காரர்கள் புதிய புதிய தின்பண்டங்களைப் புதிய புதிய உருவத்தோடும் நிறத்தோடும் உண்டாக்குகிறார்கள். நல்ல சித்திரக்காரன் ஒருவன் தான் எழுதும் பிரதானமான உருவத்துக்கு நிலைக்களமாக அழகிய காட்சிகளை அமைப்பது போல இந்தக் கலைஞர்களும் ஹோட்டல் வாசல், சுவர், தரை, மேற்கட்டி, அலமாரி ஆகிய நிலைக்களங்களை மிகவும் கவர்ச்சி தரும்படி அமைத்திருக்கிறார்கள்.

வீட்டிலே விருந்து நடக்கும்போது எத்தனை நிறமான பதார்த்தங்களைக் காண்கிறோம்! சித்திரான்னங்களின் விசித்திர வர்ணங்களைச் சாப்பிடுவதற்கு முன்பு கண்டு மகிழ்வதற்காக வல்லவா வைத்திருக்கிறார்கள்?

உணவுக்கலையில் கண்ணுக்கு இனிமை, காட்சியுணர்ச்சிக்குத் திருப்தி, உண்டாக்குவதும் முக்கியமானதல்லவென்று இப்போது சொல்வீர்களா ?

அடுத்தபடி ஸ்பரிசம்; "சூடாக ஒரு கப் காபி" "சுடச் சுடத் தோசை", "சூடாக என்ன இருக்கிறது?" என்ற பேச்சை ஹோட்டலில் கேட்டவர்களுக்கு உணவுக் கலையில் ஸ்பரிசத்துக்கும் ஒரு பங்கு உண்டு என்ற உண்மை தெரிய வரும். ஐஸ்கிரீம், ஐஸ்மோர் முதலிய பண்டங்களிலே குளிர்ச்சிக்கு மதிப்பு. குளிர்ச்சி என்பது ஸ்பரிச உணர்ச்சி தானே? மெதுவடையும் மெதுவான இட்டிலியும் வேண்டுமென்னும் ரஸிகர்கள் அந்த ஸ்பரிச உணர்ச்சியைக் கொண்டுதானே மகிழ்கிறார்கள் ?

வாசனை: அது மூக்கின் வேலை. உணவுப் பண்டங்களில் வாசனை வேண்டுமா வேண்டாமா? விருந்துச் சமையலை மோப்பம் பிடித்துக் கண்டு பிடிக்கும் உணவுக் கலைஞர்களைக் கேட்டுப் பாருங்கள்; சொல்வார்கள். உணவுக் கலைக்கும் வாசனைக்கும் சம்பந்தம் இல்லையென்றால், ஏலத்துக்கும், குங்குமப் பூவுக்கும், பன்னீருக்கும் சமையற்

கூடத்தில் என்ன வேலை? காபியை நல்ல காபியென்று அதன் ஜோரான வாசனையல்லவா சொல்கிறது? நெய்யின் உயர்வை நாக்கா தெரிவிக்கிறது? மணமான நெய் வேண்டுமென்று கேட்கிறோமா, தித்திப்பான நெய் வேண்டுமென்று கேட்கிறோமா?

நாக்கு, கண், ஸ்பரிச இந்திரியம், மூக்கு என்னும் நான்குக்கும் கவர்ச்சி உண்டாக்கும் உணவின் திறத்தைப் பார்த்தோம். காதுக்கு மாத்திரம் உணவு விஷயத்தில் வேலை இல்லை யென்று இப்போது தோன்றுகிறது. அதையும் கொஞ்சம் பார்த்து விடுவோமே!

இந்தக் காலத்தில் ரேடியோ இல்லாத ஹோட்டல் எங்காவது இருக்கிறதா? ஹோட்டலுக்கும் ரேடியோவுக்கும் என்ன ஐயா சம்பந்தம்? சம்பந்தம் இல்லாமல் ஹோட்டல்காரர் அவ்வளவு ரூபாய் செலவழித்து ரேடியோ வாங்கி வைக்கப் பைத்தியமா பிடித்திருக்கிறது? ரேடியோ சங்கீதம் நேரடியாக நம்முடைய வயிற்றிலே உணவாகப் புகுவதில்லை. இட்டிலியைத் தனியாகச் சாப்பிட்டு விடலாம்; பசி தீரும். ஆனால் அதற்குச் சட்டினி வேண்டுமென்று கேட்கிறோம். பெரிய சுவைக்குச் சிறிய சுவை அநுபானமாக உதவுகிறது. நிறம், மணம், சூடு ஆகியவைகளும் உணவை உட்கொள்ள உபயோகமாகும் கருவிகளாகின்றன. அப்படியே ஹோட்டல் அலங்காரங்கள் வயிற்றுக்குள் போகவேண்டிய பதார்த்தத்தை அப்படிப் போகும்படி செய்ய உதவுகின்றன. வாசல் அலங்காரம் முதல் இட்டிலியின் சட்டினியிலுள்ள நல்ல தேங்காய்வரை நம்முடைய வயிற்றுக்குள் இட்டிலியைத் தள்ளப் பிரயாசைப் படுகின்றன. ஒவ்வொன்றும் ஒரே மாதிரி வேலையைச் செய்யவில்லை. அவ்வளவும் அவசியம் என்ற நியதியே இல்லை. வெறும் மாவைத் தின்றுகூடக் கடும் பசியை அப்போதைக்குத் தணித்துக் கொள்ளலாம். உலகம்

அப்படி நினைப்பதில்லையே! ஒரே வயிற்றுக்குள்ளே போவதாக இருந்தாலும், பசி தணிக்கும் விஷயத்தில் அத்தனை முஸ்தீபுகளுக்கும் நேரடியான வேலை இல்லா விட்டாலும், ஒவ்வொன்றும் ஒவ்வொரு கட்டம் வரையில் உதவுகின்றது. ஹோட்டலுக்குள் நுழைய வாசல் அலங் காரம் உதவுகிறது; அதற்குப் பிறகு அதன் வேலை நின்று விடுகிறது. உட்காரும்படி நாற்காலி அழைக்கிறது. பட்சணத்தின் நிறம் விரும்பச் செய்கிறது. அதன் ஸ்பரிசம் கையில் எடுக்கச் செய்கிறது. சுவை வாயில் சுவைக்கச் செய்கிறது. வாயில் போடும் வரைக்கும் நிறத்துக்கு வேலை உண்டு. வாயில் போட்ட பிறகு சுவைக்கு வேலை. தொண் டைக்குள் போய்விட்டால் இத்தனைக்கும் வேலை இல்லை.

ஒவ்வொரு கட்டத்தில் நின்று உதவும் கருவிகளில் ரேடியோ சங்கீதம் ஒன்று. மனைவி இனிமையாகப் பேசிச் சாப்பாடு போட்டால் இரண்டு கவளம் கூடச் செல்கின் றன; அங்கே அந்தப் பேச்சின் இனிமைக்குக் கௌரவம் இல்லையா? குழந்தைக்குப் பாட்டும் கதையும் சொல்லிக் கொண்டே சோறு ஊட்டும் பாட்டிக்கு, இந்தத் தந்திரம் தெரியும். குழந்தையின் காதுக்கு உணவூட்டி அந்தச் சுவாரசியத்திலே வாய்க்கு உணவூட்டுகிறாள். அவள் பாட்டுக் கேட்ட குழந்தைகளாகிய நாம் இப்போது ரேடியோப் பாட்டுக் கேட்டுக் கொண்டே, இன்னும் ஒரு முறுகல் தோசை என்று கேட்கிறோம்.

உணவுக் கலையில் ஐந்து இந்திரியங்களுக்கும் வேலை உண்டென்பதற்கு இன்னும் உதாரணங்கள் எதற்கு? ஆகவே, "இந்திரியங்கள் படைத்ததும் வாழ்நாள் படைத் ததும் வெறுமனே விலங்குபோலச் சாப்பிடுவதற்கல்ல, உணவை ரஸிப்பதற்கு; உணவுக் கலையின்பம் பெருவதற்கு" என்ற முடிவுக்கு நாம் வருவதில் ஏதாவது பிசகு உண்டா? இருந்தால் சொல்லுங்கள்.

# பேனுப் பைத்தியம்

பவுண்டன் பேனுப் பைத்தியம் எனக்குப் பிடித்த கதையைக் கேட்கிறீர்களா? ஆதியில் நான் சாதாரணப் பேனுவால்தான் எழுதிவந்தேன். எழுத்தும் குண்டு குண்டாக இருந்தது. கண்ணில் ஒத்திக் கொள்ளலாம் என்ற புகழைப் பெற்ற எழுத்து என் எழுத்து. ஆனால், நினைத்த இடத்தில் எதையாவது குறித்துக் கொள்ள வேண்டுமானுல் பேனு மைக் கூட்டுக்கு எங்கே போவது? அந்த இரண்டையும் போகும் இடங்களுக்கெல்லாம் சுமந்துகொண்டா செல்ல முடியும்? பென்சிலைக் கொண்டுபோகலாம். பென்சில்களில் ஒன்றுகூடப் பளிச்சென்று எழுதுவதில்லையே! வெள்ளைக் காகிதத்தில் இன்னும் வெள்ளையாக எழுதும் பென்சிலை வைத்துக் கொண்டு என்ன செய்வது?

கடைசியில் ஒரு பௌண்டன் பேனு வாங்கி விடுவது என்று தீர்மானித்துக் கொண்டேன். அதுவரையில் வாங்காததற்கு முதல் காரணம், 'பௌண்டன் பேனுவில் எழுதினுல் கையெழுத்து மோசமாகிவிடும்' என்று சில கர்நாடக ஆசாமிகள் சொன்னதுதான். பேனு வாங்கின அன்றே என் அருமந்த நண்பர் ஒருவருக்கு ஒரு கடிதம் எழுதத் தொடங்கினேன். கட்டைப் பேனுவால் எழுதியிருந்தால் மூன்று நாலு பக்கங்களுக்கு மேலே எழுத மாட்டேன். இந்த ஊற்றுப் பேனுவினுல் எழுதத் தொடங்கினேன்; கடிதம் மேலேமேலே வளர்ந்துகொண்டே சென்றது. பேனுவிலிருந்து மை ஊற்றுப்போலச் சுரக்க, மூளையி

லிருந்து கருத்தும் ஊற்றாகவே சுரந்தது. நாற்பது பக்கம் எழுதிவிட்டேன். எழுதி முடித்த பிறகு எனக்கே ஆச்சரியமாக இருந்தது. "அடடா! இத்தனை நாள் ஏமாந்து போய்விட்டோமே! கட்டைப் பேனாவில் நம் அருமையான கருத்துக்களையெல்லாம் எழுத முடியாமல் வெட்டியாக வாழ்நாளைப் போக்கி விட்டோமே!" என்று இரங்கினேன்.

கடிதம் எழுதுவதோடு நின்றேனா? என் புத்தகங்களில் எது எதில் என் பேர் இல்லையோ அதில் எல்லாம் என் பெயரை எழுதினேன். ஒரு வாரமாக எழுதாதிருந்த 'டைரி'யை எழுதினேன். அதற்கு முன்புள்ள பக்கங்களில் ஒரு வரி இரண்டு வரிதான் எழுதியிருப்பேன். சில பக்கங்கள் பேனா மையால் களங்கப்படாமலே இருக்கும். ஆனால், இப்பொழுது பக்கம் முழுவதையும் எழுதி நிரப்பினேன். டைரியில் அப்படி எழுத என்ன இருக்கிறதென்று கேட்கலாம். 'டைரி'யில் எதைத்தான் எழுதக் கூடாது? பேனா வாங்கின சந்தோஷத்தை எழுதினேன். யார் யாரைச் சந்தித்தேனென்று யோசித்து எழுதினேன். அவர்களோடு பேசின விஷயங்களைக்கூட யோசித்து நினைவுக்குக் கொண்டு வந்து எழுதினேன். அப்புறம் பக்கம் முழுவதும் நிரம்புவதற்கு என்ன தடை?

எழுதிய பிறகு பார்த்தால், இனிமேல் நான் ஒழுங்காக முறை பிறழாமல் எழுத்து வேலையை நடத்திவருவேன் என்ற நம்பிக்கையும் பெருமிதமும் உண்டாயின.

யாரோ அநுபவசாலி சொன்னதைக் கேட்டிருக்கிறேன்: பேனாவை இரவல் தரக்கூடாதாம். அப்படித் தந்தால் பேனாக் கெட்டுவிடுமாம். வேறொருவர் எழுதிய பிறகு நம்மிடம் வந்தால் அதனால் எழுதும் எழுத்து நம்முடையதாக இராதாம். இந்த எச்சரிக்கையை நான் கவனத்துக்குக் கொண்டு வந்தேன். யாருக்கும் கொடுக்காமலே இருந்து வந்தேன்.

ஆனால் நல்ல காரியத்துக்கு உபகாரம் செய்யாமல் இருக்க முடிகிறதா? யரோ மாணுக்கன் பரீட்சை எழுதப் போனன். சமயத்துக்கு ஒன்றுக்கு இரண்டாக இருக்க வேண்டுமென்று என் பேனவை இரவல் கேட்டான். அவன் கண்முன்னே ஒரு நிமிஷத்துக்கு முன் நான் எழுதினேன். அப்படியிருக்க அது நன்றாக எழுதாது என்று சாக்குச் சொல்லலாமா? ஆகவே, அவனுக்குக் கொடுத்தேன்.

மறுநாள்தான் பேனு என் கைக்கு வந்தது. வந்த வுடன் எழுதிப் பார்த்தேன். 'வந்து விட்டது ஆபத்து!' என்று உணர்ந்தேன். பேனு முள் எழுதினால் வாயைப் பிளக்கிறது. இடது நாக்கு வலது நாக்கின்மேல் குதிரை ஏறுகிறது. எனக்கு அந்தப் பையன்மேல் கடுமையான கோபம் வந்தது. மறுநாள் அவனைக் கண்டபோது, "என்னப்பா, பேனவைக் குட்டிச் சுவராக்கிவிட்டாயே!" என்று கேட்டேன். குதிரை குப்புறத் தள்ளியதோடு குழி யும் பறித்ததுபோல இருந்தது அவன் சொன்ன விடை. "உங்கள் பேனவை நம்பியிருந்திருந்தால் அன்று அதோகதி தான். நல்ல வேளையாக மைக்கூடும் பேனவும் அங்கே கிடைத்தன. என் பேனவில் நாலு பக்கம் எழுதுவதற்குள் மை ஆகிவிட்டது. உங்கள் பேனவை எடுத்து எழுதினேன். 'மக்கர்' பண்ணியது. உதறி எழுதினேன். ஒரேயடியாக மையைக் கொட்டியது; மறுபடியும் உதறி எழுதினால் மையே வரவில்லை. எனக்கு வந்த கோபத்தில் அதை உடைத்து விடலாமா என்று ஆத்திரம் வந்தது. ஆனால், நல்ல வேளையாகப் பேனு உங்களுடையதென்ற ஞாபகம் வந்தது. பேசாமல் பையிலே போட்டுக் கொண்டேன்" என்றான். காலம் எப்படி இருக்கிறது பார்த்தீர்களா?

கெட்டுப்போன பேனவைச் செப்பஞ் செய்ய உட் கார்ந்தேன். கிடுக்கியை எடுத்துப் பேனவின் இரண்டு நாக்கையும் ஒட்டினேன். லேசில் ஒட்டுகிறதா? எப்

படியோ நெற்றி வேர்வை நிலத்தில் விழச் சிரமப்பட்டு ஓட்டினேன். மைவிட்டு எழுதினால், முள்மாதிரி காகிதத்தில் குத்திக் கொள்கிறது. இல்லாவிட்டால், பொட்டுப் பொட்டாக மையைக் கொட்டுகிறது. மறுபடியும் ரிப்பேர் செய்தேன்; எழுதினேன். மூன்றுமுறை ரிப்பேர் செய்யும் போது பேனு நாக்கு ஒன்று உடைந்து போயிற்று. அப்புறம் அந்தப் பேனுவை என்ன செய்வது? கொலுவிலே பழம் பேனுவை வைக்கும் வழக்கம் இன்னும் நமக்கு வரவில்லையே!

பிறகு வேறொரு பேனு வாங்கினேன். அப்போது நான் தெரிந்துகொண்ட பேனு உலக மர்மம் ஒன்று. என் நண்பர் மூலம் அதை அறிந்துகொண்டேன். "கண்ட கண்ட மையையெல்லாம் பேனுவுக்குப் போட்டால் கெட்டுப் போகும். காசு போகிறதென்று பார்க்கக்கூடாது. பார்த்தால் முதலுக்கே மோசம் வந்துவிடும்" என்று சொன்னுர். நான் முன்பு வாங்கினதைவிட உயர்ந்த பேனுவைத்தான் வாங்கியிருந்தேன். குதிரை வாங்கினவன் சவுக்கு வாங்க யோசிப்பான? மார்க்கட்டில் உள்ள உயர்ந்த மையை வாங்கித்தான் பேனுவுக்குப் போட்டேன்.

நாலு நாள் நன்ருக எழுதியது. ஐந்தாவது நாள் பேனுவிலிருந்து மை தாராளமாக வரவில்லை. "பேனுவைத் திறந்து வைத்திருப்பீர்கள். மை கட்டி தட்டி அடைத்துக் கொண்டிருக்கும். எல்லாவற்றையும் கழற்றித் தண்ணீரில் ஊறப் போடுங்கள். பிறகு சரியாகப் போய்விடும்" என்று ஒருவர் வைத்தியம் சொன்னுர். செய்து பார்த்தேன். கொஞ்சம் சுமாராக எழுதியது. ஆனல், மறுமுறை மை போடக் கழற்றினல் வரவில்லை. கழுத்தை அழுத்தித் திருகிப் பார்த்தேன். இறுகலாக இருந்தது. மறுபடியும் ஒரு நண்பரின் உபதேசம் உதவியது. "விளக்கில் காட்டினல் வந்து விடும்" என்ருர்.

அப்படியே காட்டினேன்; விளக்கிலேயே வைத்தேன். பேனு பற்றிக் கொண்டது. "அட இழவே! இது எரிகிற வஸ்துவென்று இதுவரைக்கும் தெரியவில்லையே!" பிறகு என் முட்டாள்தனத்தை வெளியிலே சொல்லிக் கொள்வேனு?

'பேனு உலகத்தில் இதுதான் உயர்ந்தது; இதற்கு மேலே உயர்ந்தது இல்லை' என்று முற்றுப்புள்ளி போட முடியாது. புதிது புதிதாகப் பேனு வந்துகொண்டே இருக்கிறது. 'மையில்லாமலே எழுதும்' என்று ஒரு பேனு விளம்பரம் சொல்கிறது. 'எழுதாமலே மை வருகிறது' என்று மற்ருெரு விளம்பரம் சொல்கிறது. 'எழுதும்போதே உலருகிறது' என்பது ஒரு பேனுவின் மகிமை. 'உலரும் போதே எழுதுகிறது' என்பது மற்ருெரு பேனுவின் மாகாத்மியம். 'ஆகாயத்திலே எழுதலாம்' என்று ஒரு பேனுக்காரர் விளம்பரம் செய்கிருர்: "ஆழ்கடலுக்குள்ளும் எழுதலாம்' என்று மற்ருெருவர் விளம்பரம் பண்ணுகிருர். இத்தனை புதிய சிருஷ்டிகளுக்கும் விளம்பரங்களுக்கும் என்னைப் போலப் பேனுப் பைத்தியம் பிடித்தவர்கள் பலர் உலகத்தில் இருப்பதுதான் காரணம்.

இப்பொழுதெல்லாம் பேனுவைச் சிருஷ்டி பண்ணுகிறவர்கள் மைகளையும் சிருஷ்டி பண்ணுகிருர்கள். 'பதிவிரதை' மைகள் சில வந்திருக்கின்றன. "இந்த மையை வேறு எந்தப் பேனுவுக்கும் போடக் கூடாது" என்று கொட்டை எழுத்தில் மைப்புட்டியின்மேல் விளம்பரம் செய்கிருர்கள்!

பேனு ஆராய்ச்சியோடு மை ஆராய்ச்சியும் கூடவே நடத்தினேன்; புதிய பேனுவையும் மையையும் வாங்கினேன். பணக்காரப் பெண்டாட்டியைக் கட்டிக் கொண்டவன், அவள் மனம் போனபடி நடக்கக் கற்றுக்கொள்வான். அவள் தன் மனசுப்படி நடப்பாளென்ற சபலத்தை அதி

விரைவிலே விட்டுவிடுவான். அதுமாதிரிதான் இருக்கிறது விலைபெற்ற பேனாவை வாங்கின என் பிழைப்பும். "பேனா எப்படி ஸார் எழுதுகிறது?" என்று என் பேனாவைப் போல் வாங்கின ஒருவர் கேட்டால், "நன்றாகத்தான் எழுதுகிறது" என்று சொல்கிறேன். "என் பேனாவில் மை தாராளமாக வரமாட்டேன் என்கிறது" என்று அவர் சொல்லுகிறார். அவர் நம்மைச் சேர்ந்தவர் என்று தெரிந்த பிறகு ஆறுதல் உண்டாகிறது. உண்மையும் வெளிவருகிறது. "ஆமாம்! என் பேனாக்கூடச் சில சமயங்களில் சரியாக எழுதுவதில்லை" என்று சொல்லுகிறேன்.

பாதி எழுதுகையில் பேனா இடக்குப் பண்ணும்போது நமக்கு வரும் கோபம் திரிபுராந்தகனுக்குக்கூட வராது. என்ன செய்வது? பொறுமையோடு பேனாவைச் சுத்தம் செய்து எழுதிப் பார்க்கிறேன். இல்லாவிட்டால் பேசாமல் போட்டுவிடுகிறேன். இந்தச் சங்கடத்துக்காக இரண்டு பேனாவாக வைத்துக் கொண்டிருக்கிறேன். அப்போதும் தகராறுதான். "மரக்கட்டைப் பேனாவுக்குச் சமானமே இல்லை" என்று எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறேன்; இனியும் சொல்வேன்; ஆனாலும், பத்திரிகையில் புதிய பேனா விளம்பரம் வந்தால் அதை வாங்கலாமா என்று சபலம் தட்டுகிறது. ஒரு பேனாப் போய் இரண்டு பேனா வந்தும் திருப்தி உண்டாகவில்லை. 'உட்கார்ந்தோம், தடையின்றி எழுதினோம்' என்று சொல்ல இடமில்லை. மூன்றாவது பேனா வாங்கலாமா என்று யோசிக்கிறேன். மூன்றென்ன, முப்பது வாங்கினாலும் இந்தப் பைத்தியம் தீருமென்ற நம்பிக்கை எனக்கே இல்லை.

# நான் விரும்பும் நோய்

"உங்களுடைய பிள்ளைகளில் யார் நல்லவன்?" என்று தகப்பனுரை ஒருவர் கேட்டார்.

"அதோ கூரையைப் பிய்த்துக் கொண்டிருக்கிருனே, அவன்தான்" என்று அந்தத் தந்தை சுட்டிக் காட்டினுராம். பிள்ளைகளுடைய ஸ்வபாவம் தெரிந்திருந்தால் அந்த நண்பர் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்க வேண்டிய அவசியமே இல்லை.

ஆனுல் நான் சொல்லும் விஷயம் அப்படிப் பட்டதல்ல. "வியாதிகளுக்குள் நல்ல வியாதி எது?" என்று நீங்கள் கேட்க வேண்டும். "வியாதிகளுக்குள் மிகவும் நல்ல வியாதி, உபகாரமான வியாதி, ஜுரந்தான்" என்று தங்கு தடையில்லாமல் நான் சொல்லி விடுவேன். ஆம்; ஜுரத்துக்கு நல்ல வியாதி என்று ஒரு பெயர் கூடக் கொடுத்து விடலாம். பாம்புகளில் நல்ல பாம்பு இல்லையா?

அம்மைக்கு மாரியம்மன் தெய்வம் என்று கேட்டிருப் பீர்கள். வைத்திய சாஸ்திரத்துக்கும், சிகிச்சைகளுக்கும் அப்பாற் பட்டது அம்மை. ஆகையால் அதை வியாதிகளின் வரிசையிலேயே சேர்க்கக் கூடாது. ஜுரத்துக்குக்கூட ஒரு தேவதை உண்டு. திருச் சாட்டியக்குடி யென்ற ஸ்தலத்தில் அதற்குக் கோயில் இருக்கிறதாம். நம் முன்ஞேர்கள் தெரியாமலா ஜுரத்தைத் தெய்வமாகப் பாராட்டினுர்கள்? தலைவலிக்குத் தெய்வமில்லை, வயிற்று வலிக்குத் தெய்வ மில்லை. ஜுரத்துக்கு மாத்திரம் கடவுளை வைப்பானேன்? அதிலே சூக்ஷ்மம் இருக்கிறது. ஜுர நோயின் உயர்வைத்

தெரிந்து கொண்டுதான் அவர்கள் அப்படித் தெய்வமாகக் கொண்டாடியிருக்க வேண்டும்.

தலைவலி வந்துவிட்டதானால், அப்பாடி, என்ன துள்ளுத் துள்ளுகிறோம்! வயிற்றுவலியை நினைத்தாலே பகீரென்கிறது. விழுந்து புரண்டு உருண்டு கதறச் செய்கிறது அந்தப் பாழும் வியாதி. இத்தியாதி வியாதிகள் மனிதனைக் குலுக்கி அசைத்துப் புரட்டி வேதனைக்கு உள்ளாக்குகின்றன. ஆனால், ஜுரம் இருக்கிறதே, இது அப்படி அன்று. மகா சாதுவான வியாதி. மனிதன் நிச்சிந்தையாகக் கை கால் அசைக்காமல் ஓய்ந்து போய்க் கிடக்கிறான். பெரிய யோகியைப் போல அவனுக்கு ஒவ்வொரு பொருளிலும் ஆசையின்மை உண்டாகிறது. நாக்கு ருசியை மறந்து போகிறது; அதிகப் பேச்சு இருப்பதில்லை; ஆட்டம் ஓட்டம் எல்லாம் அடங்கி விடுகின்றன. முக்குணங்களுக்கும் எது காரணமென்று வேதாந்திகள் சொல்கிறார்களோ அந்த உணவிலே விரக்தி வந்து விடுகிறது. சமாதியிலே லயித்துப் பிரம்மானந்தத்தை நுகரும் ஞானிக்கு அடுத்த நிலையில் நம்மை வைத்து விடுகிறது, ஜுர தேவதை.

அந்தச் சமயத்தில் மனம் எப்படி வேலை செய்கிறது, தெரியுமா? அபூர்வமான கற்பனைகள் நம்முடைய மூளையில் உதயமாகின்றன. புதிய புதிய கதைகளுக்குச் சமாசாரங்கள் ஊற்றைப் போலக் கிளம்புகின்றன. ஜுரத்திலிருந்து எழுந்திருக்க வேண்டியதுதான். ஒரு வருஷமல்ல, இரண்டுவருஷமல்ல! மூன்று வருஷத்துக்கு அருமையான காரியங்களை ஒன்றன் பின் ஒன்றாகச் செய்து முடித்துப் புகழ்பெற்று விடலாம். அவ்வளவு சிறப்பான திட்டங்கள் மூளையிலே குவிகின்றன. 'எவ்வளவு நேரத்தை வீணாகப் போக்கி விட்டோம்! எவ்வளவு காரியங்களைச் செய்து புகழ் பெற்றிருக்கலாம்!' என்று பச்சாத்தாபம் உண்டாகிறது. 'ஒரு நாளைக்குப்

பெர்னர்ட் ஷாவைப் போலக் குறைந்தது ஆறு பக்கம் எழுதினாலும் மாசத்துக்கு நூற்றைம்பது பக்கம், வருஷத்துக்கு ஆயிரத்து எண்ணூறு பக்கம் ஆகிவிடுமே! அடேயப்பா! எவ்வளவு பெரிய காரியம்! சிறிய முயற்சியினால் பெரிய பலன். டாக்டர் வந்தவுடன் நல்ல டானிக்காகக் கேட்டு வைத்துக் கொள்ள வேண்டும். நம்முடைய நேரத்தை ஒழுங்கு படுத்திக் கொள்ள வேண்டும். யாரோடும் வீணாகப் பேசி நம்முடைய ஆயுளைக் குறைத்துக் கொள்ளக் கூடாது.' — இப்படி மிகவும் உருப்படியான திட்டங்கள் உருவாகின்றன.

இது ஒரு நிலையில் நிகழும் நிகழ்ச்சி.

தர்மா மீட்டரில் பாதரஸம் கொஞ்சம் அதிக தூரம் பிரயாணம் செய்தால், நம்முடைய மனசும் நெடுந் தூரம் பிரயாணம் செய்கிறது. நாம் நம்மையே மறந்து விடுகிறோம். ஜ்ர தேவதை தன்னுடைய விமானத்தில் நம்மை எங்கெங்கெல்லாமோ அழைத்துச் செல்கிறது.

பத்து வருஷத்துக்கு முன் காலமான நம்முடைய தாத்தாவிடம் கொண்டு போய் விடுகிறது. அவர் தம் மூக்குக் கண்ணாடியைக் கழற்றி விட்டு நம்மை வரவேற்று இனிமையாகப் பேசுகிறார். பாதி பேசிக் கொண்டிருக்கும் பொழுதே ஜ்ர தேவதையின் விமானம் நம்மைப் பீச்சுக்கு அழைத்துக் கொண்டு வந்து விடுகிறது. அந்தப் பீச்சிலே இருந்தாற் போலிருந்து நம்முடைய ஆபீஸ் அறையை நிர்மாணித்து விடுகிறது.

பாண்டு வாத்தியம், அதோடு காபிக்கொட்டை அரைக்கும் ஒலி; எருமை மாடு, அதற்கு அருகில் ஏரோப்ளேன்; அதி சுந்தரமான தோற்ற முடைய பெண், அவளுக்கு அருகில் உருவம் இன்னதென்றே தெரியாத பயங்கரமான மனிதன்.—இப்படியாகப் பல கதம்பக் காட்சிகளை நாம் காண்கிறோம்.

உலகம் மாறுகிறது; காலம் மாறுகிறது; மனிதர், பிராணிகள், ஆறு, மலை—எல்லாம் மாறுகின்றன. எல்லாம் சில நிமிஷ நேரங்களில் செய்யும் பிரயாணம்.

"இந்தா அப்பா, கஞ்சி குடிக்கிறுயா?" என்று அம்மா கேட்கும் போதுதான் நாம் பூவுலகத்திற்கு வருகிறோம். எத்தனையோ மைல்கள் பிரயாணம் செய்த நமக்குக் களைப்பாக இருக்குமென்று எண்ணித்தான் நம்முடைய தாய் கஞ்சியை வைத்துக் கொண்டு காத்துக் கொண்டிருக்கிருள்!

"அஞ்சு நிமிஷமாகக் காத்துக் கொண்டிருக்கிறேன். மயக்கமாக இருந்ததோ? பயமாய்ப் போய் விட்டதே!" என்று அவள் அங்கலாய்க்கும் போதுதான் நமக்காக அவள் காத்திருப்பது தெரிய வருகிறது.

மயக்கமா! சட்! யார் சொன்னது? நாம் எவ்வளவு தூரம் விமானத்திலே பிரயாணம் செய்து விட்டு வருகிறோம்; இவ்வளவு தூரம் போய்வர இந்தச் சிறிது நேரம் ஆனது ஒரு பிரமாதமா?

இந்த மாதிரியான இன்ப அநுபவங்களை எந்த வியாதி ஐயா தருகிறது? தலைவலி தருமா? கண்வலி கொடுக்குமா? ஜுரம் ஒன்றுதான் தரும். ஆகவேதான் அது வியாதிகளுக்குள் விரும்பத் தக்கது என்று சொல்லுகிறேன்.

# தன் கையே

அவரவருடைய சொந்தக் காரியங்களை அவரவர் செய்து கொள்வது மிகவும் நல்லது என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். இந்தச் சொந்தக் காரியம் என்பதற்கு எது எல்லையென்று நிர்த்தாரணம் செய்பவர் யாரும் இல்லை. நாமே சாப்பிட வேண்டும், நாமே வேட்டி கட்டிக்கொள்ள வேண்டும், நாமே பல் தேய்க்கவேண்டும். இந்த விஷயங்களில் தன் கையே தனக்குதவி என்பது மிகவும் சரி. ஆனால் மற்றக் காரியங்களைப் பற்றி யோசிக்கும் போதுதான் எது தானே கவனித்துக்கொள்ள வேண்டியது என்ற விஷயத்தில் அபிப்பிராய பேதம் எழுகிறது.

எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்கிறோம். இது நம்முடைய சொந்தக் காரியம். இதை நாமே செய்து கொள்ள வேண்டுமென்றுதான் தோன்றுகிறது. ஆனால், சிலர் பிறருடைய கையை எதிர்பார்க்கிறார்கள், எண்ணெய் தேய்க்கும் வேலைக்காரனுடைய கையைத்தான் சொல்கிறேன். க்ஷவரம் பண்ணிக்கொள்வதற்குப் பிறர் கையை எதிர்பார்ப்பதைவிடத் தானே பண்ணிக் கொள்வது இந்தக் காலத்து நாகரிகம் ஆகிவிட்டது; பல் தேய்ப்பதும் க்ஷவரம் பண்ணிக்கொள்வதும் தானே செய்து கொள்ளும் சொந்த வேலைகள் ஆகிவிட்டன.

இதெல்லாம் இருக்கட்டும். அவரவர் துணியை அவரவர் துவைத்துக் கொள்வது அவசியமா இல்லையா? இதைப் பற்றித்தான் முக்கியமாகச் சர்ச்சை செய்ய எண்ணுகிறேன். பணக்காரர் வீடுகளில் துணிகளைத் துவைக்க

ஆட்கள் இருக்கிறார்கள். பணக்காரர்களை நாம் உதாரண மாகக் கொள்ளக்கூடாது. அவர்களுக்கு ஒன்றுகூடச் சொந்தமாகச் செய்துகொள்ளாமல் இருந்தால் சந்தோஷ மாக இருக்கும். காலையில் எழுந்தவுடன் படுக்கையை வேலை யாள் சுருட்டி வைக்கவேண்டும். பல்லை ஒருவர் தேய்த்து விடவேண்டும். வேலைக்காரன் வெந்நீரை மேலே விட வேண்டும். ஒருவன் உடம்பைத் தேய்க்க வேண்டும். பிறகு வேலைக்காரனே உடம்பைத் துடைத்து ஆடையை உடுத்த வேண்டும். சின்னஞ் சிறு குழந்தை எப்படி எல்லாக் காரியங்களையும் பிறரைக் கொண்டு செய்து கொள்ளு கிறதோ அப்படி இருக்கவேண்டுமென்பதே பணக்காரர்கள் ஆசை. அவர்கள் தங்கள் துணிகளைத் தாங்களே துவைத் துக் கொள்ளவாவது! குடியே கெட்டுப் போகாதா?

நடுத்தர வாழ்க்கையை உடையவர்கள் என்று இப் போது ஒரு வகுப்பினர் உண்டாகியிருக்கிறார்களே, அவர்கள் என்ன செய்கிறார்கள்? அவர்கள் தங்கள் துணி களைத் தாங்களே துவைத்துக் கொள்வதில்லை. அதற்குக் காரணம் அவர்களுடைய சோம்பல் அன்று; செலவிடும் யோக்கியதையும் அன்று. உண்மையில் அந்த விஷயத்தில் அவர்களுக்குச் செலவே ஏற்படுவதில்லை. அவர்களுடைய தர்ம பத்தினிமார் அந்த வேலையைச் செய்து விடுவார்கள். அவர்களை வற்புறுத்துகிறவர் யாரும் இல்லை. யாரோ சில பெண்மணிகள் இந்த வழக்கத்தை ஏழைகளிடமிருந்து முதல் முதலில் கற்றுக் கொண்டிருக்கவேண்டும். அல்லது ஏழைகளாக இருந்து, நடுத்தர வகுப்புக்கு உயர்ந்தவர் களாக இருக்கவேண்டும். அவர்களைப் பார்த்து மற்றவர் களும் அப்படிச் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். நாளடை வில் இது வழக்கமாகி விட்டது.

வழக்கமாகிவிட்டால் அதில் உண்டாகும் விருப்பம் மறைந்துவிடும்; சில சமயங்களில் அருவருப்புக் கூட

ஏற்படும்; தலை விதியே என்று செய்யவேண்டிய நிலை வந்துவிடும். முதலில் தம்முடைய துணியைத் துவைக்கத் தம் காதலிமார் முற்பட்டபொழுது வேண்டாம் என்று தான் கணவன்மார் தடுத்திருக்கவேண்டும். அவர்கள் வற்புறுத்தவே தடுக்காமல் இணங்கி யிருப்பார்கள். நாளாக ஆக அது வழக்கமாகி விட, இப்போதெல்லாம் அது சமையல் வேலையைப் போலப் பெண்களுக்கே உரியது என்ற எண்ணம் வந்து விட்டது. நாலு நாளானாலும் அவர்கள் துவைக்கட்டும் என்று போட்டு வைப்பார்களேயன்றி, ஒரு நாள் நாமும் துவைக்கலாமே என்று தோன்றாது.

இதெல்லாம் பட்டண வாசத்துச் செய்தி. கிராமங்களில் வேறு நிலையைக் காணலாம். அதுவும் ஆற்றங்கரையாக இருந்து விட்டால் அவரவர் துணியை அவரவர் துவைத்துத் கட்டி மகிழ்வார்கள்.

துணி துவைப்பதே ஒரு கலை. இந்தக் கலையின்பத்தை நித்தம் சலவைத் துணியை உடுக்கும் ஜனங்கள் அறியார். காவேரி மணலில் ஊற்றுப் போட்டுத் துவைத்து உலர்த்தி வைத்து அந்த ஆடையை உடுத்துக் கொள்ளும் இன்பத்துக்குச் சமானமாக எதைச் சொல்லலாம்? தானே பட்டை போட்டு நூல் நூற்று அந்த நூலால் தானே தறி நெய்து உண்டாக்கிய ஆடையை ஒருவன் கட்டிக் கொண்டால் எத்தனை இன்பம் இருக்கும்? அதை வேண்டுமானால் ஒப்புக் கூறலாம்.

துணி துவைக்கப் புதிதாக ஊற்றுப் போடுவதுகூட ஒரு கலைதான்; அல்லது வேட்டி துவைக்கும் கலையில் முதல் அங்கம் என்று சொல்லலாம். அதற்கென்று மரத்தால் செய்த ஒரு கருவி உண்டு. ஊற்றுப்பட்டை என்று சொன்னால் துவைத்தற் கலையைத் தெரிந்தவர்களுக்குத் தெரியும். பட்டணவாசிகளுக்கு இஸ்திரிப் பெட்டி எவ்வளவு சுலபமாகத் தெரியுமோ, அவ்வளவு சுலபமாக

ஊற்றுப் போட்டு ஆடை துவைப்பவர்களுக்கு ஊற்றுப் பட்டை தெரியும். நேரம் இருந்து மனமும் இருந்தால் இரண்டு ஊற்றுப் போட்டு ஓர் ஊற்றில் துவைத்து விட்டு மற்றோர் ஊற்றில் அலசுவார்கள். நன்றாகத் துவைத்துப் பிழிந்து முறுக்குக் கலையாமல் வேறு ஊற்றில் போட்டுவிட்டால் அந்த முறுக்கு மெல்ல மெல்லப் புரிவிட்டுத் தூய தண்ணீரில் மிதப்பதைப் பார்க்க வேண்டுமே! நல்ல கவிஞனாக இருந்தால் அந்தக் காட்சியை வருணித்து ஒரு பாட்டே பாடிவிடுவான்.

தோய்க்கும் போது தெரியும் மனிதனுடைய சுபாவம். ஏதோ கடன் இழவுக்குத் தோய்ப்பவனாக இருந்தால் தப்புத் திப்பென்று கல்லிலே மோதுவான். துவைப்பதிலே இன்பங் காணுபவர்கள் அப்படிச் செய்யமாட்டார்கள். படார் படார் என்ற சத்தமே அவர்கள் தோய்க்கும் போது வராது. சலக் சலக்கென்றுதான் கேட்கும். துவைக்கும் போதே ஒரு சுண்டு சுண்டினால் ஆடையிலுள்ள அழுக்கெல்லாம் நெளிந்து சுருண்டு நுனியிலே போய் நிற்கும். பிறகு துவைத்தால் பளீரென்று சிதறுண்டு போகும்.

பெரிய கல்லைப் பிளக்கும் கல் தச்சனுக்கும் சிறிய கல்லில் விக்கிரகம் செதுக்கும் சிற்பாசாரிக்கும் வித்தியாசம் உண்டு. வேட்டி துவைக்கும் விஷயத்தில் கல்லை மோதுகிறவன் கல் தச்சனைப் போன்றவன். குலுக்கி மடித்து மெல்லச் சுண்டித் தோய்க்கிறவன் சிற்பாசாரியைப் போன்றவன். துவைப்பதைக் காட்டிலும் இரண்டு மூன்று அடி அடித்தவுடன் நுனியைச் சுருட்டிக் கசக்குவதில்தான் இருக்கிறது சூட்சுமம். கசக்கிப் பிறகு எடுத்து உதறினால் நுனியில் வந்து சேர்ந்த அழுக்குப் போகும்; பிறகு தண்ணீரில் அலசினால் மிச்சம் இருக்கிற கொஞ்ச நஞ்சம் அழுக்கும் போய்விடும்.

இந்தக் கலையில் பழங்காலத்து வைதிகப் பிராமணர்கள் தேர்ந்தவர்கள். அவர்களுடைய தூய ஆடைகள் சீக்கிரத்தில் அழுக்காவதில்லை; கிழிவதும் இல்லை.

தன்னுடைய ஆடையைத் தானே துவைத்தால்தான் அதை அழுக்காக்கக்கூடாது என்ற உணர்ச்சி வரும். வண்ணனுக்குப் போட்டுக்கொள்ளலாம் என்ற தைரியத்தால் நாம் ஆடையை விரைவிலே சாணிச் சுருணை ஆக்கிவிடுகிறோம். அதனால் எவ்வளவு மனித சக்தி வீணாய்விடுகிறதென்று நாம் நினைத்துப் பார்ப்பதில்லை.

வேட்டி துவைத்த பிறகு அதைப் பிழிந்து மடித்துத் தட்டிக் கொட்டிக் கொடியில் உலர்த்தவேண்டும். எல்லோருக்கும் மடியை உலர்த்தத் தெரியும் என்று நினைத்துவிடாதீர்கள். இரண்டு தலைப்பையும் ஒன்றாகச் சேருமாறு உலர்த்துவதற்குப் பழக்கம் வேண்டும். முன்னாலேயே அதற்கேற்றபடி கொசுவிக்கொள்ள வேண்டும். கொடியிலே போட்டுவிட்டு மடிக்கோலை அசைத்து ஆட்டிப் பயன் இல்லை; கழுத்துத்தான் வலியெடுக்கும்.

இப்படித் துவைத்து உலர்த்தின ஆடையை மறுநாள் காலையில் எடுத்து அணிந்தால் நமக்கு எத்தனை ஆனந்தம் உண்டாகிறது தெரியுமா? மொடமொடவென்று இருக்கும். பட்டுத் துணியைக் கட்டிக்கொண்டால்கூட அவ்வளவு ஆனந்தம் உண்டாகாது.

ஆடை அப்பழுக்கில்லாமல் இருப்பது மட்டும் அல்ல; இதனால் நமக்கு உடற்பயிற்சி ஏற்படுகிறது. நன்றாகத் துவைக்கிறோம்; அதனால் உடம்பு வளைகிறது; பிறகு நீராடுகிறோம். கவாத்துப் பழகவேண்டிய அவசியம் இல்லாமலே தூய்மையும் பலமும் ஒருங்கே நமக்குக் கிடைக்கின்றன.

தன் துணியைத் தானே துவைக்கவேண்டியது கடமை என்று உணர்ந்தவர் பெரியோர். பழங்காலத்தில் வாழ்ந்த

இரட்டையர் என்ற புலவர்கள் அப்படிச் செய்தவர்களே. ஒரு நாள் தோய்க்கும்போது ஆடை ஆற்றிலே நழுவி விட்டது. அப்போது அவர்கள் பாடிய பாட்டு ஒன்று உண்டு.

**அப்பிலே தோய்த்திட் டடுத்தடுத்து நாம்அதனைத்**
**தப்பினால் நம்மையது தப்பாதோ**

என்று இரட்டையருள் ஒருவர் சொன்னாராம். மற்றவர்,

**—செப்பக்கேள்**
**இக்கலிங்கம் போனாலும் ஏகலிங்க மாமதுரைச்**
**சொக்கலிங்கம் உண்டே துணை**

என்று பாட்டை முடித்தாராம். ஆடையை இழந்தபோது பாடின பாட்டாக இருந்தாலும், துணி துவைக்கும் கலைஞர் கூட்டத்தில் அவர்களும் சேர்ந்தவர்கள் என்ற செய்தியை அது தெரிவிக்கிறது.

கவிஞர் மேற்கொண்ட கலையென்று சொன்னால் அதைப்பற்றி ஒரு கவிதை மாத்திரம் உண்டானது போதாது; காவியமே எழுந்திருந்தால் நன்றாக இருக்கும்.

# புலவர் போற்றிய பொடி

அவசியம் இல்லாமல், கூட இருப்பவர்களுடைய சகவாச தோஷத்தினுல் மனிதனுக்கு எத்தனையோ பழக்கங்கள் உண்டாகின்றன. புகையிலை, பொடி, சுருட்டு, வெற்றிலை பாக்கு முதலிய சிறிய பழக்கங்களை நாம் அவ்வளவாகக் கெடுதி உள்ளவைகளாக நினைப்பதில்லை. ஆனுலும் அந்தப் பழக்கங்களை உடையவர்களே சில சமயங்களில் ஞானேதயம் வந்தாற்போல, "சே, சே! கெட்ட பழக்கம் ஐயா!" என்று சொல்வதைக் கேட்கிறேம்.

அந்தப் பழக்கங்களால் ரூபாய் ரூபாயாகச் செலவாகிறதில்லை. அவற்றை உடையவர்களால் மற்றவர்களுக்குத் தீங்கு நேருகிறதில்லை. ஆகையினுல் அந்தப் பழக்கங்களைச் சமுதாயம் அநுமதிக்கிறது. சில குழந்தைகள் கட்டை விரலைச் சூப்பிக்கொண்டே இருக்கின்றன. அதை நாம் தடுக்கிறேமா? அதுபோன்ற நிலையில்தான் இந்தப் பழக்கங்களும் இருக்கின்றன.

சிகரெட் குடிக்கும் பழக்கத்தைப் பற்றி எனக்கு அதிகமாகத் தெரியாது. அதைக் குடிப்பது நாகரிகத்தின் அம்சம் என்று கருதுபவர்கள் பலர் என்பதை நான் அறிவேன். சில இளைஞர் கூட்டத்தில் சிகரெட் குடிக்காதவர்கள் பரிகாசத்துக்கு உள்ளாகிறுர்கள்.

பொடி, புகையிலை இந்த இரண்டும் சிகரெட்டுப் பழக்கத்தைப்போல நாகரிகத்தின் அடையாளமாகக் கருதப் பெறுவதில்லை. காரணம் சிகரெட்டைவிடக் குறைந்த செலவில் இந்த இரண்டும் நடப்பதுதான். அதோடு கிரா

மங்களிலும் பொடியும் புகையிலையும் புகுந்துகொண்டிருப்பதும் ஒரு காரணம் என்று சொல்லலாம். நாகரிகம் என்பது நகரத்திலே உண்டாக வேண்டும். அங்கிருந்து அது பிறகு கிராமத்துக்குச் செல்லும்.

புகை குடிப்பதே நாகரிகத்தின் அம்சம் என்று சொல்லவும் முடியாது. பீடியும் புகையிலைச் சுருட்டும் புகை குடிக்கும் வழக்கத்தில் கீழ்ப்படியில் இருப்பவை. அவற்றைக் குடிப்பவர்களை நாகரிகக் கனவான்களாகக் கருதுகிறோமா? இல்லையே! அந்த இரண்டும் சிகரெட்டைப்போல விலை உயர்ந்த பொருள்கள் அல்ல.

பொடிப் பழக்கம் தமிழ் நாட்டில் மிகவும் பரவி யிருக்கிறது. மற்ற நாட்டைப்பற்றி எனக்குத் தெரியாது. தெரியாத விஷயத்தில் புகுந்துகொண்டு அல்லல்படுவானேன்? அதுவும் ஒரு பொடி விஷயத்திற்காக!

பொடி, புகைச்சுருட்டு ஏற்பட்ட பிறகே ஏற்பட்டிருக்க வேண்டும். புகையிலை என்ற பெயரே அந்த இலை முதல் முதலாகப் புகை குடிக்க உதவியது என்ற உண்மையைத் தெரிவிக்கிறது. சுருட்டுக் குடிக்கும் வழக்கந்தான் முதலில் இந்த நாட்டில் உண்டாகி இருக்கவேண்டும். தெலுங்கு தேசத்தில் சுருட்டுக் குடிக்கிறதை அநாசாரமாகக் கருதுவதில்லை. இங்கே வைதிகர்கள் பொடி போடுகிறார்கள், புகையிலை போடுகிறார்கள்; ஆனால் சுருட்டுக் குடிப்பதில்லை. புகையிலையை மூன்று ரூபங்களில் உபயோகிக்கும்போது அதற்குப் பெயரைத் தந்த முதல் உபயோகமாகிய புகை குடிப்பதை மாத்திரம் அநாசாரமென்று விலக்குவானேன்?

புகை குடிக்கும்போது சுருட்டை வாயினால் குடிக்கிறோம். கையிலே பற்றிக் கொள்கிறோம். அது எச்சில் அல்லவா? புகையிலை இங்கே புகுந்த காலத்தில் சுருட்டாக

உபயோகப்பட்டது. அதன் மனோரம்யமான மணம் எல்லோரையும் ஆட்கொண்டது. தாங்களும் குடிக்கவேண்டுமென்று நினைத்தார்கள். ஆனால் எச்சில் பண்ண வேண்டுமே! சரி, புகையைக் குடிப்பதைவிட ரஸத்தைக் குடிக்கலாமென்று ஒருவர் ஆரம்பித்தார். பிறகு புகையிலை போடுதல் வழக்கத்துக்கு வந்துவிட்டது!

புகையிலையை வாயிலே போட்டால் கொஞ்சம் மயக்கம் வருகிறது. அது பிடிக்காத சிலர் அதன் அற்புத மணத்தை மாத்திரம் அநுபவிக்க எண்ணினார்கள். அடுத்த விளைவு பொடி.

சொக்குப் பொடி என்று ஏதோ ஒன்று இருக்கின்றதாம். அதைப்போட்டு மயக்கலாம் என்று சொல்வார்கள். மூக்குப் பொடிதான் இந்தக் காலத்துச் சொக்குப் பொடி.

காதலன் காதலியரிடையே உள்ள அன்பின் திறம் அவர்கள் சேர்ந்து வாழும்போது அவ்வளவு தென்படாது. அவர்கள் பிரிந்திருக்கும்போது பார்க்க வேண்டுமே, அவர்கள் படும் அவஸ்தையை! அப்போதுதான் கவிகளுக்குக் காவியம்பாடச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. அது போலத்தான் பொடியின் மகத்துவத்தை அது கிடைக்காதபோது பொடிக்காதலர் படும் வேதனையைக் கண்டு தெரிந்து கொள்ளலாம்.

யாரோ ஒரு ராஜா குதிரையின்மீது போய்க் கொண்டிருந்தாராம். நடு வழியில் பொடி டப்பியை எடுத்தார்; பொடி இல்லை. பக்கத்தில் வருபவர்கள் பொடிபோடும் பழக்கம் இல்லாதவர்கள். ராஜாவுக்கு ஒன்றுமே ஓடவில்லை. குதிரை போய்க் கொண்டிருந்தது. ஆனாலும், லகானைப் பிடிக்கக் கையில் திராணியில்லை. ஒரே ஏக்கமாக ஏங்கிச் சோர்ந்து வாடியிருந்தபோது, அவர் திடீரென்று குதிரையை நிறுத்திக் கீழே குதூகலத்தோடு துள்ளிக் குதித்தார். மற்ற

வர்களெல்லாம் ஆச்சரியத்தினுல் ஒன்றும் தோன்ருமல் விழித்தார்கள். பக்கத்தில் ஒரு வயலில் யாரோ உழவன் உழுதுகொண்டிருந்தான். வெகு விரைவாக அரசர் அவனிடம் ஓடினுர். அப்போதுதான் அவன் தன் பொடி மட்டையிலிருந்து ஒரு சிட்டிகைப் பொடியெடுத்து உறிஞ்சி இடுப்பில் செருகிக் கொண்டிருந்தான். "ஐயா, ஐயா, இங்கே ஒரு சிட்டிகை போடும்" என்று பல்லைக் காட்டிக் கொண்டு அவன் முன்னே அரசர் நின்ருர். அவன் பொடி மட்டையையே எடுத்துக் கொடுத்து விட்டான். அந்த நாசிகாமிர்தம் உள்ளே போனபிற்பாடுதான் அரசருக்கு நல்ல உணர்வு வந்தது. பொடிகொடுத்த அந்த உழவனுக்கு ராஜா பிறகு ஒரு ஜாகீரையே கொடுத்தாராம்.

ராஜாவும் உழவனுமே எங்கும் இருக்கிருர்களா? கலெக்டர் சேகவனிடம் பொடி வாங்கிப் போட்டுக் கொள்கிருர். வாத்தியார் இந்தக் காலத்தில் மாணக்கனிடம் பொடி வாங்கிப் போடுகிருர். எஜமான் தொழிலாளியிடம் கையை நீட்டுகிருர். பொடியைப் போலச் சமதர்ம உணர்ச்சியை உண்டாக்கும் பொருள் உலகில் வேறு ஒன்று இருக்கிறதா?

ஒரு பழைய புலவர் "புகையிலை விடுதூது" என்ற தமிழ்ப் பிரபந்தத்தில் புகையிலைக்கு உள்ள மாகாத்மியத்தையெல்லாம் சொல்கிருர். அரசன் உழவனிடம் கையேந்தி நிற்பது பெரிதல்ல. மற்றவர்களிடம் தன்னுடைய வாக்குச் சாதுரியத்தைக் காட்டி வெல்லும் நாவலன் இருக்கிருனே, அவன்கூடப் பொடி இல்லாதபோது கையை நீட்டிக் காட்டுகிருனும். சொல்லாற்றலைக் காட்டும் துடியான பேர்வழிகளைக்கூட ஊர் பேர் தெரியாதவர்களிடம் பல்லைக் காட்டும்படி வைத்து விடுகிறது புகையிலை.

> **சொற்காட்டும் நல்ல**
> **துடிகாரர், ஆரையும்போய்ப்**
> **பற்காட்ட வைத்த பழிகாரா!**

என்பது அவர் பாட்டு.

புலவரே தம்முடைய சொந்த அநுபவத்திலே பல்லைக் காட்டிக் கேட்டிருப்பார். இல்லாவிட்டால் இவ்வளவு தெளிவாகச் சொல்ல வருமா? அவரே சொல் காட்டும் நல்ல துடிகாரர் ஆயிற்றே!

ஆனால் "பழிகாரர்!" என்று வைதிருக்கிறாரே, ஏன்? அது வசவு அல்ல. அதிகச் சந்தோஷம் வந்துவிட்டால் சில பேருக்கு இந்த மாதிரி வார்த்தைகள் வரும். சங்கீத வித்துவான் நன்றாகப் பாடுகிறார். மிகவும் ரசமான கட்டத்தில், "ஐயோ!" என்று சொல்கிறவர்கள் இல்லையா? "எப்படிப் பாடினார்?" என்று கேட்டால், "கொன்னுட்டான் போ" என்று சொல்பவர்களை நாம் கேட்டதில்லையா? தம் குழந்தை அருமையாக இரண்டு வார்த்தைகள் சொல்லி விட்டால் அமிதமான சந்தோஷத்தில், "சீ போக்கிரி நாயே!" என்று கொஞ்சுகிறார்களே, அப்போது அவர்கள் குழந்தையை வையவா வைகிறார்கள்? இல்லை. அந்த வார்த்தைகள் சந்தோஷத்தின் உச்சஸ்தாயியிலே வருகின்றன. அப்படித்தான், சொந்த அநுபவத்தினால் பொடி மகத்துவத்தை அறிந்த புலவர் பேசுகிறார். "பழிகாரா!" என்பது, சொற்களையெல்லாம் கடந்து நிற்கும் அவர் உவகையைக் காட்டும் அடையாளம்.

**சொற்காட்டும் நல்ல**
**துடிகாரர், ஆரையும்போய்ப்**
**பற்காட்ட வைத்த பழிகாரா!**

என்பது புகையிலைக்கு அவர் பாடும் மெய்க்கீர்த்தி.

## அடையாளம்!

என்னிடம் அடிக்கடி புத்தகம் இரவல் வாங்கிப் போகப் பலர் வருவார்கள். அநேகமாக நேரே புத்தகம் வைத்திருக்கும் அலமாரிகளை மிகவும் உரிமையோடு அணுகித் தம்முடைய மனம் போனபடியெல்லாம் புத்தகங்களைப் புரட்டிப் பார்ப்பார்கள். நான் அதைக் கவனித்துக் கொண்டே இருப்பேன். 'ஏதடா, இந்த மனுஷன் இருக்கிறானே; இவனுக்குச் சொந்தமான புத்தகங்களை இவ்வளவு அலங்கோலமாகக் கலைக்கிறோமே' என்று கடுகளவாவது அவர்களுக்கு எண்ணம் இருக்க வேண்டுமே! ஊஹூம். நான் தான் ஒன்றும் சொல்வதில்லையே! அவர்கள் எதற்காகச் சங்கோசப்பட வேண்டும்?

அவர்கள் கலைத்தால் கலைக்கட்டும்; அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். வேண்டிய புத்தகத்தை எடுத்துக் கொண்டு மற்றவற்றைப் பழையபடியே ஒழுங்காக அடுக்கி வைக்கக் கூடாதா? விருந்து சாப்பிட்டவன் எச்சில் இலையைப் பற்றிக் கவலைப் படுவதில்லை. அது மாதிரி தம் கையிலே எடுத்துக் கொண்ட புத்தகத்தைத் தவிர மற்றவை கிடக்கும் கோலத்தைப் பற்றி அவர்களுக்கு அக்கறை இல்லை. "கொஞ்சம் புத்தகங்களைப் பழைய படியே அடுக்கி வைத்து விடுங்கள்" என்று சொல்லி விட்டாலோ, நண்பர்களுக்கு ஞாபக சக்தி தீட்சண்யமாகிவிடும். "அடடா! சரியாக ஒன்றரை மணிக்கு அவரை வரும்படி சொல்லியிருந்தேன். மணி ஒன்றே கால் ஆகி

விட்டதே! என்ன முட்டாள் தனம் பாருங்கள். இங்கே இருந்த புத்தகங்களைப் புரட்டிக் கொண்டு இருந்து விட்டேனே! சரி, நான் வருகிறேன். புத்தகங்களை அடுக்கி வைக்காமல் போகிறேனே என்று கோபம் கொள்ளாதீர்கள்" என்று போய்விடுவார்கள்.

'கொள்ளு என்றால் வாயைத் திறக்கும்; கடிவாளம் என்றால் மூடிக்கொள்ளும் குதிரை' என்பார்கள். அப்படித் தான் இருக்கிறது இத்தப் புத்தகக் காதலர் செய்கை.

★

**பு**த்தகம் வாங்கிக் கொண்டு போனால் ஜாக்கிரதையாக வாசித்து விட்டுச் சீக்கிரம் திருப்பிக் கொண்டு வந்து கொடுத்து விடவேண்டாமோ? புத்தகத்தை அவர் வாசிக்கிறாரா என்பதே சந்தேகம். "அவள் நச்சுப் பொறுக்க வில்லை; உங்களிடம் வந்தேன்" என்று முதலிலேயே உண்மையை வெளியிடும் அன்பர்களும் சிலர் உண்டு. அந்த மனைத்தெய்வங்களிடம் அவர்கள் அகப்பட்டுக் கொண்டு விழிப்பதை மாற்றப் புத்தகங்களைக் கொண்டுபோய்க் கொடுக்கிறார்கள். அவர்களுக்குப் பதிலாகப் புத்தகங்கள் அந்த மெல்லியலாரிடம் அகப்பட்டு விழிக்கின்றன!

என் புத்தகம் யார் வீட்டுக்காவது போய்த் திரும்பி வந்தால் அது பல வாசனையுடன் வரும், பலவகையான சுவடுகளும் சின்னங்களும் தாங்கி வரும். சிலசமயங்களில் கடைசி அட்டையில் வண்ணான் கணக்கு இருக்கும். சில சமயங்களில் கடைசியில் உள்ள காகிதத்தில் எந்தக் குழந்தையாவது தன்னுடைய எழுத்துத் திறமையைக் காட்டியிருக்கும்.

ஒருநாள் என் புத்தகங்களில் ஒன்று, அட்டைமேல் ஒரே எண்ணெய்ச் சிக்காக என்னிடம் வந்து சேர்ந்தது.

நண்பர் அதைத் திருப்பிக் கொடுக்கும்போது, "என்ன இப்படி இருக்கிறது?" என்று கேட்டேன், "நம் வீட்டுக் குழந்தைகள் விஷமம் ஸார்" என்று சொல்லி அந்த விஷமத்தை நானும் ரசிப்பேனென்று நினைத்தாரோ, என்னவோ, ஹி, ஹி என்று இளித்தார். துப்பறிந்து விசாரிக்கப் போனால் உண்மை வெளியாயிற்று. அவருடைய தர்ம பத்தினி மூன்று நாள் அதைத் தலையணையாக வைத்துக் கொண்டு இன்புற்றாளென்று தெரிய வந்தது.

குழந்தைகள் உள்ள வீட்டுக்குப் புத்தகம் போய் விட்டு உருப்படியாக வருவதென்பது அரிது. அதுவும் இரண்டு குழந்தைகளின் போட்டிக் கிடையே அது அகப்பட்டால் யுத்த வீரனைப் போல் வடுவுடன்தான் வெளியேறும். பெண் குழந்தையின் மஞ்சள் கறை, குட்டிப் பாப்பாவின் மை, அம்பியின் பென்ஸில் கோடு, மாமியின் அடுப்புக்கரி—இத்தனையும் என் புத்தகத்தில் புது அலங்காரங்களாக ஏறிவிடும். புத்தம் புதுப் புத்தகமாகச் சென்றது திரும்பி வரும்போது பற்றற்ற சந்நியாசி போல, அட்டைக்கும் தனக்கும் சம்பந்தம் இல்லாமல் வரும்.

சில புத்தகங்களில் ஏடுகள் மூலை மடங்கியிருக்கும். வாசித்தவர்கள் அடையாளம் வைத்ததன் சின்னம் அது. சில சமயங்களில் வாடின தாழம் பூ மடலொன்று இடையிலே இருக்கும். அதுவும் வாசித்த அடையாளந்தான். ஏதாவது காகிதம் சிலசமயம் இருக்கும். ஒரு புத்தகத்தில் யாரோ கோணல் எழுத்திலே கிறுக்கின கடிதம் அடையாளமாக இருந்து என் கைக்கு வந்தது. யாராவது ஒருரூபாய் இரண்டு ரூபாய் நோட்டுக்களை அடையாளமாக வைத்திருக்க மாட்டார்களா என்று பார்க்கிறேன். இதுவரையில் அப்படி ஒருவரும் செய்யவில்லை.

புத்தகம் வைத்துக் கொண்டு, கொடுக்க மாட்டேன் என்று சொல்வது பாவம் என்று அன்பர்களுக்குத் தாராள

மாக அவற்றைக் கொடுத்து உதவுகிறேன். அப்படிக் கொடுத்தால் கொஞ்சம் புண்ணியம் கிடைக்கட்டுமே என்று கூட நினைத்திருந்தேன். அந்த நினைப்புக்கு இனி இடமில்லை. காரணம் இதுதான்.

என் நண்பரொருவர் திருப்பிக் கொண்டு வந்து தந்த புத்தகத்தை ஒருநாள் பிரித்தேன். திருக்குறள் புத்தகம் அது. கொல்லாமை என்ற அதிகாரத்தில் ஏதோ ஒரு பாட்டு ஞாபகத்துக்கு வரவில்லை. புத்தகத்தை எடுத்தேன். 'கொல்லாமை' என்ற அதிகாரத்தைப் பிரித்துப் பார்த்தேன். தூக்கிவாரிப் போட்டது! அதிகாரத்தில் பத்துப் பாட்டும் கொல்லாமையைப் பற்றிக் கூறின. கொல்லா உபதேசத்துக்கு அருகிலே அநியாயமாக ஒரு கொலை நடந்திருந்தது. சிறிய விட்டில் பூச்சி ஒன்று கொல்லாமையதிகாரத்தில் தன் பிராணனை விட்டிருந்தது. நிச்சயமாக அது படித்தவர் வைத்த அடையாளமாக இருக்க நியாயம் இல்லை.

உலகத்தின் போக்குக்கு அந்தப் பூச்சி அடையாளமாக இருந்தது. கொல்லாமை உபதேசம் நடக்கும் இடத்திலேயே கொலையும் நடக்கிறது என்ற உண்மையை அந்தப் பூச்சி எனக்குத் தெரிவித்தது.

புத்தகம் கொடுக்காமல் மறுத்தால், 'இயல்வது கரவேல்' என்ற பாட்டி மொழியை அலட்சியம் செய்த பாவம் நேரும். புத்தகத்தைக் கொடுத்தாலோ இத்தகைய உயிர்க்கொலைக்கு உடந்தையாக இருந்த பாவம் வந்து சேரும். இந்தத் தர்ம சங்கடத்துக்கு நான் என்ன செய்வேன், ஈசுவரா!

# படாத காலிலும் படும்

இது மண்டையை உருட்டி மூளையை முடுக்கிச் செய்யும் தத்துவ ஆராய்ச்சி அல்ல. தினந்தோறும் வாழ்க்கையிலே நடக்கும் சமாசாரந்தான்; உண்மையான செய்தி; காலிருப்பவர்களும் கருத்திருப்பவர்களும் தெரிந்து கொண்ட பழைய சமாசாரந்தான். ஆனால் இதைப்பற்றி யாரும் தனியாக யோசித்ததில்லை; அதனால் இந்த விஷயம் இப்போதைக்குப் புதுமையாக இருக்கலாம்.

"பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்' என்ற பழமொழியைப் பாட்டியும் சொல்கிறாள்; பேத்தியும் சொல்கிறாள். தோட்டியும் சொல்கிறான்; தொண்டைமானும் சொல்கிறான். வேதாந்தியும் சொல்கிறான்; சம்சாரியும் சொல்கிறான். எல்லோருடைய வாக்கினாலும் பலகோடி நூறாயிரந்தடவை உச்சரிக்கப்பட்டு இந்தப் பழமொழி இப்போது ஒரு மந்திரத்தைப் போல வழங்கி வருகிறது. நல்ல வேளையாக, "பட்ட காலிலே படும்" என்று மாத்திரம் சொன்னார்களே ஒழிய அதிலே ஒரு தானைக் கலந்து குழப்பி வைக்கவில்லை; "பட்டகாலிலேதான் படும்" என்று சொல்லியிருந்தால் அதற்குமேலே சிந்திக்கவே இடமில்லை.

எனக்கு இங்கே ஒரு கதை ஞாபகத்துக்கு வருகிறது. பொடுதலை என்பது ஒரு பச்சிலை. அதைச் சில புண்களுக்கு வைத்துக் கட்டுவார்கள். வழுக்கைத் தலையைக்கூடப் பொடுதலை என்று சொல்லலாம். ஒரு வைத்தியர் யாரோ ஒரு மட சாம்பிராணியின் பிள்ளைக்கு வைத்தியம் பண்ணினார்.

அந்தப் பிள்ளைக்குக் காலில் புண். "பொடுதலையை வைத்துக் கட்டு" என்று வைத்தியர் உத்தரவு செய்துபோய் விட்டார். அந்த மனுஷனுக்குப் பொடுதலையென்ற மூலிகை இருப்பது தெரியாது. யாரோ வழுக்கைத் தலையுடைய சாது ஒருவர் ஊருக்கு வந்திருந்தார். அவர் தலையைப் பார்த்தவுடனே அந்த மனுஷனுக்குச் சந்தோஷம் கரை கடந்துவிட்டது. அவரை ஆசார உபசாரம் செய்து அழைத்து வந்து சமயம் பார்த்துப் பெரியவரை அமுக்கிப் பிடித்துத் தன் பிள்ளையின் காலோடு அவர் தலை சேரும்படி வைத்துக் கட்டிவிட்டான். பெரியவர் ஒன்றும் பண்ண முடியாமல் அந்த நோயாளிக்கு அருகிலே கிடந்தார்.

நல்ல வேளையாக அன்று மாலையே வைத்தியர் வந்தார். நோயாளியின் காலோடு பெரியவரைக் கட்டியிருந்த அலங் கோலத்தைப் பார்த்தார். "என்ன ஐயா, இது?" என்று கேட்டார். "உங்கள் உத்தரவுப்படியே செய்திருக்கிறேன்" என்று பல்லை இளித்துக்கொண்டே விஷயத்தைச் சொன்னான். வைத்தியர், "அட முட்டாளே! முதலில் அந்தப் பெரியவரை அவிழ்த்துவிடு" என்று கடிந்துகொண்டார். அவன் கட்டவிழ்த்து விட்டான்.

சாதுவான அந்தப் பெரியவருக்கு அப்போதுதான் விஷயம் ஒருவாறு விளங்கியது. வைத்தியர் காலில் விழுந்து, "மகானுபாவா, இன்று உங்களால் நான் உயிர் பிழைத்தேன்" என்று சொன்னார். வைத்தியர், "ஏதோ தெரியாமல் செய்துவிட்டான்" என்று வருத்தக் குறிப்போடு அவரைச் சமாதானம் செய்யலானார். பெரியவர், "அதெல்லாம் இருக்கட்டும். உங்கள் திருவாக்கினால்தான் நான் பிழைத்தேன். நீங்கள் பொடுதலையை வைத்துக் கட்டு என்று சொன்னதால் நான் உயிர் வாழ்கிறேன். பொடுதலையை நறுக்கி வைத்துக் கட்டு என்று சொல்லியிருந்தால் என் நிலை என்ன ஆகியிருக்குமோ, ஸர்வேசுவரனுக்குத்தான் தெரி

யும்" என்று சொல்லிப் போய்விட்டாராம். அந்த மாதிரி பட்ட காலிலேதான் படும் என்று சொல்லாமற் போனார்களே, அதற்காகச் சந்தோஷப்பட வேண்டும்.

தினமும் நாம் எங்கெங்கோ நடக்கிறோம். மேட்டிலும் பள்ளத்திலும், சரளைக்கல் பரப்பின பாதையிலும் தார் ரோட்டிலும் நடக்கிறோம். வாசற்படியில் ஏறுகிறோம்; புறக்கடையில் இறங்குகிறோம். அப்பொழுதெல்லாம் நம்முடைய காலில் கண் இருக்கிறதா என்ன, ஒன்றும் படாமல் இருக்க? காலிலே காயம் பட்டுவிட்டால் மட்டும் அந்தக் கண் கெட்டுப்போய், பட்ட காலிலே பட்டுக் கொண்டே இருக்கிறதா? யோசித்துப் பாருங்கள். நமக்குக் கால் இருக்கிறவரையில், நாம் அதைக்கொண்டு நடக்கிற வரையில், எங்கேயாவது பட்டுக் கொண்டேதான் இருக்கும். ஆனால் அப்படிப் படும் போதெல்லாம் நாம் அதைக் கவனிக்கிறது இல்லை. நம்முடைய மூளைவரையில் அந்தச் செய்தி எட்டுவதில்லை. எங்கேயோ ஒரு சின்னக் கிராமத்தில் யாராவது செத்துப்போன சமாசாரத்தைப் போல ஒருவரும் அறியாமல், காலோடே போய்விடுகிறது.

ஆனால் கால் எங்கேயோ வேகமாக நடந்து இடித்துக் கொண்டு ஒரு புண்ணை வாங்கிக் கொள்கிறதென்றால், அதற்குத் தனிக் கௌரவம் வந்துவிடுகிறது. அநாயாசமாக நடக்கிறது போய் ஒய்யாரமான நடனம் செய்கிறது. நம்முடைய காலிலே பகவான் கண் வைக்காத தோஷத்தினால் காயம் பட்டுவிட்டால் மற்றவர்களுக்கு என்ன வந்தது? அதற்குப் பரிகாரம் செய்வது போல எல்லோருடைய கண்களும் நம்முடைய காலிலே வந்து பதிகின்றன. சிநேகிதர்களில் ஒருவர் பாக்கியில்லாமல் காலைப் பார்த்து விடுகிறார்கள்; "காலிலே என்ன காயம்?" என்று அநுதாபத்தோடு விசாரிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். நம்மைப்பற்றி, நம் உத்தியோகத்தைப்பற்றி, நமக்கு

உளுத்தம் பருப்புக் கிடைக்கிறதா இல்லையா என்பதைப் பற்றியெல்லாம் பிறகுதான் கேட்கிறார்கள். முதல் கேள்வி காலைப்பற்றித்தான். அது மட்டுமா? "ஜாக்கிரதையாக இருங்கள் ஸார்; பட்ட காலிலே படும். மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேணும்" என்று எச்சரிக்கை வேறு செய்கிறார்கள்.

நாம் அதைக் கேட்டுக் கொண்டு சும்மா இருக்கிறோமா? யாராவது காலைப் பற்றிக் கேட்காமல் நமக்குப் பக்கத்தில் வந்துவிட்டால், "ஸார் ஸார், அப்படியே நில்லுங்கள்; காலை மிதித்து விடாதீர்கள்" என்று பட்ட காலைப் பற்றி விளம்பரம் செய்கிறோம். வாஸ்தவமாகவே அதன் மேலே ஒரு சிறு துரும்பு படட்டும், ஒரே புயல்தான்; துடிதுடித்துப் போகிறோம். ஆயிரந் தடவை "பட்ட காலிலே படும்" என்ற பழமொழியை நாமும் சொல்லுகிறோம்; பிறரையும் சொல்லும்படி வைத்து விடுகிறோம்!

சில பத்திரிகைகளில் பிரமுகர்கள் உள்ளூரிலிருந்து வெளியூருக்குப் போனாலும், வெளியூரிலிருந்து உள்ளூருக்கு வந்தாலும் அதை ஒரு விசேஷச் செய்தியாகப் போடுவார்கள். ஒருவர் எவ்வளவோ பணக்காரராக இருக்கலாம், படித்தவராக இருக்கலாம். முதல் வகுப்பு வண்டியிலேயே போகலாம். ஆனாலும் அவர் போக்கு வரத்தைப் பற்றிப் பத்திரிகைக்காரருக்குக் கவலை இல்லை. ஏதாவது ஒரு பெரிய கமிட்டியில் அவர் அங்கத்தினராக வந்துவிட்டால் போதும், உடனே அவர் பிரயாண விவரம் பத்திரிகையில் இடம் பெற்று விடுகிறது. அவர் எங்கேயாவது துக்கம் விசாரிக்கப் போகலாம்; அல்லது கல்யாணத்துக்குப் போகலாம். எப்படியானால் என்ன? அவர் ஊரை விட்டுப் போவது பத்திரிகைக்காரர்களுக்கு ஒரு புதிய செய்தியாகி விடுகிறது.

படாத காலுக்கு வராத கௌரவம் பட்ட காலுக்கு இப்படித்தான் வருகிறது. உண்மையிலே கௌரவம்,

படாத காலுக்குத்தான் இருக்க வேண்டும். வாழ்க்கையில் எத்தனை விதமான துன்பங்கள் வந்தாலும் அலக்ஷியமாக ஏற்றுக்கொண்டு மனோ தைரியத்தோடு புன்னகை பொலியும் முகமுடையவனாகி விளங்கும் தீரனையல்லவா நாம் போற்ற வேண்டும்? போகும் போதும் வரும்போதும் கல்லையும் மண்ணையும் மிதித்து மோதி, மரத்தையும் மட்டையையும் தீண்டி வேகமாக நடக்கும் காலை அந்த வீரனுக்குச் சமானமாகத்தான் சொல்ல வேண்டும். அதன் மேல் எவ்வளவோ பொருள்கள் படுகின்றன; ஆனால் அதைப் பிரமாதமாக விளம்பரப் படுத்திக்கொள்ள அதற்குத் தெரிவதில்லை.

ஆகவே 'பட்ட காலிலே படும்' என்ற பழமொழியோடு, "படாத காலிலும் படும்" என்ற புதுமொழியையும் நினைத்துப் பாருங்கள். படாத காலில் பட்டால் அது நடப்பவன் நடைக்கு இடையூறு உண்டாக்குவதில்லை என்ற தத்துவத்தையும் ஆராய்ந்து பாருங்கள்.

பட்ட காலிலே படுவதை நாம் உணர்கிறோம்; படாத காலிலே படுவதை நாம் உணர்வதில்லை. பணக்கார வீட்டுப் பிள்ளைக்குத் தும்மல் வந்தாலும் டாக்டருக்குத் தெரிந்துவிடுகிறது. ஏழைத் தொழிலாளியின் குழந்தைக்கு ஜுரம் வந்தாலும் அதன் தாய்க்கே முதலில் தெரிவதில்லை. வாழ்க்கைத் தத்துவத்தை ஒட்டித்தான் பட்ட காலும், படாத காலும் நடக்கின்றன. எனவே, "படாத காலிலும் படுவது உண்டு" என்று நாம் தெரிந்து கொள்வது நல்லது.

# கர்ணன் கலைஞன் ஆனது

ஏதோ ஒரு பத்திரிகையைப் புரட்டிக்கொண்டிருந்தேன்; 'கலியுகப் பிரகலாதன்' என்றும், 'கலியுக நாரதர்' என்றும் ஒரு தலைப்பு என் கண்ணில் பட்டது. அந்தத் தலைப்பை உள்ளம் வாங்கிக்கொண்டது. கை பத்திரிகையை நழுவவிட்டது. 'முன் காலத்தில் இருந்த புராண புருஷர்களை நினைத்துக்கொண்டு புதுமாதிரியில் கேலிக் கதைகளை எழுதுகிறார்களே; அப்படி நாமும் ஒன்று எழுத முயல்வோம்!' என்ற சிந்தனை எழுந்தது. புராண புருஷர்களில் யாரைப் பிடிக்கலாமென்று யோசித்தேன். அந்த யோசனையில் கேலிக் கதையாக இருக்க வேண்டுமென்ற முதல் எண்ணம் மங்கிப் போயிற்று. ஆழ்ந்து யோசிக்கலானேன்.

ராமாயண பாரத நினைவுச் சுருள்கள் வேகமாக உள்ளத் திரையில் அலர்ந்து மறைந்தன. பாரதக் கதையின் காட்சிகள் வேகமாக ஓடிக்கொண்டிருக்கையில் கர்ணன் வந்தான்; கொடைக் கர்ணன் வந்தான். காட்சிகள் மறைந்தன. அவன் மாத்திரம் உள்ளத்தில் நிற்க ஆரம்பித்தான்.

கர்ணனென்றால் இயற்கையாக அவனது கொடைதான் எல்லோருக்கும் ஞாபகத்துக்கு வரும். எனக்கும் ஞாபகம் வரத்தான் வந்தது. ஆனால் என் ஞாபகத்தில் அப்போதைக்கு இடங்கொண்டது, அவன் கொடைத் திறமன்று; அவன் இளமைச் சரிதந்தான்.

நீங்கள் கேட்டிருக்கலாம், கர்ணன் இளமையில் பரசுராமரிடம் வில்வித்தை கற்றானென்று. பரசுராமருடைய

அத்தியந்த சிஷ்யனாக இருந்தான் கர்ணன்; தன்னைப் பிராம்மணனென்று சொல்லிக்கொண்டு குருகுல வாசம் செய்துவந்தான்.

ஒரு நாள் பரசுராமர் கர்ணன் துடையில் தலை வைத்துச் சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்தார். அப்போது ஒரு வண்டு வந்து கர்ணனுடைய துடையைத் தொளைக்கத் தொடங்கியது. அதை மெல்ல ஓட்டிப் பார்த்தான். போகவில்லை. துடையை அசக்கினால் குருநாதருடைய இன்றுயில் கெட்டுவிடும். ஆகவே வண்டு துளைக்கத் துளைக்க அந்த வேதனையைச் சகித்துக்கொண்டு சிலைபோல் அமர்ந்திருந்தான்.

தொடையிலிருந்து ரத்தம் பீரிட்டது. அது பரசுராமர் மேல் பட்டது. அந்த உணர்ச்சியால், அவர் விழித்துக் கொண்டு பார்த்தார். ரத்த மயமான சூழலிலே கர்ணன் அசைவற்று அமர்ந்திருப்பதைக் கண்டார். வண்டு துளைத்தும் அதைப் பொறுத்துக்கொள்ளும் ஆற்றல் கர்ணனுக்கு இருந்ததைக் கண்டு அவர் வியந்திருக்கக்கூடும்; ஆனால் அந்த வியப்பு வெளிப்படவில்லை; கோபந்தான் வெளி வந்தது.

"இந்த உறுதி பிராம்மணனுக்கு வராது; போர்க்களத்தில் மார்பில் அம்பு குத்தி ஊடுருவ ஊடுருவத் தளராமல் உறுதியோடு போர் செய்யும் க்ஷத்திரியனுக்குத்தான் வரும். உண்மையைச் சொல். நீ யார்?" என்று விழிகளில் தீப்பொறி பறக்கக் கேட்டார்.

கர்ணன் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டான். பரசுராமர் ஊழித் தீயைப்போலக் கொதித்தெழுந்தார். "இந்தா, பிடி சாபம். என்னிடம் கற்ற வித்தைகளெல்லாம் உனக்குச் சமயத்தில் பயன்படாமற் போகட்டும்" என்று சாபங் கொடுத்துவிட்டார்.

மேலே பாரதக் கதையின் முடிவை நான் சொல்ல வேண்டாம்.

சாதியை மறைத்துக் கர்ணன் கலை பயின்றான். அந்த ரகசியம் பிறகு வெளியாயிற்று. அதன் விளைவு பாரதக் கதையில் பாண்டவர்களுக்கு வெற்றி.—இந்தக் கருத்தைச் சுற்றிச் சுற்றி என் எண்ணங்கள் சுழன்றன. என் கதைக்கு நாயகன் அகப்பட்டுவிட்டான். அவன் கலியுகக் கர்ணன்; தன் சாதியை மறைத்து வித்தை பயின்றவன். அவன் ரகசியம் ஒரு காலத்தில் வெளிப்பட்டுவிடும். பாரதப் போரில்—சே! சே! இங்கே பாரதப்போர் வேண்டாம். அதை மாத்திரம் மாற்றிக்கொள்வோம்.

பரசுராமருக்குப் பதில் குரு ஒருவர் வேண்டுமே; அவரை எப்படிச் சிருஷ்டிப்பது? பரசுராமர் செய்தது பெரிய தவறு. அவ்வளவு காலம் தம்மோடு பழகித் தம் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட ஒரு சிறந்த மாணுக்கனிடத்தில் அவருக்கு அவ்வளவு கோபம் வந்தது நியாயமன்று. இந்தமாதிரி உண்டாவது, ஒன்று விலங்கினத்தின் சுபாவமாக இருக்க வேண்டும்; இல்லாவிட்டால் பற்றற்றவர்களுடைய வறட்சியான இருதயத்தின் விளைவாக இருக்க வேண்டும். நம்முடைய நாயகனின் குரு பரசுராமராக இருக்கக்கூடாது. அவன் மனித இருதயம் உடையவனாய், மாணுக்கனிடத்தில் மாறாத அன்புடையவனாய் இருக்க வேண்டும். சாதியை மறைத்துத் தன்னிடம் பயிலும் மாணுக்கனது உண்மை தெரிந்தும் அவனுடைய இருதயத்தில் அன்பு ததும்பவேண்டும்.

இப்படியெல்லாம் கதையின் கரு உள்ளத்தில் உருவாகிக்கொண்டிருந்தது.

* * *

நாள்தோறும் திருவல்லிக்கேணியிலிருந்து காரியாலயத்துக்கு வரும்போது சில நாட்களில் இடையிலே ஒரு சேரி வழியே வருவதுண்டு. அந்தச் சேரியில் கால்வாயோரத்தில் ஒரு சிறு மண்குடிசை இருக்கிறது; அது சேரியிலுள்ளவர்களுக்குக் கோயில். கர்ப்பக் கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் என்ற கட்டட விசேஷங்கள் இருந்தால் உள்ளே எழுந்தருளியிருக்கும் கடவுளைத் தரிசிக்க முயற்சி வேண்டும், சுத்தம் வேண்டும், சாதி வேண்டும்; காசுகூட வேண்டும். இந்தச் சேரிக் கோவிலில் அவைகளில் ஒன்றும் வேண்டாம். கதவுகூட இல்லை. எப்போதும் திறந்திருக்கிறது. வழியிலே போவோர் அனைவருக்கும் அவர்களுடைய முயற்சி சிறிதும் இல்லாமலே தரிசனம் தந்துகொண்டிருக்கிறார் உள்ளே இருக்கும் கடவுள்.

கடவுளென்றா சொன்னேன்? வாஸ்தவத்தில் எனக்குக் கடவுளென்று படவில்லை; பயபக்தி எழவில்லை; சிறிது பயந்தான் எழுந்தது. அது, இளமையிலிருந்து பெரியோர்கள் பிடாரி முதலிய தெய்வங்களைப்பற்றிச் சொல்லிப் பயமுறுத்தியதன் விளைவாக வந்த உணர்ச்சி.

குடிசைக் கோவிலுக்குள் இருந்த சாமியின் திருமேனி-திருமேனியல்ல, வெறுந் தலைமட்டுந்தான் - மண் உருவம்; சுட்ட மண் உருவம். அதன் மீசையும் விழித்த கண்களும் கண்டால் சேரிக் குழந்தைகளுக்கு எப்படி இருக்குமோ தெரியாது; நம் வீட்டுக் குழந்தைகள் அலறிப் புடைத்துக் கொண்டு ஓடிவிடும். தலையில் ஒரு கிரீடம்; அதுவும் சுட்ட மண் உருவத்திலே சேர்ந்ததுதான். முகத்தில் ஒரு பயங்கரத் தோற்றம். இந்த மூர்த்தியை நான் அவ்வழியே போகும்போதெல்லாம் பார்த்துக்கொண்டு செல்வேன். 'இந்த உருவத்தை வைத்துக் கதை எழுதலாமா?' என்ற யோசனை ஒரு நாள் தோற்றியது. அந்த யோசனை உள்ளத்தின் ஆழத்தில் ஒரு மூலையில் கிடந்தது.

கலியுகக் கர்ணனைச் சிருஷ்டிக்கும் முயற்சியிலே தலைப்பட்டபோது மூலையிற் கிடந்த அவ்வெண்ணம் மேலே மிதந்து வந்தது. நம் கதாநாயகன் எந்தக் கலையைக் கற்றுக் கொண்டான்? வில் வித்தையா? — அது இந்தக் காலத்துக்கு ஏற்றதல்ல. பொம்மை, மண் பொம்மை செய்யும் வித்தையாக இருந்தால் என்ன? — இந்த எண்ணத்தை உண்டாக்கினதற்குச் சேரித் திருக்கோயில் தெய்வந்தான் பொறுப்பாளி. 'ஆம், ஓவியக் கலை அல்லவா அது? பொம்மை செய்வதிலும் கலை இல்லையா? நாம் வாங்கும் பொம்மைகளில் கைத்தொழில் திறமையைக் காண்கிறோம். சிலவற்றில் உண்மைக் கலைத்திறமை பளிச்சிடுகிறது. நம் கதாநாயகனாகிய இளங் கலைஞன் உண்மைக் கலைஞனாக இருக்க வேண்டும்; அவன் வியாபாரத்துக்காகப் பொம்மை செய்தாலும் கலையழகு அவன் சிருஷ்டிகளில் பொலிய வேண்டும். அவனுடைய குரு - பொம்மை வியாபாரி - சிறந்த கலைஞனாகவே இருக்கவேண்டும்.'

கலைக்கு உயர்வு கொடுக்க அதற்கருகே கைத்தொழில் இருந்தால் நல்லது. கைத்தொழில் மனித சிருஷ்டி; கலை தெய்வ சிருஷ்டி. கலைக்குப் பிரதிநிதியாக நம் கதாநாயகன் இருந்தால், கைத்தொழிலுக்குப் பிரதிநிதி ஒருவனும் இருக்கவேண்டும். அப்போதுதான் கலைஞனுடைய பெருமை வெளிப்படும்.

இது என்ன பிரமாதம்? நம் கதாநாயகன் கர்ணனைப் போல இருக்கட்டும்; அவனுடைய குரு பரசுராமரைப் போல இருக்கக்கூடாது என்றுதானே தீர்மானித்துக் கொண்டோம்? ஆகவே கைத்தொழிலின் பிரதிநிதியாக ஒருவனைச் சிருஷ்டிக்க, அந்தக் குருவுக்குப் பிள்ளை வரம் கொடுத்துவிட்டால் போகிறது.

நல்ல பொருத்தம்: நாராயண பிள்ளை பண்ணுருட்டியில் இருந்த பொம்மைக்காரக் கிழவன்; கலைஞன். அவ

னிடம் முருகன் கலை பயில்கிறான். 'நாராயண பிள்ளையின் குமாரன் கிருஷ்ண பிள்ளை; அவனுக்கும் பொம்மை செய்யத் தெரியும். 'தன்னுடைய கிழத் தந்தையின் மதிப்பையும் கலைத் திறமையையும் அவன் நன்றாக உணர்ந்திருந்தான். அந்தக் கலையையே — தொழிலையே — அவனும் கற்றுக் கொண்டான். உண்மையில் கிருஷ்ணனுக்குக் கலைத் திறமை வரவில்லை; கைத்தொழில் தான் வந்தது. அவனும் பொம்மை பண்ணினான்; விற்றான்; பணம் சம்பாதித்தான். ஆனாலும் அவன் உண்டாக்கின பொம்மைகளில் ஜீவ ஒளி ததும்பவில்லை. இயந்திரத்தினால் ஒரே அச்சாக வார்க்கப்பட்டவைபோல அவை தோற்றின. அவனுடைய கையில் வெறும் மனித நாடி ஓடிற்றே யொழிய, கலைஞனது நாடி ஓடவில்லை.'

கதை ஆரம்பம் சரி. அடுத்து வரும் செய்தி முன்னாலே நிச்சயிக்கப்பட்டதுதான்; பாரதக் கதையிலிருந்து கடன் வாங்கிக்கொண்டது அது. சாதியை மறைத்த செய்தி ஒரு நாள் வெளியாகிறது. பாரதக் கதையில் பரசுராமர் அப்போது கர்ணனை வெறுக்கிறார்; சாபம் கொடுக்கிறார். என்னுடைய கதையில் நாராயண பிள்ளை இந்த மகா பாதகமான காரியத்தைச் செய்யமாட்டான். பின், கதை ஓடவேண்டுமே!

கிருஷ்ண பிள்ளையை உபயோகித்துக் கொண்டேன். அவனைக் கைத்தொழிலாளியாக்கி விட்டேன். அதனால் கதைக்கு என்ன லாபம்? கலைஞனது உயர்வைத் தெரிந்து கொள்ள உதவுகிற செய்தி அது. அது போதாது. சாதி ரகசியம் வெளிப்பட்டவுடன் பரசுராமர் செய்த காரியத்தை அவன் செய்யட்டுமே! அதற்குத் தகுந்தபடி முன்னாலே அவனைத் தயார் செய்யலாம்.

கிருஷ்ண பிள்ளையின் உள்ளத்தில் பொறாமையின் சிறு பொறியை வைத்தேன். 'தொழிலுக்கும் கலைக்கும்

பொறுமை உண்டாவது இயல்புதானே? அந்தப் பொறுமைப் பொறி வளர்ந்து கொண்டே வந்தது. நாராயண பிள்ளை முருகனிடத்தில் தன் உயிரையே வைத்திருந்ததைப் பார்க்கப் பார்க்க அவனுக்குப் பொறுக்கவில்லை. 'எங்கிருந்தோ வந்தான்; கூலிகூட வேண்டாம், சோற்றுக்கு வேலை செய்வேன் என்றான். இப்பொழுது நம்முடைய அப்பனைத் தன்னுடைய அப்பனாக்கிக் கொண்டான். இந்தக் கிழவனும் அவனை ஆகாயத்தில் தூக்கி வைத்துப் பேசுகிறான். நம்மைக் காட்டிலும் அந்தப் பயலிடத்திலே அபாரமான வாஞ்சை! இதெல்லாம் எப்படியாகுமோ, எங்கே கொண்டுபோய் விடுமோ!' என்று பொறுமைத் தீயின் கொழுந்துகள் கிளம்பின.

ஆனால் அதை வெளியிட வகையில்லை; பொறுமையை மட்டுமன்று; தன் அப்பன்மேல் உள்ள கோபத்தையுந் தான். ஒரு பக்கத்தில் தன் மரியாதைக்குரிய அப்பன், மற்றொரு பக்கத்தில் தன் வியாபாரத்தில் லாபம் சம்பாதித்துக் கொடுக்கும் முருகன். வெளிப்படையாக இவ்விருவர் நிலையையும் மாற்ற வழி எது?

வழி இல்லையா? நான்தான் வழி உண்டாக்க இருக்கிறேனே! முருகனுடைய ரகசியம் வெளிப்பட வேண்டும்; அப்பொழுது கிருஷ்ணனுக்கு முருகன்மேல் இருந்த பொறுமையும் வெளிப்பட வேண்டும், தகப்பன்மேலிருந்த கோபமும் வெளிப்பட வேண்டும்.

கதையின் இரண்டாவது கட்டம் வந்து விட்டது. முருகனுடைய சொந்தத் தகப்பனாகிய சக்கிலியன் கடைத் தெருவில் முருகனைக் கண்டு வாத்ஸல்ய உணர்ச்சி பொங்கிக் கூவுகிறான். கடை வீதியிலே நம் கலிகாலக் கர்ணனுடைய ரகசியம் அம்பலமாகிறது.

முருகனுக்கும் அவன் அருமைக் குரு நாராயண பிள்ளைக்கும் இடையே சாதி வந்து பிரித்துவிடுகிறது.

முருகனைச் சக்கிலியத் தெருவுக்குக் கொண்டுபோய் விட்டேன். கதையை முடிக்கவேண்டுமே. பாரதத்தில் கர்ணன் சாபம் பெற்ற செய்தி பாரதப் போரில் அவன் தோல்வியடையும் வரையில் தொடர்ந்து சென்று பயனளிக்கிறது. இங்கே சாபம் இல்லை; பரசுராமரே இல்லையே! கதை எப்படி முடிவது?

பரசுராமர் இல்லாமல் என்ன? அவர் இரண்டு உருவங் கொண்டுவிட்டார். கர்ணனிடம் அன்பு பாவித்து, தாய் மடியில் உறங்கும் குழந்தையைப்போல, காதலியின் மடியில் இன்பத் துயில்புரியும் காதலனைப்போல, உறங்கும் நிலையில் இருந்த பரசுராமரைப் பொம்மைக்காரக் கிழவனிடம் காணலாமே. சாதி போயிற்றென்று கோபிக்கும் பரசுராமரைத் தனியே பிரித்துக் கிருஷ்ணனிடம் வைத்திருக்கிறோமே! இரண்டாவது பரசுராமர் சாபமிட்டார். நம் கதையிலும் கிருஷ்ண பிள்ளைதான் சாபமிடவேண்டும். சாபமென்றால் சாபந்தானா? ஏதாவது தண்டனை கொடுக்க வேண்டும்.

என்ன விதமான தண்டனை கொடுக்கச் செய்வது? யோசித்தேன். கதையின் சுவாரசியம் இந்த இடத்தில்தான் அமையவேண்டுமென்று எனக்குத் தோற்றியது.

முருகன் தன் கலையைக் கைவிடாமல் பொம்மை செய்கிறான். 'இந்தப் பயல் நம் வீட்டிலே கற்றுக்கொண்ட தொழிலினால் லாபம் சம்பாதிப்பான். அப்படிச் செய்யும்படி விடக்கூடாது. இவன் கையை முறித்துப் போட்டுவிட வேண்டும். இல்லாவிட்டால் இந்தத் தொழிலையே விட்டுவிடும்படி செய்யவேண்டும்' என்ற நினைவிலே அந்தத் தண்டனைக்கு ஓர் உருவத்தையும் கண்டு பிடித்து அமைத்துக் கொண்டேன்.

தண்டனையைக் கலைஞன் ஏற்றுக் கொள்வதா? ஏற்றுக் கொள்வதாகவே வைத்துக் கொள்வோம். கதைக்கு

முடிவு ஏற்படவில்லையே. முடிவுக்கு வேறு புதிய விஷயம் ஒன்று வேண்டுமே !

இயல்பாகவே கலைஞனுக்கு உயர்வு கொடுக்கவேண்டு மென்ற எண்ணம் கதையைக் கற்பனை செய்த உள்ளத்தின் அடித்தளத்திலே இருந்துகொண்டு சுருதி மீட்டிக் கொண்டிருந்தது. கலைஞனுடைய உயர்வு வெளிப்பட வேண்டும். அதை ஒரு நிகழ்ச்சியினால் வெளிப்பட வைக்க வேண்டும்.

கலைஞனுடைய உயர்வைப் பொறாமை யுருவமாகிய கிருஷ்ணனே கண்டுகொள்ளும்படி ஒரு நிகழ்ச்சி இருந்தால் எவ்வளவு ரஸமாக இருக்கும் கதை! முருகன் பண்ணும் பொம்மைகளை யெல்லாம் கிருஷ்ணன் எடுத்துப் போகிறான். அவற்றை விற்றுப் பணம் சம்பாதிக்கிறான். அந்த லாபத்தால் அவன் மனம் மாறுகிறது.—இப்படி எழுதலாமா?

சே, சே! கதையின் சுவாரசியமே குட்டிச் சுவராய்ப் போய்விடும். பொறாமைக்காரன் செய்யும் வேலையல்ல அது. அவன் பொம்மைகளை உடைத்தெறிவான். அதுதான் சரி. அவன் இருதய பூர்வமாகக் கலைஞனது உயர்வை உணர்ந்து மனம் மாறினால்தான் நன்றாக இருக்கும். இதற்கு என்ன வழி?

நாராயண பிள்ளை—அந்தக் கிழவன்—ஏங்கிப் போய் உயிர் விடுகிறான். கிருஷ்ணன் தன் தந்தையை இழந்தான். முருகன் அந்தக் கிழவனுடைய ஞாபகத்தில்தான் உயிர் வாழ்கிறான்.

கலைப் பொருள் அமரத்துவம் உடையதாயிற்றே; முருகன் தன் அன்புக்குப் பாத்திரமான கிழவனைக் கலைப் பொருளாக்கி அழியாத தன்மை கொடுத்துவிடக் கூடும். அவன் கிழவனைப் போலவே உருவம் செய்கிறான். மிக அழகாக அமைத்துவிடுகிறான். அதை மூடி வைக்கிறான்.

கிருஷ்ணன் அதையும் எடுத்துக்கொண்டு போகிருன். உடைக்க எண்ணித் திறக்கிருன். அவன் தகப்பன் உருவம். தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடுமல்லவா ? அவனும் மனிதன்தானே ? அவனுக்குத் தன் தகப்பனிடத்தில் அன்பில்லையா? அவன் மனம் மாறுவதற்குத் தகுந்த நிகழ்ச்சி இது. அந்த உருவத்தைக் கண்டு, 'இதை உடைத்திருந்தேனுல் என்ன பாதகம் செய்தவனுவேன் !' என்று இரங்குகிருன்.

மனம் மாறிவிட்டது ; கதையும் முடிந்து விட்டது. எனக்குப் பூரண திருப்தி உண்டாகவில்லை. இன்னும் கதையில் குறை ஏதோ இருப்பதாகவே எண்ணினேன்.

கிருஷ்ணன் முருகனிடம் போய் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிருன். பிறகு முருகனும் கிருஷ்ணனும் சேர்ந்து பழைய பொம்மை வியாபாரத்தை நடத்துவதா ? அது கதையின் கம்பீரத்துக்குப் பொருத்தமாக இல்லை. கலைஞனை உயர்ந்த உள்ளமுடையவனுகச் சிருஷ்டிக்கவேண்டு மென்பதுதான் என் ஆவல். அவனுடைய உள்ளத்தில் ஒரு நிறைவை உண்டாக்குகிறேன். கிழவன் உருவத்தை வெற்றிகரமாகச் செய்து முடித்தது, கிருஷ்ணனின் பச்சாத்தாபம்—இந்த இரண்டும் கலைஞனுக்கு ஆறுதலை அளிக்கின்றன. ஆறுதல் பெற்ற அந்த உள்ளத்திலிருந்து எழுகிறது தியாகம் : "அண்ணே, இதுதான் நான் மனம் வைத்து என் உயிரைப்போல எண்ணிச் செய்தது. என்னுடைய மனத்தில் இருந்த ஆசை இப்போது நிறைவேறி விட்டது. இனிமேல் சத்தியமாக இந்தத் தொழிலை விட்டு விட்டேன். செருப்புத் தைப்பதே எனக்குப் போதுமானது."

கிருஷ்ணன் தன்னைப் பொம்மை செய்யவேண்டாமென்றபோது முருகன் செய்தான். அவன் மனம் மாறி

இவனைப் பாராட்டியபோது இவன் பொம்மை செய்வதையே விட்டுவிட்டான். இந்த முரண்பாட்டில் ஒரு ரஸம் இருக்கிறதென்பதே என் நினைவு.

கதை நன்ருக முடிந்துவிட்டது. கலைஞனுடைய கலையுயர்வைக் காட்டிலும் அவன் தியாக உணர்ச்சி பின்னும் உயர்வாக இருக்கிறதென்ற ஞாபகத்தால் கதைக்கு, "கலைஞன் தியாகம்" என்று பெயர் வைத்தேன்.

என் வழக்கம், கதை முழுவதும் எழுதி முடித்த பிறகே பெயரிடுவது. கதை எழுத உட்காருகையில் ஒருவிதமாகக் கதைப் போக்கைத், தீர்மானித்திருந்தாலும் பேனுவின் போக்கிலேயே புதிய புதிய கற்பனைத் துறைகள் மனத்தில் உதயமாகும். சில சில விவரங்கள் அந்த அந்தக் கணத்தில் தோன்றி உருவாகும். ஆதலால் கதைக்கு முற்றுப்புள்ளி வைத்த பிறகே தலைப்பைப் போடுவதுதான் என்னுடைய போக்கில் பொருத்தமாக அமைகிறது.

'கலைஞன் தியாகத்தை வாசித்தவர்களிற் சிலர் அவனைத் தியாகியாகப் பண்ணவேண்டாமென்ருர்கள். அவன் தியாகம் பண்ணுமல் கலைக்குரிய சிறப்போடும் சம்மானத்தோடும் வாழவேண்டுமென்பது அவர்கள் விருப்பம். உலக வாழ்வில் அப்படி ஒரு கலைஞன் இருந்தால் அவன் கஷ்டப்படாமல் இருக்கும் பொருட்டு அவனைக் கலைச் செல்வனுகவே வைத்திருக்கவேண்டும். என்னுடைய கற்பனைக் கலைஞன் கலைஞனுக என்றும் இல்லாவிட்டாலும் சிறந்த லக்ஷ்ய புருஷனுக, தியாகியாக மாறினதில் அவனுக்கு நான் உயர்வளித்ததாகவே கருதுகிறேன்.

கலியுகக் கர்ணனுகிய என் கதாநாயகன் ஆரம்பத்தில் சாதியை மறைத்துக் கலை பயில்கிருன். கடைசியில், கர்ணன் பல காலமாகத் தர்மம் செய்து ஈட்டிய புண்ணியத்தையே

தியாகம் செய்வதுபோல, அவ்வளவு நாட்களாகச் சம்பாதித்த கலையையே தியாகம் செய்து விடுகிறான். இந்த ஒப்புமையை நான் எண்ணி அமைக்கவில்லை. கதையை முடித்த பிறகு இப்போது பார்க்கையில் தானாக இவ்வாறு அமைந்திருப்பது தெரிகிறது.

கர்ணன் கலைஞனான கதை இதுதான்.

## விளம்பர ஆசை

தன்னைத் தானே விளம்பரப்படுத்திக்கொள்ள வேண்டும் என்னும் ஆசை மனித சாதிக்கு உடன் பிறந்தது. எத்தனைதான் விரக்தி இருந்தாலும், தியாக புத்தி இருந்தாலும் தன் பெருமையை வெளியிட வேண்டும் என்ற ஆசை போகிறதே இல்லை. குழந்தைப் பருவத்தில் முளைத்த இந்த ஆசை கிழப் பருவத்திலும் விடுவதில்லை. குழந்தைப் பருவத்தில் முளைத்ததென்று சொல்வதைவிட, இந்த ஆசை வேதாந்திகள் சொல்வதுபோல உயிரோடு தொடர்ந்து நிற்கிறதென்றே சொல்ல வேண்டும்.

ஆறு வயசுப் பையன் புத்தகம் படித்துக் கொண்டிருக்கிறான். அவன் என்ன புத்தகம் படிக்கிறானென்று, வீட்டுக்கு வந்த விருந்தினர் கவனிக்கிறார். "என்ன அப்பா படிக்கிறாய்?" என்று கேட்கிறார். பையன் பெருமையோடு தன் புத்தகத்தைக் காட்டுகிறான். அவனுக்குத் தன் காரியத்தை விளம்பரப்படுத்திக் கொள்வதில் சந்தோஷம். ஆனால் அந்தப் பையனுக்குத் தம்பி ஒரு குழந்தை இருக்கிறான். அவனுக்கு மூன்று வயசு. தன் அண்ணன் புத்தகத்தைப் படிக்கிறதும், அதை வந்த மனிதர் பார்த்துப் பாராட்டுகிறதும் அவன் கண்களில் விழுகின்றன. அவனுக்குப் புத்தகம் படிக்கத் தெரியாதா என்ன? உடனே ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டு தன் காலை நீட்டி அதன் மேல் வைத்துக்கொண்டு கா, கீ என்று கத்துகிறான். புத்தகத்தைப் பார்த்துச் சத்தம் போடுவதுதான் படிக்கிறது என்று அவன் எண்ணிக் கொண்டிருக்கிறான். விருந்தினர்

பெரிய பையனையே கவனித்துக் கொண்டிருக்கிறார். "இந்த மனிதர் நம்மைக் கவனிக்கவில்லையே!" என்று சின்னப் பையன் எண்ணுகிறான். உடனே அவன் குரல் பலமாகிறது. உரக்கப் படிக்கிறான்; சத்தம் போடுகிறான் என்று நாம் சொல்லுகிறோம். அவனுக்கு அதுதானே படிக்கிறதென்பது? எப்படியாவது விருந்தினருடைய கவனத்தை இழுக்கவேண்டுமென்ற ஆசை அந்தச் சிறு குழந்தைக்கு உண்டாகிறது.

விருந்தினர் இப்போது தம் பார்வையை அந்தக் குழந்தையின்மீது திருப்புகிறார். "ஓ! உனக்கும் படிக்கத் தெரியுமா?" என்று கேட்கிறார். குழந்தைக்கு உச்சி குளிர்ந்து போகிறது. ஆனால் அவனுக்கு வெட்கம் வந்து விடுகிறது. புத்தகத்தை மூடிவிட்டு அம்மாவிடம் ஓடிப் போய் விடுகிறான். அந்தமட்டிலும் விளம்பரம் செய்தது போதும் என்று திருப்தியடைகிறான்.

* * *

நான் முதல் முதலாக விமானப் பிரயாணம் செய்தேன். இலங்கைக்குப் போய் வந்தேன். விமானப் பிரயாணம் என்பது புதிய அநுபவமாகவும், கவனிப்பதற்குரிய செய்தியாகவும் இன்னும் இருந்து வருகிறது. "நான் விமானத்தில் போய் வந்தேன்" என்றால், "அப்படியா!" என்று சிறிது மதிப்புடன் கேட்கிறவர்கள் இருக்கிறார்கள். இன்னும் சிலகாலம் போனால் அதன் அருமை மறைந்து போகும். அடிக்கடி எல்லோருமே விமானப் பிரயாணம் செய்கிறவர்கள் ஆகிவிடுவார்கள். "நான் ரெயிலில் ஊருக்குப் போய் வந்தேன்" என்று யாராவது இப்போது சொல்கிறார்களா? ரெயில் பிரயாணம் மனிதனோடு பிறந்ததாகி விட்டது. அதுமாதிரி விமானப் பிரயாணமும் தண்ணீர் பட்ட பாடாகும் காலம் வரும். அப்போது அதைப் பற்றித்

தனியே எடுத்துச் சொல்வது பைத்தியக்காரத்தனமா யிருக்கும்.

இப்போது அப்படி இல்லையே ! விமானப் பிரயாணம் ஒரு சிறந்த செயல், எல்லோருக்கும் கிடைக்காதது என்ற எண்ணம் கொஞ்சம் இருந்து வருகிறது. ஆகையால் நான் விமானத்தில் போய் வந்த அநுபவத்தை மற்றவர்கள் தெரிந்து கொள்ள விரும்புவதில் ஆச்சரியம் இல்லை. அவர்களாக விரும்பிக் கேட்கிறது ஒருவிதம். ஆனால் நான் விமானத்தில் பிரயாணம் செய்தது தெரிந்தால்தானே அந்த அற்புத அநுபவங்களை என்னிடம் கேட்பார்கள் ? "நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்று திருமூலர் சொல்கிறார். நான் அப்படிச் சொல்வதில்லை. "நான் பெற்ற இன்பத்தைக் கேட்க இவ் வையகம்" என்றுதான் சொல்கிறேன். விமானப் பிரயாண அநுபவம் என்ற அருமையான இரகசியத்தை நான் மூடி மூடி வைத்துக் கொள்ளும் லோபி அல்ல. எத்தனை பேருக்குத் தெரிவிக்க முடியுமோ, எப்படியெல்லாம் தெரிவிக்க இயலுமோ, அத்தனை பேருக்கு அப்படியெல்லாம் தெரிவிக்கும் தொண்டைச் செய்யலானேன்.

நண்பர் ஒருவர் இராமாயணத்தை விடாமல் பாராயணம் செய்கிறவர். அவர் இராமாயணத்திலிருந்து சில பகுதிகளை எடுத்துச் சொன்னார். இராம பக்தி மிக்கவர் அவர். சொல்லும்போது அவர் கண்ணில் நீர் வந்தது. "இராமர் சீதை முதலியவர்கள் புஷ்பக விமானத்தில் வரும் போது..." என்று அவர் சொல்லிக்கொண்டு வந்தார். நான் அப்போது, "புஷ்பக விமானத்தில் வந்தார்களா ? எத்தனை பேர் ஏறிக்கொண்டிருந்தார்கள் ?" என்று கேட்டேன்.

"இராமரும் அவருடைய பரிவாரங்களும் அதில் ஏறி வந்ததாக வால்மீகி சொல்கிறார்" என்று அவர் சொன்னார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் என்னுடைய புஷ்பக விமான யாத்திரையைப் பற்றிச் சொல்லாமல் இருந்தால் மகா பாவம் என்று என் மனத்திலே ஒரு துடிப்பு உண்டாயிற்று. "பாருங்கள் பகவானுடைய பெருமையை. அன்று அவர் ஏறி வந்த புஷ்பக விமானத்தில் இன்று நாமும் ஏறும்படியாகக் கிருபை பண்ணியிருக்கிறார்" என்றேன்.

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்று நண்பர் கேட்டார்.

"இப்போது ஆகாய விமானப் பிரயாணம் வந்திருக்கிறதே. இந்த விஷயம் நம்முடைய முன்னோர்களுக்குத் தெரிந்ததுதான். புதிதாக வந்தது அல்ல. விமானத்தில் நான் போனபோது எவ்வளவு சுகமாக இருந்தது, தெரியுமா?"

"அப்படியா! நீங்கள் விமானத்தில் போயிருக்கிறீர்களா?"

அதற்குமேல் நான் ஒரு சொற்பொழிவே செய்து விட்டேன் என்று சொல்லவா வேண்டும்?

டில்லியிலிருந்து இரண்டு நாள் ரெயிலில் கஷ்டப்பட்டுக்கொண்டு ஒருவர் வந்தார். அவரைக் கண்டேன். "இரண்டு நாளாகத் தூக்கம் இல்லை; அடேயப்பா என்ன கூட்டம்!" என்றார் அவர்.

"தெரியாமலா விமானத்தில் பிரயாணம் செய்கிறார்கள்?" என்று நான் முகவுரையைத் தொடங்கினேன்.

"எல்லாராலும் விமானத்தில் போகமுடியுமா?" என்று கேட்டார் அவர். அந்தக் கேள்விக்கு விடை கூறுவது என் பொறுப்பு அல்லவே! பொருளாதார நெருக்கடி, பெட்ரோலின் விலை, விபத்துக்கள், விமானப் பயணத்தைத் தேசிய மயமாக்குதல் என்று விமானப் பிரயாண சம்பந்தமாகப் பத்திரிகைகளின் மூலம் அறிந்து

கொண்ட செய்திகளை அவர் மூளையில் திணித்து வைத்துக் கொண்டிருப்பார். நான் ஏதாவது சொன்னால் அவர் ஒன்று சொல்வார். ஆகையால் விமானப் பிரயாணம் எல்லோரும் செய்ய முடியுமா என்ற ஆராய்ச்சியிலே புக நான் விரும்பவில்லை. நான் விமானத்தில் சென்று வந்த செய்தியை விளம்பரம் செய்யவேண்டும். அதுதான் என் ஆசை.

"என்ன இருந்தாலும் விமானப் பிரயாணம் விமானப் பிரயாணந்தான்" என்றேன்.

அந்தப் பேர்வழி, " அப்படியா! எப்படி இருந்தது?" என்று ஆவலோடு என்னைக் கேட்பாரென்று நினைத்தேன். அவரோ, "பின்னே எப்படி இருக்கும்?" என்று கிண்டலாகப் பேசினார்.

"அதற்காகச் சொல்ல வரவில்லை. காசு போனாலும் அதற்கேற்ற சுகம் இருக்கிறது என்று சொல்கிறேன்."

"காசு தெருவில் கிடக்கிறதா?" என்று அவர் மறுபடியும் என்னைப் பொருளாதார உலகத்துக்கு இழுத்தார்.

"காசு கிடைத்தவர்களெல்லாம் விமானத்தில் போகிறார்களா? விமானப் பிரயாணம் சுகத்துக்குச் சுகம்; எவ்வளவு காலம் மிச்சமாகிறது? நீங்கள் இரண்டு நாள், நாற்பத்தெட்டு மணி நேரம் கஷ்டப்பட்டு வந்திருக்கிறீர்கள். இந்த இரண்டு நாளில் எத்தனையோ வேலைகளைச் செய்து விடலாம். சிறைக்குள் இருப்பதுபோல ரெயில் பெட்டிக்குள் அடைந்து கிடக்கவேண்டும். அதற்கு எவ்வளவு பொறுமை வேண்டும்?"

"அதை ஏன் கேட்கிறீர்கள்? நான் சரியாக மாலை 6—30 மணிக்கு டில்லியில் ஏறினேன். வண்டி பழைய டில்லியிலிருந்து புறப்படுகிறது.....நீங்கள் டில்லிக்குப் போயிருக்கிறீர்களோ?"

"இல்லை."

"அப்படியானால் சொல்கிறேன் கேளுங்கள். பழைய டில்லிதான் மெயில் புறப்படும் இடம். அங்கேயே வண்டி ஏறினேன். கூட்டம் சுமாராக இருந்தது. ஆனால் புதிய டில்லி வந்தது பாருங்கள்; மூட்டை முடிச்சுகளோடு குழந்தைகளும் குட்டியுமாக இரண்டு மூன்று குடும்பங்கள் நான் இருந்த பெட்டியில் ஏறிவிட்டன. அவ்வளவு பேருக்கும் இடம் வேண்டுமானால் கந்தர்வர்கள் மாதிரி சிலபேர் ஆகாயத்தில் பறக்கவேண்டும்."

"ஆகாயத்தில் பறப்பதாவது!" என்று கேட்டு வைத்தேன். அவர் விமானப் பிரயாணத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறாரோ என்ற சந்தேகம் எனக்கு.

"ஆமாம்; வண்டியில் கூரைக்கும் தளத்துக்கும் இடையே ஆகாயம் இருக்கிறதே, அங்கே பறப்பதைச் சொல்கிறேன். அப்போது நான் என்ன செய்தேனென்று நினைக்கிறீர்கள்?......"

நான் என் விமானப் பிரயாண அநுபவத்தைச் சொல்லப் போய், அவர் தம்முடைய டில்லிப் பிரயாண அநுபவத்தையல்லவா சொல்ல ஆரம்பித்து விட்டார்!

"எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது" என்று சொல்லித் தப்பித்துக் கொண்டேன். எனக்கு மட்டும் விளம்பர ஆசை இருக்கிறதென்பது இல்லை; உலகில் எல்லோருக்கும் அந்த ஆசை எப்போதும் இருந்துகொண்டே தான் இருக்கிறது. தம் தம்முடைய அநுபவத்தை எப்படியாவது பிறர் காதில் போடத்தான் வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறவர்கள் கூட்டம் அதிகமாக உலகத்தில் இருப்பதனால்தான் பலருக்குப் பொழுது போகிறது.

## ரஸிகர்கள்

கஜகர்ண வித்தை கோகர்ண வித்தை என்று சில வித்தைகளுக்குப் பெயர். நாம் நம் கையை ஆட்டலாம்; காலை ஆட்டலாம்; ஆனால் காதை மாத்திரம் தனியே ஆட்ட முடியாது. அதற்கென்று பயிற்சி பண்ணினால் ஆட்டலாம். யானையும் மாடும் தம் காதுகளை மாத்திரம் ஆட்டும் இயல்பு பெற்றவை. அதனால்தான் காதுகளை மாத்திரம் ஆட்டும் வித்தைக்குக் கஜகர்ணமென்றும் கோகர்ணம் என்றும் பெயர். கர்ணம் என்பது காதுக்குப் பெயர் அல்லவா?

ஒரு கோகர்ண வித்தைக்காரன் ஓர் அரசனிடம் தன் வித்தையைக் காட்டலாமென்று வந்தான். பசுவைப்போலவும் வேறு மிருகங்களைப் போலவும் கத்திக் காட்டினான். காதை மாத்திரம் தனியே ஆட்டிக் காட்டினான். அரசனும் அவனைச் சார்ந்தவர்களும் இவற்றையெல்லாம் கண்டு களித்தார்கள்.

அப்போது அந்தக் கூட்டத்தில் ஓர் இடையன் இருந்தான். அவன் மெல்ல வித்தையாடியிடம் வந்தான். ஒரு சிறிய பருக்கைக் கல்லை அவன்மேல் போட்டான். பிறகு, முகமலர்ச்சியுடன் தன் மேலே போட்டிருந்த பழைய கறுப்புக் கம்பளியை அந்த வித்தையாடியினிடம் போட்டு விட்டு வந்தான். வித்தைகள் முடிந்தன. அரசன் பல வெகுமதிகளை அளித்தான். அவற்றைப் பணிவோடு வாங்கிக்கொண்டான் வித்தையாடி. இடையன் அளித்த கம்பளியை மடித்துக் கண்ணில் ஒத்திக் கொண்டு பெட்டியில் முதலில் வைத்தான். பிறகே அரசன் அளித்த பரிசுகளை வைத்தான்.

இதை அரசன் கவனித்தான். 'அந்தப் பழைய கம்பளியை அத்தனை மதிப்போடு எடுத்து வைத்துக் கொள்கிறானே; ஏன்?' என்ற யோசனை வந்தது. அவனையே கூப்பிட்டுக் கேட்டான். இடையன் சொன்னதைக் கேட்டு அரசன் வியப்பில் ஆழ்ந்தான். "சபையிலுள்ள அத்தனை பேரும் நான் காதை ஆட்டுவதையும், மாடுபோலக் கத்துவதையுமே கவனித்தார்கள். ஆனால் அந்த இடையனோ மாட்டின் நுட்பத்தை நன்கு அறிந்தவன். மாட்டின்மேல் ஈ உட்கார்ந்தாலும், ஒரு சிறிய கல் போட்டாலும் அந்த இடத்தை மாத்திரம் சுழித்துக்கொள்ளும் இயல்பு அதற்கு உண்டு. நான் அந்த வகையிலும் மாட்டைப்போலச் செய்ய முடிகிறதா என்பதை அறியும்பொருட்டு என் அருகில் வந்து ஒரு பருக்கைக் கல்லை எடுத்துப் போட்டான். நான் அந்த இடத்தை மாத்திரம் சுழித்துக்கொண்டேன். நுட்பம் தெரிந்த இடையன் அளவற்ற மகிழ்ச்சி அடைந்து இதை அளித்தான். அவன் அளித்த பரிசு உயர்வானது என்று நான் கருதுகிறேன். ஏனென்றால் என் வித்தையின் நுட்பத்தை அவன் ஒருவன்தான் அறிந்து ரஸித்தான்" என்று விளக்கம் செய்தான். அரசனுக்கு அப்போதுதான் இடையன் நல்ல ரஸிக சிரோமணி என்பது தெரியவந்தது.

எல்லா ரஸிகர்களையும் விட நுட்பம் அறிந்து வியக்கும் ரஸிக சிரோமணியாகிய இடையன் அளித்த பரிசு மற்றவர்களுக்குச் சாமானியக் கம்பளிதான். ஆனால் வித்தையாடிக்கோ உயர்ந்த பொக்கிஷம். கலைஞர்களுக்குப் பணமும் காசும் பட்டமும் தரும் மகிழ்ச்சியைக்காட்டிலும் இடம் கண்டு சுவைக்கும் ரஸிகர்களின் பாராட்டினால்தான் அதிக மகிழ்ச்சி உண்டாகிறது.

மேடையிலே ஏறி ஏதோ அற்புதமான விஷயத்தைப் பேசுகிறோம். பல நாள் ஆராய்ந்த செய்தியை ரஸமாகச் சொல்ல முற்படுகிறோம். ஆனால் முன்னாலே சபையில்

உட்கார்ந்தவர்களுடைய முகங்களில் மலர்ச்சி ஏதும் தோன்றுவிட்டால் நமக்குப் பேச்சு எழுவதில்லை. சொல்ல வேண்டிய விஷயங்களெல்லாம் மறந்து போகின்றன. குரல் எடுப்பாக வருவதில்லை. "இவர்கள் நன்ருக ரஸிக்க வில்லையே!" என்ற எண்ணம் மனசுக்குள் வேதனையை உண்டாக்கத் தொடங்குகிறது. அதனால் பேசுவதற்குத் தடையும் ஊக்கக் குறைவும் உண்டாகின்றன. மின்சார சக்தி பாய்ந்த கம்பி, கட்டையைக் கண்டால் ஒன்றும் பயனின்றி நிற்பதைப்போல நம்முடைய ஊக்கமும் தடைபட்டு நின்றுவிடுகின்றது.

ஆனால் முன்னாலே உட்கார்ந்திருப்பவர்கள் ரஸிகர்களாக இருந்து விட்டாலோ, எத்தனை உற்சாகமாகப் பேச்சு வருகிறது! நாம் நினையாத பொருள்களெல்லாம், அந்தச் சமயத்துக்கென்று எங்கிருந்தோ வந்து கைகொடுக்கின்றன. புதிய புதிய உவமைகளைச் சொல்கிறோம். புதிய புதிய கருத்துக்களை அள்ளி வீசுகிறோம். ஏதோ புதிய ஆற்றல் பெற்றது போல மேலே மேலே ஊக்கங்கொண்டு பேசுகிறோம். பேசி முடிந்த பிற்பாடு, "நாமா இத்தனையும் பேசினோம்?" என்று கூட நமக்குத் தோன்றிவிடுகிறது. இதற்குக் காரணம் என்ன? முன்னாலே அமர்ந்திருக்கும் ரஸிகர்களின் முகமலர்ச்சிதான். அதுவும், நடுவே இரண்டொரு கைதட்டல் கிடைத்து விட்டதானால், பிறகு பேச்சு அசுவகதியில்தான் செல்லும்.

இயற்கையாக அறிவும் பேச்சுத் திறமையும் இருந்தாலும் ரஸிகர்களுடைய முன்னிலையில் அது பல மடங்கு அதிகமாக விளக்கத்தை அடையும்.

பயிர் நிறைந்த பாத்தியில் பயிர் தானே வளர்கிறது; அதற்கு நீரும் விட்டால் எப்படி இருக்கும்? மேலும் மேலும் வளரும். இல்லாவிட்டால் முளை கிளம்பி இரண்டு இலை கிளம்பிப் பிறகு கருகிப்போய்விடும்.

இதேமாதிரி நல்ல ரஸிகர்களுடைய கூட்டத்தில் ஏதாவது ஒன்றைச் சொன்னால், மேலும் மேலும் சொல்ல வேண்டும் என்ற ஆர்வம் பிறக்கும். இதைத் திருவள்ளுவர் சொல்கிறார்.

**" உணர்வது உடையார்முற் சொல்லல் வளர்வதன்**
**பாத்தியுள் நீர்சொரிந் தற்று."**

'பிறர் எடுத்துக் காட்டவேண்டிய அவசியமே இல்லாமல் சுவையுள்ள பகுதிகளை நுட்பமாக உணர்ந்து இன்புறும் ரஸிகர்கள் கூடிய சபையில் ஒன்றைச் சொல்வது, நிலத்தின் வளத்தாலும் வித்தின் சிறப்பாலும் தானே வளரும் பயிருக்குப் பாத்தியிலே நீரையும் பாய்ச்சினாற் போலாகும்!'

ஒரு வடமொழிப் புலவர் பிரம்மதேவனை வேண்டுகிறார்.

"சுவாமி! நீர் என் தலையில் என்ன வேண்டுமானாலும் எழுதிக் கொள்ளும். அதனால் வரும் பலனை அநுபவிக்கச் சித்தமாக இருக்கிறேன். ஆனால் ஒன்றுமாத்திரம் எழுத வேண்டாம் சுவாமி; எழுத வேண்டாம். ரஸிகத் தன்மை இல்லாதவனிடம் சென்று நான் பாடிய கவியைச் சமர்ப்பிக்கிற பரிதாப நிலை எனக்கு வேண்டாம். அப்படிச் சமர்ப்பிக்கும்படியாக என் தலையின்மேல் எழுத வேண்டாம்; எழுத வேண்டாம்; எழுத வேண்டாம்' என்று அந்தப் புலவர் சொல்கிறார். "எழுதாதே, எழுதாதே, எழுதாதே" என்று மூன்றுமுறை சொல்லுகிறார்.

* * *

ரஸிகர் அல்லாதவர்களிடம் போய்ப் பட்ட துயரங்களை எத்தனையோ புலவர்கள் பாடியிருக்கிறார்கள்.

ஒரு புலவர் பாட்டுப் பாடினார். யார் யாரிடமோ காட்டினார். அவர்கள் மதிக்கவில்லை. 'பொதுவாகப் பாடினால் இவர்களுக்குச் சிரத்தை இல்லை. இவர்களைப்பற்றியே

பாடி அதைச் சொல்லலாம். அதையாவது கேட்கிறார்களா, பார்ப்போம்' என்று எண்ணினார். தமக்குத் தெரிந்த பேர் வழிகளின் பெயர்களைத் தனியே குறித்துக் கொண்டார்.

ஒவ்வொருவர் மேலும் பாடல்களைப் பாடிக் கொண்டு போய்ச் சொல்லிக் காட்ட வேண்டுமென்று திட்டம் போட்டார். முதலில் ஒருவர்மேல் பாடிக்கொண்டு போனார். அவர் இவர் முகத்தைக்கூட ஏறிட்டுப் பார்க்க வில்லை. பணம் பிடுங்க வருகிறான் என்று மூஞ்சியைக் கடு கடுப்பாக வைத்துக்கொண்டார். பாவம்! புலவர் ஏமாந்து போனார். மறுபடியும் வேறு ஒருவரைப் பாராட்டிப் பாடிக் கொண்டு அவரைப் போய்ப் பார்த்தார். அங்கும் அவருக்கு வரவேற்பு இல்லை. அவருடைய தலையெழுத்து, ரஸிகர் களே அவர் கண்ணுக்கு அகப்படவில்லை. போன இடங் களிலெல்லாம் அவர் கண்டவை கடுகடுத்த முகமும், வெடு வெடுத்த பேச்சுமே. இப்படிப் பாடின பாட்டுக்களை எழுதி வைத்த ஏடுகளை யெல்லாம் கிழித்துப் போட்டார். எத்தனை ஏடுகள்! எழுத்தாணி எத்தனை விதம் உண்டோ அத்தனை யும் வாங்கித் தேய்த்ததுதான் மிச்சம். ஒரு ரஸிகனைக் கூடக் காணவில்லை. பணம் கொடுக்க வேண்டாம்; ''பாட்டு நன்றாக இருக்கிறது'' என்று ஒரு வார்த்தை சொல்லக் கூடாதா? அந்தப் பாவிகளுக்கு அந்த விஷயத்தில் நாக்குச் சுளுக்கிக்கொண்டது.

இப்போது புலவருக்கு ஞானோதயம் உண்டாயிற்று. ''இனிமேல் எந்த ரஸிகரைப் பார்க்கலாம்?'' என்று யோசித் தார். ''அருணதள பாதபத்மம் அதுநிதமுமே துதிக்க அரிய தமிழ்தான் அளித்த மயில் வீரா'' என்ற திருப்புகழ் அவர் நினைவுக்கு வந்தது. பழனியாண்டவன்தான் பரம ரஸிகன் என்ற தீர்மானத்துக்கு வந்தார். நேரே பழனிக்குப் போனார். ''ஆண்டவனே! நான் ரஸிகர்களைத் தேடி அலைந் தது போதும். இனி நீதான் கதி'' என்று ஆண்டவன்

காலடியில் விழுந்து எழுந்தார். தாம் பட்ட பாட்டைப் பற்றிப் பாடினார்.

"ஏட்டுக் கணக்கும், எழுத்தாணி
தேய்ந்ததும், யாங்கள்விற்ற
பாட்டுக் கணக்கும், பயன்பெற
லாம்என்று பாடிச்சென்ற
வீட்டுக் கணக்கும் தொகைபார்க்கின்
கார்க்கடல் வெண்மணலைக்
கூட்டிக் கணக்கிட லாமே
பழனிக் குருபரனே"

என்பது அவர் பாட்டு.

ஆகவே, கலைஞர்கள் எத்தனைதான் அறிவிலும் குணத்திலும் ஆற்றலிலும் சிறந்தவர்கள் ஆனாலும், அவர்களுடைய கலை மேன்மேலும் வளர வேண்டுமானால் ரஸிகர்களுடைய ஆதரவு வேண்டும். ரஸிகர்களின் ஆதரவு இருந்தால் எதிர்பாராத இடங்களிலெல்லாம் கலை ஊற்று எழும்பும்.

# குழந்தை வளர்ப்பு

குழந்தை வளர்ப்பைப் பற்றி ஒரு வாரம் விடாமல் சில புத்தகங்களைப் படித்தேன். என்ன அழகாக எழுதியிருக்கிறார்கள்! "குழந்தைகளைத் திட்டக்கூடாது; வையக் கூடாது; அன்பினால் வழிக்குக் கொண்டு வரவேண்டும்; பயப்படுத்தக் கூடாது" என்றெல்லாம் தக்க காரணங்களைத் தெளிவாக எடுத்துக் காட்டி அவர்கள் எழுதியிருப்பவற்றைப் படித்த பிறகு, பல காலமாக நான் செய்து வரும் தவறான காரியங்களை நினைத்து வருத்தப்பட்டேன். "போனது போகட்டும்; இனிமேலாவது குழந்தையின் உள்ளத்தை அறிந்து அன்பாக நடந்துகொள்ளவேண்டும்" என்று தீர்மானித்துக்கொண்டேன்.

இந்தத் தீர்மானம் செய்த அன்று மாலை நான் காரியாலயத்திலிருந்து வரும்போது கையில் ஒரு புதிய பத்திரிகையை எடுத்து வந்தேன். அமெரிக்காவில் வெளியாகும் பத்திரிகை அது. அப்படிச் சொன்னாலே போதும்; அதனுடைய படக் கவர்ச்சியைப் பற்றியோ, வண்ண ஓவியங்களைப்பற்றியோ நான் தனியே எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. பத்திரிகையை மேஜையின் மேல் வைத்துவிட்டுக் கை கால் கழுவிக்கொண்டு வந்தேன். அதற்குள் அந்தப் பத்திரிகை என் கடைசிக் குழந்தையின் கண்ணில் பட்டுவிட்டது. அட்டைப் படம் தன் வண்ணங்களையெல்லாம் காட்டி வா வா என்று அழைக்கும்போது அவன் சும்மா இருப்பானா? அந்தப் பத்திரிகையை எடுத்து உட்கார்ந்து தன் காலை நீட்டிக்கொண்டு துடையின்மேல் வைத்துப் புரட்டிக் கொண்டிருந்தான். மூன்று வயசுக்

குழந்தைக்கு இங்கிலீஷ் தெரியுமா என்ன? பச்சை, மஞ்சள், சிவப்பு ஆகிய வண்ணங்கள் பழுக்காய்ச் செப்பைப்போல் பளபள வென்று தெரிந்தன. அவற்றைப் பார்த்துப் புரட்டிக்கொண்டே இருந்தான். காகிதங்கள் அவன் கைக்குள் கசங்கி மடங்கி நலிந்தன. நான் வந்து பார்க்கையில் புத்தகம் அவனுடைய துடையின்மேல் விரிந்து கிடந்தது. அவன் குனிந்தபடியே அதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

எனக்குக் கோபம் வந்தது. முன்பெல்லாம் இப்படி நான் கண்டால் உடனே பளார் என்று அவன் முதுகில் அறைந்திருப்பேன். இப்போது நான் குழந்தை வளர்ப்புப் புத்தகங்களைப் படித்து அறிவு பெற்றவனாயிற்றே! ஆகையால் கோபம் வந்தாலும் அடக்கிக்கொண்டேன். "அதைத் தொடாதே!" என்று கத்த ஆரம்பித்தேன். அதற்குள், "குழந்தையினிடம் அதைச் செய்யாதே, இதைச் செய்யாதே என்று தடுத்தால், அது அந்தக் காரியங்களை அப்போதைக்குச் செய்யாமலிருந்தாலும் மறைவாக அவற்றைச் செய்ய ஆரம்பிக்கும். வேறு ஒரு காரியம் செய்யும்படி அதன் கவனத்தை மாற்றுவதுதான் நல்ல வழி" என்று ஒரு புத்தகத்தில் வாசித்தது நினைவுக்கு வந்தது. ஆதலால் அதற்கு வேறு ஒரு புத்தகத்தைக் கொடுத்து அமெரிக்கப் பத்திரிகையை வாங்குவதுதான் குழந்தை வளர்ப்புக் கலையின்படி நடப்பதாகும் என்று எண்ணி, வேறு எதையாவது கொடுக்க முயன்றேன். அலமாரியில் ஒரு புத்தகம் இருந்தது. அது இன்னதென்று பார்க்காமலே அதை எடுத்துக் குழந்தையிடம் காட்டி, "இதோ பார்; இந்தா, பாத்தையா ஆனே" என்று சொல்லி அதை அவன்மேல் போட்டுவிட்டு, அவன் கையிலிருந்த என் பத்திரிகையைப் பிடுங்கிக் கொண்டேன். வேறு ஒரு புத்தகத்தைக் கொடுக்கத் தெரிந்ததே ஒழிய, அதனிடம் குழந்தையின் கவனத்

தைச் செலுத்தச் செய்து, பிறகு என் பத்திரிகையை வாங்குவதற்குப் பொறுமையில்லை.

தன்னிடமிருந்த விளையாட்டுப் பொம்மையைப் பிடுங்கிக்கொண்டால் குழந்தை அழுது வீம்பு பிடிப்பது இயல்பு. இந்தக் குட்டிப் பயலும் அதைத்தான் செய்தான். நான் கொடுத்த புத்தகத்தைக் காலாலே தள்ளிவிட்டுக் கத்தினான். பத்திரிகைதான் வேண்டுமென்று அழுதான். அவன் தள்ளிவிட்ட புத்தகத்தை மறுபடியும் அவனிடம் கொடுத்தேன். அவன் ஆ, ஊவென்று கத்தினான். அந்தப் புத்தகத்தைத் தாறுமாறாகக் கிழித்தான். அது ஏதோ 'கேட்லாக்' என்று தோன்றியது; ஆகையால் அது கிழிவதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. குழந்தை மறுபடியும் என் கையில் இருந்த பத்திரிகைக்குத் தாவினான். நான், "உதைப்பேன்" என்று கத்தினேன். அதுவரையில் இருந்த என் நிதானம் தவறிவிட்டது.

இந்த ஆரவாரத்தினிடையே என் மனைவி அடுப்பங்கரையிலிருந்து வந்தாள். "என்ன இது ரகளை? குழந்தையை ஏன் அழவிடுகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"நானா அழவிட்டேன்? போக்கிரி. இந்தப் பத்திரிகை வேண்டுமாம். இவன் கையில் அகப்பட்டால் புத்தகம் உருப்படியாக இருக்குமா?" என்றேன்.

அவள் கண்ணில் குழந்தை கிழித்தெறிந்த புத்தகம் பட்டது. பரபரப்புடன் ஓடிவந்து அதை எடுத்தாள். "ஐயையோ! இதை யார் இவனிடம் கொடுத்தார்கள்? கோலப் புத்தகமல்லவா இது? கமலியினிடம் இரவல் வாங்கி வந்தேன். அலமாரியில் வைத்திருந்த இதை யார் எடுத்துக் கொடுத்தார்கள்?" என்று அவள் கேள்விமேல் கேள்வியை அடுக்கினாள். அங்கலாய்த்தாள். அதோடு நின்றாளா? "கொல்லு. ஊரார் புத்தகத்தை இப்படியா

கிழிக்கிறது? இனிமேல் புத்தகத்தைத் தொடாதே, தொடாதே!" என்று பல்லைக் கடித்துக்கொண்டு குழந்தையின் முதுகில் நாலு மொத்து மொத்தினாள். அவன் வீல் என்று கத்தியபடியே வந்து என் காலைக் கட்டிக் கொண்டான்.

என் மனைவியின் ரௌத்திராகாரம், குழந்தையின் ஓலம், கோலப் புத்தகத்தின் அலங்கோலம் இவற்றின் இடையே நான் நின்றேன்,

" அவளுக்கு என்ன பதில் சொல்வேன்?" என்று மறுகினாள் என் மனைவி; மறுபடியும் குழந்தையை அடிக்க வந்தாள். நானோ இந்த மாதிரி சமயங்களில் என்ன செய்ய வேண்டும் என்று நான் வாசித்த 'குழந்தை வளர்ப்புப்' புத்தகங்களில் ஏதாவது இருந்ததா என்று யோசித்துப் பார்த்தேன்; ஒன்றும் புலப்படவில்லை.

" என்ன யோசிக்கிறீர்கள்? புதுப் புத்தகமாக வாங்கிக் கொடுத்துவிட வேண்டும். தெரிகிறதா?" என்றாள் என் மனைவி.

"ஆகட்டும்" என்று என் வாய் முணு முணுத்தது. ஆனால் என்னுடைய சிந்தனைமட்டும், "குழந்தை வளர்ப்பைப் பற்றிய புத்தகம் எழுதினவர்களுக்கு உண்மையிலே மனைவி, குழந்தை குட்டிகள் இருப்பார்களா?" என்ற சந்தேகத்தில் தடுமாறிக் கொண்டிருந்தது.

# அவைத் தலைவர்

மேடைப் பேச்சுக்கு இந்தக் காலத்தில் பெரிய மதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அரசியலானாலும் சரி, இலக்கியமானாலும் சரி, கலை, தத்துவம் எதுவானாலும் சரி, மேடையிலேதான் இப்போதெல்லாம் வளர்கின்றன. மேடையிலும் பலவகை உண்டு. வெளியூர் மேடைகளுக்கும் சென்னை மேடைக்கும் வேற்றுமை பல. சென்னையிலே இருபது பேரை வைத்துக்கொண்டு அகில லோக மகாநாடு நடத்திவிடலாம். கூட்டம் வந்ததோ இல்லையோ, பத்திரிகைக்காரர்கள் தயவு மாத்திரம் இருந்தால் பத்தி பத்தியாக மகாநாட்டுச் செய்திகள் பத்திரிகைகளில் வந்துவிடும். வெளியூர்க்காரர்கள், லட்சக்கணக்கில் கூட்டம் வந்ததாகவும் வெகு விமரிசையாக மகாநாடுகள் நடந்ததாகவும் எண்ணிக் கொள்வார்கள்.

மகாநாடோ, அல்லது சாதாரணக் கூட்டமோ எதுஆனாலும் அவைத் தலைவர் அவசியம். அவைத் தலைவரைப் பொறுக்குவதில் சபை கூட்டுகிறவர்களுக்குச் சங்கடம் நேர்வதுண்டு. கூட்டத்துக்குத் தகுந்தபடி தலைவர் வேண்டும். சொற்பொழிவாளர்களுக்கு ஏற்றபடி கூடத் தலைவரைத் தேடும்படி இருக்கும். யானையைப்போலப் பெரிய சொற்பொழிவாளரைப் பேசக் கூப்பிட்டுவிட்டு எலியைப்போல நாலு பேருக்குத் தெரியாத தலைவரைப் போட்டால் கூட்டம் ரஸிக்காது. சொற்பொழிவாளரே பேச வரமாட்டேனென்று சொன்னாலும் சொல்லிவிடுவார்.

அவைத் தலைவர் நல்ல பேச்சாளியாக இருந்தால் ஒரு வகை ஆபத்து உண்டாகும். சில தலைவர்கள் கூட்டம் நடக்கும் நேரத்தில் முக்கால்வாசிப் பொழுதைத் தாமே எடுத்துக் கொண்டு விடுவார்கள். முன்னுரை யென்று ஒரு மணி நேரம் பேசுவார்கள். பிறகு சொற்பொழிவாளரை அறிமுகப்படுத்த ஒரு கால்மணி நேரம். அதோடு நின்றால் நன்றாக இருக்கும். சொற்பொழிவாளர் பேச இருக்கும் பொருளைப்பற்றி மறுபடியும் அரை மணி நேரம் பேசுவார்கள். சொற்பொழிவு செய்ய வந்தவர் அரைகுறை ஆசாமியாக இருந்தால், தாம் சொல்வதாக எண்ணியிருந்த அத்தனை விஷயத்தையும் அந்தப் படுபாவித் தலைவர் ஒவ்வொன்றாகப் பறித்துக் கொள்வதை அறிந்து திண்டாடுவார். தலைவர் முன்னுரை ஒரு வழியாக முடிந்து சொற்பொழிவாளர் பேசுவார். அவர் பேச்சு முடிந்தவுடன் இந்த வாயாடித் தலைவர்கள் அடுத்த சொற்பொழிவாளரை அழைப்பதில்லை. நடந்த சொற்பொழிவின் பின்னுரையாக அரை மணியோ, ஒரு மணியோ பொழிந்து தள்ளிவிடுவார். அவையில் இரண்டு மூன்று பேருடைய சொற்பொழிவுகளைப் போட்டிருந்தால் வந்தது ஆபத்து. ஒவ்வொன்றுக்கும் முன்னுரை, பின்னுரை கூறுவதில் அவைத் தலைவர் முனைந்து, அவையோர்களின் பொறுமையைச் சோதித்து விடுவார்.

புத்திசாலியான அவைத் தலைவர்கள் முன்னுரையில் சொல்ல வேண்டியவற்றைச் சொல்லி விடுவார்கள். சொற்பொழிவாளர்கள் எல்லாம் பேசின பிற்பாடு எல்லாச் சொற்பொழிவுகளுக்கும் சேர்த்துப் பின்னுரை சொல்வார்கள். இப்படிச் செய்தால் சொற்பொழிவாளர்களும் அதிருப்தியை அடையமாட்டார்கள்; சபையினரும் மதிப்புக் கொடுப்பார்கள். இதை விட்டுவிட்டு, "எங்கே நமக்குப் பேச இடம் கிடைக்காமற் போய்விடுகிறதோ?"

என்று எண்ணி, அடுத்தடுத்துத் தம்முடைய உரைகளை நிரப்பி வந்தால், அவரை அடுத்தபடி அவைத் தலைவராக அழைப்பதற்கே அஞ்சுவார்கள்.

சிலர் அவைத் தலைவராக வந்துவிட்டாலே மேதாவி யென்று தம்மை நினைத்துக் கொள்கிறார்கள். சொற்பொழி வாளர் பேச்சில் ஏதாவது குற்றம் கண்டு பிடித்தால்தான் தம்முடைய கௌரவம் நிலைநிற்கும் என்று நினைத்துக் கொள்கிறார்கள். இந்தப் பழக்கத்தை வளர விட்டுச் சில அறிஞர்கள் சொற்பொழிவாளர்களுடைய வெறுப்புக்கு ஆளாகி யிருக்கிறார்கள். சிலர் தமக்குப் பின்னாலே பதில் சொல்ல ஆள் இல்லை என்ற தைரியத்தால் சொற்பொழி வைப் பற்றி எதையாவது உளறிக் கொட்டிவிடுவார்கள். அவ்வாறு ஏற்பட்ட சில சமயங்களில் நன்றி கூறவந்தவர் அவரை இறக்கி விடுவதும் உண்டு.

படித்தவர் அவைத் தலைவராக இருந்தால் முக்கிய மாகச் சொற்பொழிவாளர்கள் கூறியவற்றைத் தொகுத் துத் தந்து, அவர்கள் கூறிய சில விஷயத்தைப் பின்னும் வற்புறுத்துவதைப்போலத் தாம் சொல்ல வேண்டியவற் றைச் சொல்வார்கள். இந்த வகையில் காலஞ்சென்ற ஞானியார் சுவாமிகள் அசகாய சூரர். சபையாக. ஒருவர் ஒரு பொருளைப் பேசிவிட்டார்; சரக்கே இல்லை. தலைவர் பின்னுரையில் அற்புதமாக அதே விஷயத்தைப் பேசி விட்டு, "இவற்றை யெல்லாம் நினைப்பூட்டுவதாக இருந்தது அன்பருடைய சொற்பொழிவு" என்று நாகரிக மாக முடிப்பார். அது எத்தனை அழகாக இருக்கும்! அதை விட்டுவிட்டு, "அவர் பேசவேண்டிய பொருளைப்பற்றி ஒன்றுமே பேசவில்லை. இப்படிப் பேசுவது தவறு. நான் அதுபற்றிச் சொல்கிறேன் கேளுங்கள்" என்று அவைத் தலைவர் ஆரம்பித்தால் அவரை நாகரிகம் தெரிந்த மனிதர் என்று எப்படிச் சொல்லமுடியும்?

மிகவும் கடுமையாக, அவையினர் உள்ளம் புண்படும் படியாக ஒருவர் பேசிவிடுகிறார். அத்தகைய சமயங்களில் அவைத் தலைவர்பாடு திண்டாட்டமாகிவிடும். சபையினர், கைகொட்டிப் பேச்சை நிறுத்தப் பார்ப்பார்கள். சீட்டுகள் வரும். தலைவர் கடியாரத்தைத் திருப்பி வைப்பார். பேச்சாளர் முகத்தை அடிக்கடி பார்ப்பார். இந்தக் குறிப்பை யெல்லாம் சொற்பொழிவாளர் கவனிக்காவிட்டால், ''விரைவில் நிறுத்துங்கள்'' என்று எழுதிக் கொடுப்பார். சொற்பொழிவாளர் நிறுத்திய பிறகு அவர் கூறிய அபத்தங்களுக்கெல்லாம் விடை சொல்லவேண்டுமே! சபையிலுள்ளவர்கள் துடியாய்த் துடிப்பார்கள். அவைத் தலைவர் ஆற்றலில்லாதவராக இருந்தால் மேடையே போர்க்களமாகி விடும். ஆனால் அவர் தக்க அறிவும் சாமர்த்தியமும் உடையவராக இருந்தால் அவையினருடைய ஆத்திரத்தை அடக்கமுடியும்.

பின்னுரையில் சொற்பொழிவாளரை நேரே தாக்குவது சிறந்த தலைவருக்குரிய இலக்கணம் அன்று. ''நம்முடைய நண்பர் தம்முடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார். ஆனால் வேறுபட்ட கருத்துக்களும் உண்டென்பதை அவர் அறிந்திருப்பார். சபையினருக்கு மற்றொரு சாராருடைய கருத்துக்களும் தெரிந்தால் நலமாக இருக்கும்'' என்று தொடங்கிச் சொற்பொழிவாளரின் கூற்றுக்களிற் சிலவற்றிற்கு நயமாகச் சமாதானம் சொல்லி, ''இந்த விஷயங்களை யெல்லாம் அறிந்து, நண்பர் சொன்னவற்றை இவற்றோடு ஒப்பிட்டு நோக்கவேண்டும். இரு வேறு கட்சிகளையும் தெரிந்து கொண்டால்தான் உண்மை புலப்படும்'' என்று முடித்தால் சபையினர் கோபமும் தணியும்.

சில சொற்பொழிவாளர்கள் வேண்டுமென்றே தலைவரைக் குறிப்பாக இழித்துப் பேசுவார்கள். வேறு

எங்கேயோ அவர்கள் இரண்டு பேருக்கும் வாய்ச்சண்டை நடந்திருக்கும். அந்தச் சண்டையின் வாசனை இங்கும் வந்துவிடும். அத்தகைய சமயங்களில் அவைத் தலைவர் சாமர்த்தியமாக அவருக்குச் சூடு கொடுக்க வேண்டும்.

மனிதர்கள் தங்களுடைய விருப்பு வெறுப்புக்களைச் சமயம் வந்தபோது காட்டிக் கொள்வது இயல்பு. வாழ்க்கையில் அப்படிக் காட்டிக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் பல வரும். ஆனால் அறிவாளிகள் என்று சொல்லிக் கொண்டு மேடைமேல் பேச வருகிறவர்கள் கூடிய வரையில் இந்த விஷமங்களை அடக்கிக்கொண்டு பேசினால்தான் பேச்சுக் கலை உயர்வை அடையும். பேசுகிறவர்கள் அப்படி இருக்க வேண்டுமானால் அவைத்தலைவர்கள் பின்னும் பெருந்தன்மையுடன் நடந்துகொள்ள வேண்டும். அவைக்குத் தலைவர்களாக வருகிறவர்கள் மக்களின் மதிப்பைப் பெறவேண்டுமானால், தம்முடைய சொந்த விருப்பு வெறுப்புக்களையும் சில்லறைக் குறும்புகளையும் விட்டுவிட்டு மேடையில் ஏற வேண்டும். அப்படி இல்லாதவர்கள் அவைத் தலைமை வகித்தால் அவர்கள் இரண்டு கால் மனிதராக இருந்தும் நாற்காலி மனிதராக நடந்து கொள்வார்கள்.

## வீட்டுக் கணக்கு

அன்றன்று ஆகிற செலவை விடாமல் குறித்துக் கொள்வது நல்லது. பெண் பிள்ளைகள் வீட்டுக் கணக்கை எழுதி வைக்கவேண்டும். அது பல காரியங்களுக்கு உதவியாக இருக்கும்' என்று எப்போதோ படித்திருந்தேன். டைரி எழுதுவதும், வீட்டுக் கணக்கு எழுதுவதும் சிலருக்குத்தான் இயற்கையாகப் பொருந்துகின்றன. என்னைப் போன்றவர்களுக்கு எழுதவேண்டும் என்ற ஆசை இருக்கிறது; எழுதியும் வருகிறேன். ஆனால் எப்படி எழுத வேண்டுமோ, அப்படி எழுதுகிறதில்லை.

வீட்டுக் கணக்கு விஷயத்தை எடுத்துக் கொள்ளலாம். 'ஒரு வீட்டில் என்ன கணக்கு அப்படி விரிவாக இருக்கப் போகிறது?' என்று சிலர் நினைக்கக்கூடும். அரசாங்கக் கணக்கைவிட வீட்டுக் கணக்குச் சிக்கல் நிறைந்தது என்பது அநுபவசாலிகளுக்குத் தெரியும். அரசாங்க வரவு செலவு ஒவ்வொன்றுக்கும் ஆதாரச் சீட்டு (Voucher) ஒன்று இருக்கும். ஆதாரச் சீட்டு என்ற பெயர் உங்களுக்குப் பிடிக்காவிட்டால் அடையாளச் சீட்டு என்று சொல்கிறேன். அதுவும் பொருத்தமில்லை யென்றால் ரசீது என்பதை வைத்துக் கொள்ளுங்கள். ரசீது வேறு, இது வேறு என்றால் 'வௌசர்' என்றே சொல்லிக் கொள்ளுங்கள்; அதைப் பற்றி இங்கே விவாதம் வேண்டாம். காரியாலயங்களிலும், கம்பெனிகளிலும், அரசாங்கத்திலும் 'வௌசர்களை'க் கொண்டு வரவு செலவை அறிந்து கொள்ளலாம்; சரி பார்க்கலாம். வீட்டுக் கணக்கிலே

இந்தச் சாட்சி எல்லாவற்றிற்கும் கிடைக்காது. வீட்டு வாடகைக்கு வீட்டுக்காரர் ரசீது தருவார். ஜவுளிக் கடையில் ஆடைகள் எடுத்தால் 'பில்' கிடைக்கும். டாக்டருக்குப் பணம் கொடுத்தால் அவர் ரசீது தருகிறார்; அல்லது முன்பே அவர் தந்த பில் இருக்கிறது. பையனுக்குச் சம்பளம் கட்டினால் பள்ளிக்கூடத்தில் ரசீது தருகிறார்கள். ஆனால் காய்கறி வாங்கினால் அதற்குப் பில்லோ, ரசீதோ ஏது? வெளியிலே புறப்படுகிறோம். பஸ்ஸில் போனால் கண்டக்டர் கொடுக்கும் 'டிக்கட்டை'ப் பத்திரப்படுத்தி வைத்து வீட்டுக்குக் கொண்டு வந்து கணக்கு எழுத முடியுமா? அப்படியே நினைவோடு செய்தாலும், ரிக்ஷாவிலே போனால் அவனிடம் ரசீது கேட்பதா? குழந்தைக்குப் பெப்பர்மிட் வாங்குகிறோம்; முக்காலணவுக்கு ஏதோ வழியில் இருக்கிற வெற்றிலை பாக்குக் கடையில் வாங்குகிறோம். 'அதற்குப் பில் போட்டுத் தா' என்று கேட்பது?

ஆகவே இந்த 'வௌசர்' சமாசாரம் வீட்டுக் கணக்கு விஷயத்தில் சரிப்பட்டு வராது. நம்முடைய ஞாபக சக்தியை நம்பித்தான் வீட்டுக் கணக்கை எழுதவேண்டும். வீடு என்றால் நாம் மட்டுமா இருக்கிறோம்? நம்முடைய மனைவி, குழந்தைகள், தம்பி, தங்கை—இப்படிப் பலபேர் இருக்கிறதனால்தான் குடும்பம் என்றும் வீடு என்றும் பெயர் வருகிறது. கணக்கை யாராவது ஒருவர் வரன்முறையாக எழுதினால் ஒழுங்காக இருக்கும். 'அவரவர்கள் தங்கள் தங்கள் செலவைத் தனித்தனியே குறித்துக் கொடுத்து விட்டால் எல்லாவற்றையும் சேர்த்து எழுதி விடலாமே!' என்று விஷயந் தெரியாதவர்கள் சொல்லலாம். வீடு என்பது காரியாலயமா? வரவு செலவுக் கணக்கு எழுதுகிற கணக்குச் சாவடியா? பையன் ஒரு ரூபாயோ, இரண்டு ரூபாயோ வாங்கிக் கொண்டு

போகிருன். சிநேகிதனேடு ஊர் சுற்றிவிட்டு வருகிருன். அவனுக்குக் கொடுத்த ரூபாய்க்குக் கணக்குக் கேட்பதை விட அப்படியே, இன்ஞர் செலவு இரண்டு ரூபாய் என்று எழுதிவிடுவது உத்தமம். நாலணு, ஐந்தணு மிச்சம் இருக்கலாம். அதை அவனுகக் கொடுத்தால் வாங்கி வைத்துக் கொள்ளலாம்; இல்லாவிட்டால் செலவுக் கணக்கில் எழுதி விடலாம். இதை விட்டுவிட்டு அவனிடம் கணக்குக் கேட்டு, மிச்சத்தைக் கீழே வைக்கச் சொல்லித் தடபுடல் படுத்திஞல், 'ஏண்டா நாம் வெளியிலே போனேம்!' என்ற வேதனை அந்த இளைய நெஞ்சிலே புகுந்துகொண்டு உளைச்சல் கொடுக்கும். வீட்டுக் கணக்குப் பெரிதா, அவன் சந்தோஷம் பெரிதா?

கணக்கு என்ருல் எல்லாம் வந்துதான் ஆகவேண்டும் என்பது உண்மை. பையன் செலவழித்த பணத்துக்குக் கணக்குக் கேட்கிருேம். அவன் எல்லாவற்றையும் ஞாபகம் வைத்துக் கொண்டு சொல்வது எளிதன்று. அப்படிச் சொன்ஞலும் சில சமயங்களில் உண்மையான கணக்காக இருக்காது. "நிலக்கடலை வாங்கிச் சாப்பிடாதே!" என்று குழந்தைகளுக்கு நாம் சொல்லி யிருப்போம். பையன் கடற் கரைக்குப் போய் நண்பர்களோடு உல்லாசமாக இருந்து விட்டு வருவான். அங்கே சுடச்சுட நிலக்கடலையை அரையணுவுக்கோ, முக்காலணுவுக்கோ வாங்கித் தின்றிருப்பான். "நிலக்கடலை வாங்கக் கூடாது" என்று உத்தரவிட்டிருக்கும் நம்மிடம், "நிலக்கடலை அரையணு" என்று கணக்குச் சொல்வாஞ? சொல்லமாட்டான். "வாழைப் பழம் அரையணு" என்று மாற்றிச் சொல்வான். நாம் வாழைப்பழம் வாங்கி வந்தால் கண்ணெடுத்தும் பார்க்காதவன் அவன் என்பது நமக்கு நன்ருகத் தெரியும். "ஏண்டா, உனக்கு வாழைப்பழந்தான் பிடிக்காதே?" என்று கேட்டால், "இல்லை, பேரிக்காய் வாங்கினேன்;

மறந்துபோய் வாழைப்பழம் என்றேன்'' என்று சமாதானம் சொல்வான். அவனிடமிருந்து உண்மையை வருவித்துவிட வேண்டுமென்று நமக்கு ஆசை. மறுபடி கேள்வி போடுகிறோம். ''பேரிக்காய் கடற்கரையில் விற்கிறார்களா?'' என்று கேட்கிறோம். அவன், ''இன்று புதிதாக வந்தது; அதனால்தான் வாங்கினேன்'' என்று நம்முடைய கேள்வியின் பலத்தைக் கொண்டே சமாளித்து விடுகிறான். நமக்கு உண்மையாகக் கணக்கு எழுதவேண்டு மென்ற ஆசை. உண்மையை எழுதுவதில் சங்கடம் இல்லை. 'கடற்கரையில் பையனுடைய செலவு அரையணா' என்று எழுதுவது நூற்றுக்கு நூறு உண்மைதான். ஆனால் நாம் உண்மையைத் தெளிவாக எழுதவேண்டும் என்று விரும்பு கிறோம். இந்த முயற்சியில் பையனுக்குப் பொய் சொல்லக் கற்றுக் கொடுக்கிறோம்.

இன்ன பண்டத்துக்காகச் செலவழிந்தது என்பது தெரியவேண்டும் என்று நினைக்கிறோம். எதற்கு அது தெரியவேண்டும்?—அதுதான் நமக்கே தெரியவில்லை. ஒரு வருஷத்தில் நம்முடைய பிள்ளையாண்டான் எத்தனை ரூபாய்க்கு நிலக்கடலையும், எத்தனை ரூபாய்க்குப் பட்டாணிக் கடலையும், எத்தனை ரூபாய்க்குச் சாக்கொலேட்டும் வாங்கி யிருக்கிறான் என்று ஒட்டு மொத்தக் கணக்குப் போடப் போகிறோமா? நிலக்கடலையை ஒரு பையன் ஒரு மாதத்துக்கு இவ்வளவு வாங்கினால், ஊரில் வாழும் இத்தனை சிறுவர்கள் இவ்வளவு வாங்குவார்கள் என்று புள்ளிக் கணக்கைத் தயார் செய்யப் போகிறோமா? அது ஒன்றும் இல்லை. நாம் வீட்டுக் கணக்கு எழுதுகிறோம். அது பெரிய சாதனை. அதை நன்றாக, விவரமாக, தெளிவாக எழுதி விட்டோம் என்ற திருப்தி வரவேண்டுமே, அதற்காகத்தான் இவ்வளவு சிரமப்படுகிறோம்; மற்றவர்களையும் சிரமத்துக்கு உள்ளாக்குகிறோம்.

எங்கள் வீட்டுக் கணக்கை நான் எழுதி வந்தேன் எங்கள் வீட்டுக் குழந்தைகளின் செலவை எழுதுவதில் எனக்குச் சங்கடம் ஏற்படவில்லை. என் மனைவி செய்யும் செலவைக் கேட்டு எழுதும் வகையில்தான் நான் அற்புத மான அநுபவங்களைப் பெற்றேன். கணக்கு எழுத ஆரம் பித்தபோது, கணக்கை எப்போது எழுதுவது என்ற கேள்வி எழுந்தது. முதல் நாள் கணக்கை மறுநாள் காலையில் எழுதுவது என்று சொன்னாள் என் மனைவி. "காலையில் உட்கார்ந்து கொண்டு எழுத முடியாது. யாராவது பார்க்க வருவார்கள். அந்தச் சமயத்தில், விளக்கு மாறு எத்தனைக்கு வாங்கினாய் என்று கேட்கலாமா? படுத்துக் கொள்வதற்கு முன்பு எழுதுவதுதான் சரி" என்று நான் சொன்னேன். "ஆமாம்; மறுநாள் கணக்கு மறந்தாலும் மறந்துபோகும். அன்றன்று எழுதுவது சுலபந் தான்" என்று என் மனைவி இப்போது எனக்குத் தாளம் போட்டாள்.

சில நாட்கள் ஒழுங்காகக் கணக்கை எழுதி வந்தேன். மாச ஆரம்பத்தில்தான் செலவுக் கணக்கு அதிகமாக இருக்கும். வீட்டு வாடகை, பால்காரன், டாக்டர், வெற் றிலைக்காரன், பள்ளிக்கூடச் சம்பளம் முதலிய மொத்தக் கணக்கெல்லாம் முதல் வாரத்திலே வந்துவிடுகின்றன. இன்ன இன்ன வகையிலே மொத்தச் செலவு ஆகிறது என்பது வழக்கமாகிவிட்டபடியால் அந்தக் கணக்கு எழுது வதில் சிக்கல் ஒன்றும் ஏற்படவில்லை. ஆனால் மற்ற நாட் களில் ஆகிற செலவு இருக்கிறதே, அதுதான் ஒருவகையில் அடங்குகிறதில்லை; பலபட்டடையாக இருக்கிறது. என் மனைவி புடைவைக் கடைக்குப் போய் வந்தால் பில் கொண்டு வருவாள்; அதோடு பூ வாங்கின கணக்கை ஞாப கம் வைத்துக் கொண்டு சொல்வாள். கடையில் ஏதேனும் வாங்கினாலும் கூடிய வரைக்கும் நினைவுபடுத்திக் கொண்டு

சொல்வாள். ஆனால் அவளும் சில சமயங்களில் கணக்குச் சொல்ல முடியாமல் விழிப்பதுண்டு.

அன்று ஐம்பது ரூபாய் எடுத்துகொண்டு போனாள். யாருடைய கல்யாணத்துக்கோ வெள்ளித் தம்ளரும் ஒரு ரவிக்கைத் துண்டும் வாங்கி வரலாம் என்று பணம் வாங்கிக்கொண்டாள்.

"இதற்கு ஐம்பது ரூபாய் எதற்கு?" என்று கேட்டேன்.

"எதற்கும் கையிலே இருக்கட்டுமென்றுதான் கேட்கிறேன்" என்றாள் அவள்.

"ஒரு வெள்ளித் தம்ளருக்கும் ரவிக்கைத் துண்டுக்கும் அதிகமாகப் போனால் இருபது, இருபத்தைந்து ரூபாய்க்கு மேல் வேண்டாம்" என்று சொன்னேன்.

"நான் வாங்கினதற்கு உங்களிடம் கணக்கு ஒப்பிக்காமலா இருக்கப் போகிறேன்? தம்பிடி தம்பிடியாகக் கணக்குப் பண்ணிக்கொண்டுதான் கடைக்குப் பணம் எடுத்துக்கொண்டு போவார்களா?" என்று கேட்டாள்.

"நான் தம்பிடியைக் கணக்குப் பண்ணவில்லையே? இருபது ரூபாய்க்கும் ஐம்பது ரூபாய்க்கும் உள்ள வித்தியாசத்தையே எடுத்துக் காட்டினேன்."

"சரி, சரி, நான் பணம் கேட்டால் உங்களுக்குக் கொடுக்க மனசு வராது. வழியிலே போகிறவன் வந்து பல் இளித்தால் ஐம்பது, நூறு தூக்கிக் கொடுத்துவிடுவீர்கள். எனக்கு என்ன பாடு? நீங்களே கடைக்குப் போய் உங்கள் சிநேகிதர் வீட்டுக் கல்யாணத்துக்கு வரிசைப் பண்டங்களை எடுத்து வாருங்கள்" என்று கோபக் கனலை வார்த்தைகளிலே அள்ளி வீசினாள்.

கடைக்குப் போவதற்கும் எனக்கும் வெகு தூரம். புடைவைக் கடையில் போய் நின்றுகொண்டு, "ரவிக்கைத்

துணி எடுங்கள்" என்று ஆண் மகனுகிய நான் கேட்பதா! அதை நினைக்கும்போதே எனக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது.

ஆகவே, "உனக்கு ஐம்பது ரூபாய் கொடுப்பதற்காக நான் சொல்லவில்லை. பணத்தைக் கொண்டுபோய்விட்டுப் பாதியைத் திருப்பிக் கொண்டுவருவானேன்? வேண்டிய தைக் கொண்டுபோய்ச் சாமானை வாங்கிக் கொண்டு வரலாமே என்ற எண்ணத்தால் சொன்னேன். நீ ஐம்பது ரூபாய் கொண்டுபோ; நூறுதான் கொண்டுபோ. எனக்கு உன்னிடத்தில் அவநம்பிக்கையா, அதை எடுத்துக்கொண்டு ஓடிப் போய்விடுவாய் என்று?" என்று சிரித்துக்கொண்டே கேட்டேன்.

அவள் கோபம் உடனே மறைந்தது. நாணம் வந்து விட்டது. "ஆமாம், உங்களுக்கு எப்போதும் பரிகாசந் தான்" என்று அவளும் புன்முறுவல் பூத்தாள்.

எப்படியோ, அவள்தான் வெற்றி பெற்ருள். ஐம்பது ரூபாயை எடுத்துக் கொண்டு கடைக்குப் போனுள். நான் மாலையில் வீட்டுக்கு வந்தேன். அவள் இன்னும் கடையி லிருந்து வரவில்லை. ஒரு நண்பரைப் பார்க்கப் போய்விட்டு இரவு எட்டு மணிக்கு வந்தேன். என் மனைவியிடம், "என்ன, எல்லாம் வாங்கினுயா?" என்று கேட்டேன்.

"வாங்கியிருக்கிறேன். அதைப்பற்றி அப்புறம் சொல் கிறேன். நீங்கள் சாப்பிடுங்கள்" என்ருள்.

சாப்பிட்டாயிற்று. வீட்டுக் கணக்கை எழுத உட் கார்ந்துகொண்டேன். "இன்று எத்தனை ரூபாய் செலவு பண்ணிஞய்? ஐம்பது ரூபாயையும் செலவு பண்ணிவிட்டா யல்லவா?" என்று அவளைக் கேட்டேன்.

"உங்களுக்கு எப்படி ஜோசியம் தெரிகிறது?" என்ருள்.

"உன்னோடு இவ்வளவு நாள் பழகி இது தெரியாதா?" என்று சிரித்தேன்.

"எடுத்துக் கொண்டு போன பணம் போதவில்லை..." என்று இழுத்தாள் அவள்.

"ஏன் ?"

"சொல்கிறேன். நல்ல வேளை ! கமலவல்லி கடைக்கு வந்திருந்தாள். அவளிடம் ஆறு ரூபாய் கடன் வாங்கினேன். விடிந்ததும் முதலில் அவளுக்குப் பணத்தைக் கொண்டு போய்க் கொடுத்துவிட்டு வரவேண்டும்."

அவள் கடைக்குப் போனால் எத்தனை எடுத்துக் கொண்டு போனாலும் திரும்பி வராது என்பது எனக்குத் தெரிந்த விஷயந்தான். இந்தத் தடவை கடனும் வாங்கியது விசேஷம். ஆனால் அதற்கு மேலும் ஒரு விசேஷம் காத்துக் கொண்டிருந்தது.

"வெள்ளித் தம்ளர் வாங்கினாயா ? என்ன விலை ?" என்று கேட்டேன்.

"வெள்ளிக் கடைக்குப் போகவே முடியவில்லை. புடைவைக் கடையிலேயே போது சரியாகப் போய்விட்டது. நாளைக்குத்தான் வெள்ளிக் கடை போகவேண்டும்."

"ஒரு ரவிக்கைத் துண்டு வாங்குவதற்கா இத்தனை நேரமும் பணமும் செலவழித்தாய் ?" என்று ஆத்திரத்துடன் கேட்டேன்.

"ஏன் அப்படிச் சிள்ளென்று விழுகிறீர்கள் ? வாய் வார்த்தையாகச் சொல்லிக் கொண்டு வருகிறபோதே இப்படி......"

"நாயே என்று சொல், கேட்டுக் கொள்கிறேன்; பேயே என்று சொல், கேட்டுக் கொள்கிறேன். உன்னால் எனக்கு வேறு பட்டம் என்ன கிடைக்கப் போகிறது ?"—நான் கொஞ்சம் கோபக்காரன் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

அவள் பேசவில்லை. கண் கலங்கியது. ஒரு சொட்டுக் கண்ணீரும் வந்தது. "என்றைக்காவது கடைக்குப் போனால் இந்தத் தொல்லைதான். நான் என்ன, பட்டும் பட்டாவளியும் வாங்கிப் பணத்தைக் கரைக்கிறேனா? எங்காவது போகலாமென்றால் இரண்டாம் புடைவையாகக் கட்டிக் கொள்ள நல்லது ஒன்றும் இல்லை. ஒவ்வொருத்தி கட்டிக் கொண்டிருக்கிறதைப் பார்த்தால்......" அவள் விம்மினாள்.

அவள் கண்ணீர் கண்டு என் கோபக் கனல் அணைந்து போயிற்று. "சரி, இன்று கணக்கு எழுத வேண்டாம். நாளைக்கு எழுதிக் கொள்கிறேன்" என்று சொல்லி அன்றைச் சண்டைக்கு முற்றுப் புள்ளி வைத்தேன்.

மறுநாள் இரண்டு பேருக்கும் நிதானம் வந்தது. நான் உண்மையை உணர்ந்தேன். அவள் கடைக்குப் போன போது புதிய மோஸ்தர்ப் புடைவைகள் வந்திருந்தன. அப்படி ஒன்றும் நூறு, இருநூறு பெறுவதல்ல. நாற்பது, ஐம்பது, அறுபதுக்குள்ளேதான். அவளுடைய சிநேகிதி கமலவல்லி நாலு புடைவை எடுத்தாள். இதே தெருவில் கோடியில் இருக்கும் குமாஸ்தாவின் மனைவிகூட இரண்டு புடைவை வாங்கினாள். இவளுக்கும் வாங்கவேண்டும் என்று ஆசை தோன்றியது; அதை வளர விடவில்லை. ஆனால் குடும்ப கவுரவத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டாமா? உடனொத்த சிநேகிதி நாலு புடைவைகளை வாங்குகிறாள்; நம்மைவிடக் குறைவாகச் சம்பளம் பெறுகிற வீட்டுப் பெண்மணி இரண்டு வாங்குகிறாள். இவள் மட்டும் வெறும் ரவிக்கைத் துண்டு மாத்திரம் வாங்கி வருவதா! நல்ல வேளை, ஐம்பது ரூபாயாக எடுத்துக்கொண்டு போனாள்.

ஒரு புடைவையைப் பொறுக்கி எடுத்தாள். நாற்பத்தெட்டு ரூபாய் விலை. கையில் இருந்ததோ ஐம்பது ரூபாய் தான். ரவிக்கைத் துண்டு ஆறு ரூபாய்க்காவது எடுக்கா

விட்டால் நன்றாயிருக்குமா ? கமலவல்லி பணம் தந்தாள்; ஆறு ரூபாய் வாங்கிக் கொண்டாள். புடைவை ரவிக்கை இரண்டும் வாங்கிக்கொண்டு வந்தாள்.—அவள் சொல்லத் தெரிந்து கொண்டது இது.

இப்போது கணக்கு எழுத உட்கார்ந்தேன். "புடைவை நாற்பத்தெட்டு ரூபாய். ரவிக்கைத் துணி ஆறு ரூபாய்; அப்படியானால் உன்னிடம் பாக்கி இரண்டு ரூபாய் இருக்க வேணுமே !" என்று கேட்டேன்.

"இருக்கும்" என்றாள் அவள்.

"இருக்கிறதா என்று பார். கணக்கென்றால் எதையும் விடக்கூடாது" என்றேன்.

அவள் தன் சிறு பர்ஸில் இருந்த சில்லறையை எண்ணிப் பார்த்தாள். ஒரு ரூபாயும் ஓரணாவும் இருந்தன. கொஞ்சநேரம் யோசனை பண்ணினாள். முதல் நாள் நடந்த செலவை ஞாபகப்படுத்திக் கொண்டு உடனே சொல்ல அவளால் முடியவில்லை.

" எத்தனை குறைகிறது ?" என்று கேட்டேன்.

" இரண்டு ரூபாய் என்கிறீர்களே ! ஒரு ரூபாய் ஓரணா இருக்கிறது. பாக்கி......?"

" அதைத்தான் நானும் கேட்கிறேன் ? பூ வாங்கினாயா ? காய்கறி வாங்கினாயா ? ரிக்ஷாவில் ஏறி வந்தாயா?"

நான் கேள்விகளை அடுக்கினேன். அவள், "இருங்கள். ஏன் அவசரப்படுகிறீர்கள் ? யோசனை பண்ணித்தானே சொல்ல வேண்டும் ? நேற்று உங்களிடம் பணம் வாங்கிக் கொள்வதற்குமுன் என் பையில் கொஞ்சம் சில்லறைகூட இருந்தது " என்றாள்.

" எத்தனை இருந்தது ?"

" அதைத்தான் இப்போது யோசிக்கிறேன்."

" ஓகோ. அதை முதலில் யோசித்து நன்றாகத் தெரிந்து கொண்டு, அப்புறம் அந்தப் பணத்துக்கும் இதில்

குறையும் பதினைந்தணுவுக்கும் என்ன செலவு என்று யோசிக்க வேண்டுமே! அதற்குப் போது இருக்குமோ?'' என்று கிண்டலாகக் கேட்டேன்.

அவள் நான் பேசுவதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. யோசனையில் ஆழ்ந்திருந்தாள். என் கிண்டல் காதில் விழுந்திருந்தால், மறுபடியும் இடியும் மின்னலும் மழையும் வந்திருக்கும்.

"வந்துவிட்டது, வந்துவிட்டது" என்றாள் அவள்.

"என்ன ஆபத்து?''

"நாளைக்குத்தானே அமாவாசை?''

"பஞ்சாங்கத்தைப் பார்க்க வேண்டும். அமாவாசைக்கும் நீ பண்ணின செலவுக்கும் என்ன சம்பந்தம்?''

"வீட்டில் எள் இல்லை. ஒன்றரையணுவுக்கு வரும்போது வாங்கி வந்தேன்.''

"ரொம்ப நன்றாக இருக்கிறது உன் வியாபாரம்! புதுப் புடைவையும் ரவிக்கையும் வாங்கினவள், கூட மஞ்சள் குங்குமம் என்று வாங்கி வராமல் எள்ளையா வாங்கி வருவார்கள்?'' என்று கிண்டல் செய்தேன்.

"அச்சான்னியமாய்ப் பேசாதீர்கள். உங்களுக்கு வேண்டாமென்றால் நான் புடைவையை இப்போதே கொண்டு போய்த் திருப்பிக் கொடுத்துவிட்டு வருகிறேன்."

"நான் பேசுகிறது அச்சான்னியமா? நீ செய்தது அச்சான்னியமா? யோசித்துப் பார்.''

"எள் வாங்கினது முந்தாநாள். புடைவை வாங்கினது நேற்று. இரண்டுக்கும் என்ன சம்பந்தம்?'' என்று அவள் கேட்டாள்.

"நீதானே இரண்டையும் சேர்த்துக் கணக்குச் சொன்னாய்?''

"நேற்றுக் காலையில் என் பையில் எத்தனை இருந்த தென்று யோசித்துப் பார்த்தேன். முதல் நாள் ஒன்றரை அணுவுக்கு எள் வாங்கினது ஞாபகம் வந்தது. அதுபோக அன்று எத்தனை மிச்சம் இருந்தது?" மறுபடியும் யோசனையில் ஆழ்ந்தாள்.

"சரி, சரி; சில்லறைச் செலவு என்று, விட்டுப் போன கணக்குக்கு வகை எழுதி விடுகிறேன். நீ ஏன் வீணாக மண்டையைக் குடைந்து கொள்கிறாய்?" என்றேன். என் கண் சுற்றியது எனக்கல்லவா தெரியும்?

கடைசியில் என் மனைவியின் செலவில் இனம் தெரியாத சில்லறைச் செலவு என்று ஒரு ரூபாயை எழுதி வைத்தேன். இது ஒருநாள் சமாசாரம். இன்னும் பலநாள் இப்படியே வாக்குவாதம், வாய்ச் சண்டை, கோபதாபங்களுக்கிடையில் இனந் தெரியாத செலவுகளாக எழுதியவை எவ்வளவோ! அதுமட்டுமா? செலவு எழுதாமலே விட்டுப் போனது எவ்வளவோ?

"இப்படி வீட்டுக் கணக்கை எழுதுவதால் யாருக்கு என்ன பிரயோசனம்?" என்று சில சமயங்களில் தோன்றுகிறது. எழுதின பழங் கணக்கைப் பார்த்து, இனி வரும் மாசத்துக்குத் திட்டம் போடுவதும் முடியாத காரியம்; நடக்காத காரியம்.

ஆனாலும், "நாமும் கணக்கு எழுதி வருகிறோம்" என்ற திருப்தி இருக்கத்தான் இருக்கிறது. அது மாத்திரம் அன்று. என் மனைவியும் நானும் பேசிக் கொள்ளவும், சண்டை பிடிக்கவும், ஊடல் கொள்ளவும், சமாதானம் அடையவும் இந்தக் கணக்கு எவ்வளவு உபயோகப்படுகிறது, தெரியுமா? இது இல்லாவிட்டால் இந்த வாழ்க்கை ரெயில் தண்டவாளம் போலவும், சிமிட்டுக் கட்டடம் போலவும், கோழிமுட்டை போலவும் ஒரே மாதிரி ஏற்ற இறக்கம் இல்லாமல் சப்பென்றல்லவா போய்விடும்?

## எங்கள் ரேடியோ

எங்கோ போய்க்கொண்டிருந்தேன். எதிரே வந்த அன்பர் பரபரப்போடு, "யாரோ படுபாவி காந்தியைச் சுட்டுவிட்டானும்!" என்று சொல்லி விம்மினர். "ஹா! யார் சொன்னார்கள்?" என்று படபடப்புடன் கேட்டேன். "ரேடியோ அலறுகிறதே!" என்ருர். உடனே யாரிடம் ரேடியோ இருக்கிறதென்று தேடி ஓடினேன்; ஓடினேன் என்று சொன்னது வேகத்தைக் குறிக்கச் சொல்லவில்லை. உண்மையாகவே ஓடினேன். ஒரு ஹோட்டலுக்குச் சென்றேன். அங்கே ரேடியோவின் அடியில் நூறு இரு நூறு பேர்கள் கூடியிருந்தனர். சில நேரம் கழித்து, ஜவா ஹர்லால் நேரு துக்கம் குமுறும் குரலுடன், "ஜோதி அணைந்தது!" என்று தொடங்கினர். மூச்சுக்கூட விடாத படி எல்லோரும் அதைக் கேட்டோம். மேற்கொண்டு மற்றவர்கள் பேசியதையும் கேட்டோம்.

மறுநாள் வேறு ஓர் அன்பருடைய வீட்டில் ரேடியோ வின் அடியில் சோறுகூடச் சாப்பிடாமல், டில்லியில் காந்தி யின் திருவுடலத்துக்கருகே நிகழும் நிகழ்ச்சிகளைக் கேட்டுக்கொண்டே இருந்தேன். அப்போதுதான், 'நம்மிட மும் ரேடியோ இருந்தால் வீட்டில் இருந்தபடியே எல்லா நிகழ்ச்சிகளையும் கேட்கலாமே!' என்ற எண்ணம் என் மனத்தில் அழுத்தமாகப் பதிந்தது. அதற்கு முன் ரேடியோ வாங்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தாலும் இப்போது அது மிகவும் அவசியம் என்று தோன்றியது.

நான் ரேடியோவில் எப்போதாவது பேசினல் என் வீட்டில் உள்ளவர்கள் அந்தப் பேச்சைக் கேட்க வேறு

யார் வீட்டுக்காவது போய் வந்தார்கள். சிறப்பாகப் பாட்டுக் கச்சேரி ஏதாவது ரேடியோவில் நடந்தாலும் இருந்தபடியே இருந்து கேட்க முடியாது; தெரிந்தவர்கள் வீட்டுக்குத்தான் போகவேண்டும். இத்தகைய சமயங்களில், நாமும் ரேடியோ வாங்க வேண்டும் என்ற நினைவு தோன்றியதுண்டு. ஆனால் அது அவ்வளவு பலமாக இல்லை. சில சமயங்களில் என்னிடம் மரியாதை காட்டும் நண்பர்கள் சிலர், "நான் வருகிற வியாழக்கிழமை ரேடியோவில் பேசப் போகிறேன். நீங்கள் கேளுங்கள்" என்று சொல்வார்கள். அவர்களுக்கு என்னிடம் ரேடியோ ஸெட் இருப்பதாக நம்பிக்கை. அவர்களிடம், "என்னிடம் ரேடியோ இல்லை; அதனால் உங்கள் பேச்சைக் கேட்க முடியாது" என்று சொல்லலாமா? அது என்னுடைய கௌரவத்தைக் குறைத்துவிடாதா? "ஆகட்டும்" என்று மதிப்பாகச் சொல்லிவிடுவேன். மறுபடியும் அவரைக் காணும்போது, "என்ன, கேட்டீர்களா?" என்று அவர் கேட்டால், "அடடா! மறந்துபோய்விட்டேனே! அன்று மாலை எங்கோ கூட்டத்திற்குப் பேசப் போய்விட்டேன்" என்று சொல்வேன். பாவம்! நான் அவர் பேச்சைக் கேட்டு, இரண்டு வார்த்தைகள் புகழாகச் சொல்வேன் என்று எதிர்பார்த்தே அவ்வாறு கேட்பார். நான் கேட்கவில்லை என்று தெரிந்ததும் அவர் முகத்தைப் பார்க்க வேண்டுமே! எப்படிப்பட்ட சொற்பொழிவாளராக இருந்தாலும் பிறருடைய பாராட்டும் மதிப்பும் இல்லாவிட்டால் ஊக்கம் கொள்வதில்லை. அப்படி இருக்கும்போது என் நண்பர் என்னிடம் மதிப்புரையை எதிர்பார்த்தது தவறு அல்லவே! 'இப்படி நண்பர்களிடம் பொய் சொல்ல வேண்டிய அவசியம் இல்லாமல், அவர்களுடைய பேச்சையோ பாட்டையோ கேட்கும்படியாக நம்மிடம் ரேடியோ இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!' என்று அப்பொழுது நினைத்துக்கொள்வேன்.

இவ்வாறு படிப்படியாக, ரேடியோ வாங்கவேண்டும் என்ற விருப்பம் நினைவாகி, நினைவு உறுதியாகி, உறுதி திட்டமாகி, திட்டம் செயலாகியது. நானூற்று ஐம்பது ரூபாய் கொடுத்து ஒரு ரேடியோ ஸெட்டை வாங்கி விட்டேன்.

வாங்கின புதிதில் எனக்கு உண்டான மகிழ்ச்சிக்கு உவமை இல்லை. என்னைக் காட்டிலும் என் மனைவிக்குத் தான் எல்லையற்ற களிப்பு. உலகத்திலுள்ள சங்கீத வித்து வான்களையெல்லாம் விலைக்கு வாங்கிவிட்டதாக அவள் நினைவு. சின்ன வயசில் யாரோ வைதிகர் ஒருவரிடம் ஆறுமாசம் சில கர்நாடகக் கீர்த்தனைகளை அவள் சொல்லிக் கொண்டாள். என் கல்யாணத்துக்கு முன்பு அந்தப் பாட்டுக்களைப் பாடிக் கொண்டிருப்பது வழக்கமாம்; அத ஞல் அவள் தன்னை ஒரு சங்கீத ரஸிகை என்று நினைத்துக் கொண்டிருக்கிருள். எனக்குச் சங்கீதத்தை அநுபவிக்கும் விஷயத்தில் ருசி பார்த்து அநுபவிக்கத் தெரியாது. நன்ருக இருக்கிறது, இல்லை என்று ஒரு விதமாகச் சொல்வேன்.

ரேடியோ வந்தபிறகு என் மனைவி சதா அதைத் திருகிக்கொண்டே இருப்பாள். நானும் ராத்திரி காலங் களில் திருகிப் பார்ப்பேன். கர் புர் சத்தங்கள், குகூகூகூ குக்குக் கூகூ என்ற ஒலிகள், என்ன என்னவோ புரியாத மொழிகள் ஆகியவற்றையெல்லாம் கேட்பேன். நல்ல பாட்டாகச் சென்னை ரேடியோவில் பாடிக்கொண் டிருப்பார்கள். அதை ஒரு நிமிஷந்தான் கேட்பேன். அடுத்த நிமிஷத்தில் அதை மாற்றுவேன். ருஷ்யாக்காரர்கள் வெளி யிடும் அரசாங்க ரகசியத்தை எப்படியாவது கண்டுபிடித்து விடவேண்டும் என்று ஆத்திரமுள்ளவனைப்போல அவசர அவசரமாகத் திருகிக்கொண்டே இருப்பேன். ஏதாவது ஜப்பான் பாஷையில், "காண்ட்டூங் மதுங் சங், யோஷிஞே ஜங்கஷா" என்று உளறும். அதில் அரை நிமிஷம் நிற்பேன்.

பிறகு இங்கிலீஷ் சங்கீதம்; பிறகு ஹிந்துஸ்தானிப் பாட்டு; அப்பால் இன்னதென்றே உருத்தெரியாத வாத்திய ஒலி.—இப்படி மாற்றி மாற்றி அரை அரை நிமிஷம் கேட்பேன். எதையும் ரஸிப்பதில்லை. உலக முழுவதும் ஒரு கணத்தில் சுற்றிப் பார்த்துவிட வேண்டும் என்பது போன்ற ஓர் ஆசை. ஒன்றையாவது உருப்படியாகக் கேட்கமாட்டேன்.

என் மனைவி என்ன செய்வாள் தெரியுமா? ஆங்கிலத்தில் ஏதோ முக்கியமான செய்தியைக் கேட்டுக்கொண்டிருப்பேன். அவள் வருவாள். "இந்த வறட்டுப் பேச்சு எதற்கு? நாளைக்குப் பத்திரிகையில்தான் பார்க்கப் போகிறீர்களே. டில்லி அயல் நாட்டு அஞ்சல் வைத்தாலும் பாட்டுக் கேட்கலாம்" என்று திருப்புவாள். ஏதோ கணக்காக அந்த அலை நீளத்தைத் திட்டமாகத் தெரிந்து கொண்டவளைப்போலத் திருப்புவாள். 'கர்புர் கடர் புடர்' என்ற சத்தந்தான் கேட்கும். "நேற்றுக் கேட்டேனே" என்று சொல்லிக் கொண்டே திருப்புவாள். "நான் வைக்கிறேன், பார்" என்று கையைக் கொண்டு போவேன். எனக்கு, "நிச்சயமாக இவளுக்கு அந்த இடம் தெரியாது. நமக்குத்தான் அது தட்டுப்படும்" என்று உறுதியான எண்ணம். அவளோ என் கையை ஒதுக்கிவிட்டுத் திருப்பிக்கொண்டே இருப்பாள். உண்மையில் எனக்கும் தெரியாது; அவளுக்கும் தெரியாது. கடைசியில் ஏதோ ஒரு வாத்திய ஒலி கேட்கும், "பார்த்தீர்களா? கண்டுபிடித்து விட்டேன்" என்று சொல்லி முடிப்பதற்குள் அது கர்ண கடோரமாகக் கத்தும். "என்ன பாட்டென்றுதெரிகிறதா?" என்று கேட்பேன். "இருங்களேன்; கேட்டுத்தான் பார்க்கலாம்" என்று அவள் காதை நெறித்துக்கொண்டு கேட்பாள். அது பாட்டாகவா இருக்கும்? தட்டுமுட்டுச் சாமான்களை உருட்டுவது போல இருக்கும்; சில சமயங்களில் யாரோ அழுவது போல இருக்கும். "இந்தக்

கண்ணராவி போதுமே!" என்று நான் சொன்னால், "இன்னும் கொஞ்சம் பார்க்கலாம்" என்று இருப்பாள். கடைசியில் அவளுக்கே சலிப்புத் தட்டிவிடும். "பேசாமல் இந்த ஊர்ப் பாட்டையே கேட்கலாம்" என்று திருப்புவாள். அப்போது, "ஆல் இண்டியா ரேடியோ! மதராஸ். இத்துடன் இன்றைய நிகழ்ச்சி முடிவுறும்" என்பது காதில் விழும்.

இப்படிச் சில மாதங்கள் ரேடியோ எங்கள் கையில் படாத பாடு பட்டது. சில நாட்களில் பொறுமையாக அரை மணி நேரம் ஒரே நிகழ்ச்சியைக் கேட்குமளவுக்கு நாங்கள் நிதானத்துக்கு வந்தோம். சினிமாப் பாட்டென்றால் அவள் ஒன்றை விடுவதில்லை. பேச்சோ, செய்தியோ அவள் காதில் விழக்கூடாது. சங்கீதம் கொஞ்சம் கேட்பாள். நாடகம் என்றால் இரண்டு பேரும் கேட்கிறதுண்டு. இந்த ஆசையெல்லாம் ஆறே மாதங்கள். பிறகு—?

ரேடியோவில் காலை நேரங்களிலும் மாலை நேரங்களிலுந்தான் நிகழ்ச்சிகள் அதிகம். நல்ல நிகழ்ச்சிகளும் அப்போதுதான் நடக்கின்றன. எனக்குக் காலையும் மாலையுந்தான் வீட்டில் வேலை செய்யும் நேரங்கள். இரவு ஏதாவது சுவாரசியமாக ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருப்பேன். "இன்றைக்கு ரேடியோவில் தாள வாத்தியக் கச்சேரி; நீங்கள் கேட்கவில்லையா?" என்று என் மனைவி கேட்பாள். எனக்குத் தாள வாத்தியக் கச்சேரியென்றால் கொஞ்சம் பிரியந்தான். ஆனால் அவள் கேட்டது கிண்டல். "அப்படியா! வை, கேட்கலாம்" என்றால் அவள் ரேடியோவை வைப்பாள். "இப்போது குலேரப்ஜான் பாதுஷா ராகத்தில் பாடுவாள்" என்று அறிவிப்பு வரும். தொடர்ந்து சினிமாச் சங்கீதம் நடைபெறும். அவள் உற்சாகமாகக் கேட்பாள். சுவாரசியமாகப் புத்தகம் படித்துக் கொண்டிருந்தேனல்லவா? அதற்கு வந்தது ஆபத்து. சதா போட்ட கிராமபோன் தட்டுகளையே

போட்டுப் போட்டுக் காதை மழுங்க வைப்பதில் ரேடியோக்காரர்கள் வல்லவர்கள். அவற்றை எப்படித்தான் திருப்பித் திருப்பி மக்கள் கேட்கிறார்களோ, தெரியவில்லை. "தினந்தோறும் அரிசிச் சோற்றையே சாப்பிடுகிறீரே! உமக்கு அதில் சலிப்பில்லாமல் இருக்கிறதே! ஏன்?" என்று அவர்கள் கேட்டால் எனக்குச் சமாதானம் சொல்லத் தெரியாதுதான். ஆனாலும் ரேடியோவில் அந்தப் பாட்டு வரும்போது பேசாமல் அந்தப் பெட்டியை உடைத்து விடலாமோ என்று ஆத்திரங்கூட வருகிறது. அவள் என்ன சொல்கிறாள் தெரியுமோ? "இந்தச் செய்தி கிய்தி யெல்லாம் எதற்குப் போட்டுப் பொழுதை வீணடிக்கிறார்கள்? அதைக் கேட்கும்போது இதை உடைத்து விடலாமா என்று கோபம் வருகிறது!" என்பது அவளுடைய நேர்மையான அபிப்பிராயம்.

'அவளுக்குப் பொழுது போகவில்லை; அதனால் சகித்துக்கொண்டு ரேடியோக் கேட்கிறாள்' என்று முன்னால் நினைத்தேன். கடைசியில் அவளுக்குக் கூடச் சலித்து விட்டது.

"இன்று யார் கச்சேரி? நீ கேட்கவில்லையா?"

"யார் கச்சேரியானால் என்ன? எல்லாம் கேட்டுக் கேட்டுச் சலித்துவிட்டது. எனக்குக் கைக்காரியம் இருக்கிறது" என்று போய்விடுவாள்.

ஆடிக்கு ஒரு முறை அமாவாசைக்கு ஒரு முறை யாராவது திருப்புகழ் பாடினால் சிறிது நேரம் கேட்கிறோம். "ஏதோ ரேடியோ ஸெட்டை வாங்கி விட்டோம். இருந்து விட்டுப் போகிறது" என்றுதான் வைத்திருக்கிறேன்.

எப்போதாவது ரேடியோவில் நான் பேசும்போது அந்தப் பேச்சை வீட்டில் உள்ளவர்கள் கேட்க இது உதவுகிறது. சின்னக் குழந்தையிடம் அவள், "அப்பா பேசு-

கிருர்" என்று சொல்வதற்கும், "அம்மா! அப்பா, அப்பா, ஏடியோ" என்று அவன் கொஞ்சிக் குழறிச் சொல்வதற்கும் ரேடியோ உதவியாக இருக்கிறது. என் பேச்சைக் கேட்கிறதைவிட அந்தக் குழந்தையின் பேச்சைக் கேட்பதற்காகவே ரேடியோவை வைக்கிருள் அவள். என் பேச்சைத்தான் தினந்தோறும் கேட்டுக் கேட்டு அவள் காது செவிடுபட்டிருக்கிறதே!

'ரேடியோவை விற்றுவிடுகிறதுதானே?' என்று கேட்கலாம்.

என்றைக்கோ ஒரு நாள் நடக்கும் கல்யாணத்துக்காக, சோறு வடிக்கும் பெரிய தவலையை வாங்கி வைத்திருக்கிருேம். என்றைக்கோ உபயோகமாகும் பன்னீர்ச் செம்பை வைத்திருக்கிருேம். அவற்றைத் தினமும் உபயோகிப்பதில்லை என்பதற்காக விற்று விடுகிருேம்?

அது மட்டுமன்று; "எங்கள் வீட்டிலும் ரேடியோ இருக்கிறது" என்று சொல்லிக் கொள்வதற்காவது அதை வைத்திருக்க வேண்டாமா?

# சங்கநூற் காட்சிகள்

கி. வா. ஜகந்நாதன்

*

தமிழ் நாட்டின் பழமையையும், தொன்று தொட்டுச் சிறந்த பண்பாடும் கலைத் திறமையும் படைத்த தமிழ் மக்களின் சிறப்பையும் வெளிப்படுத்துபவை கடைச் சங்க நூல்கள். அந்த நூல்களில் ஒரு பகுதி எட்டுத்தொகை என்று வழங்கும் எட்டு நூல்கள். அவற்றில் உள்ள சுவையான சில பாடல்களைத் தேர்ந்தெடுத்து அவற்றிற்குக் கதை போன்ற விளக்கங்களை அமைத்து ஒவ்வொரு நூலுக்கு ஒவ்வொரு புத்தகமாக வெளியிட்டிருக்கிறோம்.

| | | | |
|---|---|---|---|
| ஒவ்வொன்றும் தனித்தனி விலை | 3 | 0 | 0 |
| எட்டும் சேர்த்து வாங்கினால் | 24 | 0 | 0 |

1. மனை விளக்கு (நற்றிணைக் காட்சிகள்)
2. குறிஞ்சித் தேன் (குறுந்தொகைக் காட்சிகள்)
3. தாமரைப் பொய்கை (ஐங்குறுநூற்றுக் காட்சிகள்)
4. பிடியும் களிறும் (கலித்தொகைக் காட்சிகள்)
5. இன்ப மலை (அகநானூற்றுக் காட்சிகள்)
6. அறப்போர் (புறநானூற்றுக் காட்சிகள்)
7. புது வெள்ளம் (பதிற்றுப்பத்துக் காட்சிகள்)
8. தமிழ் வையை (பரிபாடற் காட்சிகள்)


அமுத நிலையம் லிமிடெட்

தேனாம்பேட்டை : சென்னை-18

# அமுத நிலைய வெளியீடுகள்

கி. வா. ஜ. எழுதியவை

★

| | | | | |
|---|---|---|---|---|
| பெரும் பெயர் முருகன் : | (சமய நூல்) | 3 | 0 | 0 |
| கன்னித் தமிழ் : | (கட்டுரைகள்) | 2 | 12 | 0 |
| ,, கிளேஸ் பதிப்பு | | 4 | 0 | 0 |
| பேசாத பேச்சு : | (இரண்டாம் பதிப்பு) | 1 | 8 | 0 |
| ஆலைக் கரும்பு : | ,, | 1 | 6 | 0 |
| கதிர்காம யாத்திரை : | ,, | 1 | 0 | 0 |
| வளைச் செட்டி : | (சிறு கதைகள்) | 2 | 0 | 0 |
| பூக்காரி : | ,, | 1 | 12 | 0 |
| கலைச் செல்வி : | ,, | 1 | 4 | 0 |
| பவள மல்லிகை : | ,, | 1 | 4 | 0 |
| குழந்தை உலகம் : | (நாடோடி இலக்கியம்) | 2 | 0 | 0 |
| மச்சு வீடு : | ,, | 1 | 8 | 0 |
| கஞ்சியிலும் இன்பம் : | ,, | 1 | 0 | 0 |
| தமிழின் வெற்றி : | (வரலாறு) | 1 | 4 | 0 |
| கரிகால் வளவன் : | ,, | 1 | 4 | 0 |
| எல்லாம் தமிழ் : | ,, | 1 | 2 | 0 |
| கோவூர் கிழார் : | ,, | 1 | 2 | 0 |
| பாரிவேள் : | ,, | 1 | 2 | 0 |
| மூன்று தலைமுறை | (குறுநாவல்) | 0 | 8 | 0 |